# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி : 01 ஜூலை 2005 பார்வை : 10 விலை : ரூபா 25.00



உள்ளே....

T. Meganokan


சபா. ஜெயராசா ■ மொழிக்கலைகளும் கற்பித்தல் அணுகுமுறைகளும்

கா. சிவத்தம்பி ■ தமிழ்மொழி வழி கல்வி கற்கும் மாணவர்கள் தமிழ் மொழி இலக்கியம் சாராப் பாடங்களைப் பயில்வதற்குப் பெற்றிருக்க வேண்டிய அடிப்படை மொழித் தேர்ச்சியும், அறிவும் இதற்கான கற்பித்தல் முறைமை பற்றிய குறிப்பு

க. தியாகராசா ■ சுவாமி விபுலாநந்தரின் கல்விச் சிந்தனைகள்

தை. தனராஜ் ■ அழுத்தமும் ஆசிரியர் செயலாற்றுகையும்

சோ. சந்திரசேகரம் ■ கல்வியில் சான்றிதழ் நோயும் மற்றும் புதிய குறைபாடுகளும்

# POOBALASINGHAM BOOK DEPOT

IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS,
STATIONERS AND NEWS AGENTS.

**Head Office :**
340, 202 Sea Street,
Colombo 11, Sri Lanka.
Tel : 2422321
Fax : 2337313
E-mail : pbdho@sltnet.lk

**Branches :**
309A-2/3, Galle Road,
Colombo 06, Sri Lanka.
Tel : 2504266
Fax : 4-515775

4A, Hospital Road,
Bus Stand, Jaffna.

# பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி,
இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்

தலைமை :
இல. 340,202 செட்டியார் தெரு,
கொழும்பு 11, இலங்கை.
தொ. பே. : 2422321
தொ. நகல் : 2337313
மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

கிளை :
இல. 309 A-2/3, காலி வீதி,
கொழும்பு 06, இலங்கை.
தொ. பே. : 2504266
தொ. நகல் : 4-515775

இல. 4 A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

# அகவிழி

மாத இதழ்

ஆசிரியர்:
தெ.மதுசூதனன்

ஆசிரியர் குழு :
சாந்தி சச்சிதானந்தம்
ச. பாஸ்கரன்
காசுபதி நடராஜா

நிர்வாக ஆசிரியர்:
மனோ இராஜசிங்கம்

ஆலோசகர் குழு :
பேரா.கா.சிவத்தம்பி
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சபா.ஜெயராசா
(கல்வித்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சோ.சந்திரசேகரன்
(கல்விப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ஹுசைன் இஸ்மாயில்
(துணைவேந்தர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)
மா.சின்னத்தம்பி
(தலைவர், கல்வித்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ப.கா.பக்கீர் ஜஃபார்
(கல்விப்பீடம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
கலாநிதி மா.கருணாநிதி
(கல்விப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)
மா.செல்வராஜா
(கிழக்குப் பல்கலைக்கழகம்)
தை.தனராஜ்
(நிபுணத்துவ ஆலோசகர்,தொலைக்கல்வி
நவீனமாக்கற் செயற்றிட்டம்
(DEMP/DEPP), கல்வி அமைச்சு)
உ.நவரட்ணம்
(பணிப்பாளர், தமிழ்த்துறை,
தேசிய கல்வி நிறுவகம்)

அச்சு :
ரெக்னோ பிரின்ட்,கொழும்பு - 06
தொலைபேசி: 0777-301920

வெளியீடு மற்றும் தொடர்புகட்கு :
AHAVILI
49/1, Medawelikada Road, Rajagiriya.
Tel : 011-2869257
E-mail : ahaviliguru@yahoo.co.uk




இன்று ஆசிரியர் கல்வி விருத்தியும் ஆசிரியர் வாண்மை விருத்தியும் உலகளாவிய தேவையாக கல்வியில் முன்வைக்கப்படுகிறது. இவ்வாறான உலகளாவிய போக்கு இலங்கையிலும் காணப்படுவது தவிர்க்க முடியாது. குறிப்பாக வடகிழக்கு மற்றும் மலையகம் சார்ந்த பிரதேசங்களில் இதன் போக்கு அவசியமாக உள்ளது.

ஆசிரியர்கள் தமது அறிவினையும் திறனையும் விருத்தி செய்து கொண்டு பாடசாலைகளிலும் சமூகத்திலும் காணப்படுகின்ற மாணவர்களது வேறுபட்ட தேவைகளைச் சந்திப்பதற்கு உதவவேண்டும்.

இதற்காக பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் "ஆசிரியர் சமூகம்" இத்தேவைகளுக்கான ஏதுநிலை மனோபாவத்தை அடையவில்லை.

இதனால் ஆசிரியர் கல்வி விருத்திக்காக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் நடைமுறைகள் போதியளவு மாற்றத்தை உருவாக்கும் காரணிகளாகத் தொழிற்படவில்லை. இவை பல நேரங்களில் சுமைகளாகவே கருதப்படுகின்றன. மாற்றத்தை விளைவிக்கும், சமூகப் பொறுப்பை உணர்த்தும், தன்னியல்பான தேர்ச்சி மிகு பயனாளிகளாக மாறும் சந்தர்ப்பங்களை வலியுறுத்தும் "சூழலமைவு" "மனப்பான்மை" எதனையும் ஆசிரியர்களிடம் உருவாக்கவில்லை.

ஆசிரியர்கள் தொடர்ச்சியான கற்றலுக்கு இட்டுச் செல்லப்படாமல் "செக்குமாட்டுத்தனமான" கற்றல் செயற்பாடு தான் மிஞ்சியுள்ளது. இத்தகைய ஆசிரியர் குழாத்தை வைத்துக் கொண்டு தான் "தொடருறு கல்வி" ஆசிரியர்களுக்கு தேவையென்று பேசப்படுகின்றது. நம்மிடையே வாழ்க்கை நீடித்த கல்வியானது மனித வளத்தினை தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்கின்ற ஒரு கல்வியாகும் என்ற புரிதல் செயல்வாதமாக எம்மிடையே உருப்பெற வில்லை.

பொதுவாக நடைமுறைப்பாங்கான பண்பு மாற்றத்துக்கு வித்திடும் அனைத்துக்கூறுகளையும் கொண்டியங்கும் "ஆசிரிய வாண்மை விருத்தி"க்கான ஏதுநிலை, அறிவுத் தளம் இன்னும் உருவாக்கப்படவில்லை. இருப்பினும் கட்டுரைகளில் விரிவுரைகளில் "வாண்மை விருத்தி" உண்டு. ஆனால் இது ஆசிரியர்களிடம் காணாமல் போய்விட்டது. இதனால் "ஆசிரியர் கல்வி" விருத்தி பெறவில்லை. இதனால் எமது தேவைகளைச் சந்திப்பதற்குரிய அறிவையும் திறனையும் வழங்க முடியாதவர்களாக ஆசிரியர்கள் உள்ளார்கள்.

அப்படியானால் நாம் உடனடியாகச் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம். அவை குறித்து சிந்திப்பதும் செயற்படுவதும் தான் தற்போது நம்முன் உள்ள ஒரே பணி. ❑

# மொழிக்கலைகளும் கற்பித்தல் அணுகுமுறைகளும்

கல்வியியலிலே பயன்படுத்தப்படும் ஒரு தொடர் "மொழிக்கலைகள்" (Language Arts) என்பதாகும். கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியவை மொழிக் கலைகளில் இடம்பெறும். இவை பொருத்தமான இரண்டு இணைப்புக்களாக்கப்பட்டன. கேட்டல், பேசுதல் ஆகியவை ஓர் இணைப்பாகவும், வாசித்தல் - எழுதுதல் ஆகியவை மற்றைய இணைப்பாகவும் அமைகின்றன. மொழிக்கலைகள் ஒன்றுடன் மற்றையது இணைந்து நிற்கின்ற வேளை மேற்கூறிய இணைப்புக்கள் மேலும் கூர்ப்படைந்து நிற்கின்றன.

மொழிக் கலைகள் கற்பித்தல் வரலாற்றினை நோக்கும் பொழுது, நெருட்டுருச்செய்யும் முறைமையே பண்டைக் காலக் கற்பித்தலில் மேலோங்கியிருந்தது. அச்சுக்கலை வளர்ச்சியோடு வகுப்புப்படிநிலை வளர்ச்சிக்கேற்றவாறு மொழிப்பாட நூல்கள் பயன்படுத்தப்படலாயின. மொழிக்கலைகள் கற்பித்தலில் அண்மைக்காலமாக உளவியல் தழுவிய பல்வேறு நுட்பவியல்கள் பயன்படுத்தப்படுகின்றன. தனியாள்மயப்படுத்தல் (Individualisation) மற்றும் ஒன்றிணைத்தல் (Integration) ஆகியவை முன்னெடுக்கப்படுகின்றன. மாணவர் தமது சுயவேகத்தில் மொழி கற்றலை தனியாள்மயப்படுத்தல் என்ற எண்ணக்கரு வெளிப்படுத்துகின்றது. மொழிக்கலைகளை கதைகள், கவிதைகள் முதலியவற்றுடன் ஒன்றிணைத்துக் கற்கச் செய்தல் ஒன்றிணைத்தல் எனப்படும்.

> *மொழிக்கலைகள் கற்பித்தலில் அண்மைக்காலமாக உளவியல் தழுவிய பல்வேறு நுட்பவியல்கள் பயன்படுத்தப்படுகின்றன. தனியார் மயப்படுத்தல் மற்றும் ஒன்றிணைத்தல் ஆகியவை முன்னெடுக்கப்படுகின்றன. மாணவர் தமது சுயவேகத்தில் மொழி கற்றலை தனியாள்மயப்படுத்தல் என்ற எண்ணக்கரு வெளிப்படுத்துகின்றது. மொழிக்கலைகளை கதைகள், கவிதைகள் முதலிய வற்றுடன் ஒன்றிணைத்துக் கற்கச் செய்தல் ஒன்றிணைத்தல் எனப்படும்.*

மாணவர் பேசும் தனியார் மொழி அல்லது பிரத்தியேக மொழியோடு (Personal Language) தொடர்புபடுத்திக் கற்பிக்கும் நுட்பவியலும் வளரலாயிற்று. முழுமொழி அணுகுமுறையும் (Whole Language approach) மொழிக்கலைகள் கற்பித்தலில் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தனக்குரிய மொழியை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து மொழியாற்றல்களைப் பெருக்கிக் கொள்ளல் இந்த அணுகுமுறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

முழுமொழி அணுகுமுறையில் பாடநூலில் முற்றாகத் தங்கியிருக்கும் நிலை மாற்றியமைக்கப்படுகின்றது. விளைவிலும் பார்க்க செயல்முறைக்கே முக்கியத்துவம் தரப்படுகிறது.

முழுமொழி அணுகுமுறையில் மாணவரின் தீவிர பங்குபற்றல் ஊக்குவிக்கப்படுகின்றது. பொருத்தமானதும் நடப்பியல் சார்ந்ததுமான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல் முன்னெடுக்கப்படுகின்றது. விருப்புக்குழுக்களாக மாணவர்கள் ஒருங்கமைக்கப்பட்டு கற்பிக்கப்படுகின்றனர். மாணவரே எதைக் கற்க வேண்டும் என்பதையும் எவ்வாறு கற்க வேண்டும் என்பதையும் தெரிவு செய்வர். ஆசிரியர் வளமாக்குபவராக (Facilitator)த் தொழிற்படுபவராக இருப்பார். மாணவரால் எழுதப்பட்ட விடயங்கள் கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்படும்.

முதலாம் தரத்திலே கற்கும் மாணவரது பேச்சு ஆற்றலிலும் கேட்கும் ஆற்றலே மேலோங்கியிருக்கும். ஆயினும் வளர்ந்தோரைப் போன்று பேசும் ஆற்றலும் அவர்களிடத்தே காணப்படும்.

கேட்டல் அல்லது கேள்விச் செல்வம் சிறப்பார்ந்த ஓர் அறிகைச் செயற்பாடாகும். குழந்தைக்கு இரண்டு வார வயதாக இருக்கும் பொழுதே தாயின்

பேரா. சபா. ஜெயராசா
கல்வியியல் துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

குரல் ஒலியை ஏனையவர்களது குரல் ஒலியிலிருந்து வேறுபடுத்தி அறியும் ஆற்றல் வளர்ந்து விடுகின்றது. குழந்தையின் கேட்கும் ஆற்றலை வளர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஒப்பீட்டளவிற் குறைவாகவே காணப்படுகின்றன. அதாவது, குழந்தைக் கல்வியில் வாசிப்புக்கும் எழுத்துக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவம் கேட்டலுக்குக் கொடுக்கப்படுவதில்லை. கேட்டல் என்ற கற்றற் செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாதுவிடினும், பொதுவான வகுப்பறைகளில் வாய்மொழித் தொடர்பாடல் மேலோங்கியிருத்தல் குறிப்பிடத்தக்கது.

கேட்டல் வாயிலாக சொற்களஞ்சிய மேம்பாடு நிகழ்கின்றது. வசனங்களை ஆக்கும் திறன் வளர்ச்சியடைகின்றது. வெளியீட்டுத்திறன்கள் படிமலர்ச்சி கொள்கின்றன. சரியான ஒலிப்புக்களுடனும் உச்சரிப்புகளுடனும் மொழி உள்ளீடு சிறுவர்க்கு வழங்கப்படாவிடில், எழுத்துப் பிழைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

கேட்டல் என்பது புறக்காரணிகளாலும் அகக்காரணிகளாலும் பாதிக்கப்படும். ஒலி மாசுபடல் நிகழ்ந்து கொண்டிருக்கும் சூழலிலே சிறாரின் கேட்டல் திறன் பாதிக்கப்படும். எமது சூழலில் ஒலி மாசுபடல் தொடர்பான உள்ளுணர்வு வளராமையால் பொறுப்பற்ற முறையில் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படுகின்றன. அகக்காரணிகள் என்று கூறும்பொழுது ஒருவருக்குரிய அறிகை அமைப்பு, உளச்சார்பு, சொற்களஞ்சியம், மனவெழுச்சி, உடல்நிலை போன்றவை இடம்பெறும்.

வாசித்தல் சுயகற்றலோடு இணைந்த செயற்பாடாகும். தாம் சுயாதீனமாகக் கற்பவர்கள் என்ற உணர்வை அது மாணவர்களுக்கு ஏற்படுத்திவிடுகின்றது. வாசித்தல், எழுதுதல் என்ற இரு மொழித்திறன்களையும் உருவாக்குதல் "முகிழ் எழுத்தறிவு" (Emergent literacy) எனப்படும். அச்சுஊடாக உலகை விளங்கிக்கொள்வதற்கு இது வழியமைக்கின்றது. சிறார்கள் எழுதுதலையும் வாசித்தலையும் பலநிலைகளிலே பாராட்டி ஊக்குவிக்கும் பொழுது முகிழ் எழுத்தறிவு வளர்ச்சியடையும். இன்றைய எமது சிறார்கள் "வாசிப்பு அல்லா வாசிப்பு" என்ற செயற்பாட்டிலும் ஈடுபடுகின்றார்கள். உதாரணமாக "ராணி" சவர்க்காரத்தைக் காட்டி இது என்ன என்று கேட்டால் ராணி சவர்க்காரம் என்று சொல்வார்கள். ஆனால் அதில் இருக்கும் எழுத்துக்களை அவர்களால் வாசிக்க முடியாதிருக்கும்.

சிறாரின் மொழி வளர்ச்சியில் அகமைய (Egocentric) இயல்பும், சமூகப்படல் (Socialisation) இயல்பும் பங்கெடுக்கின்றது. தாமாக குரல் எழுப்பியும் பேசியும் ஆனந்தித்தல் அகமைய இயல்பின் வெளிப்பாடாகும். தமது சுய இன்பத்தோடும் சுயதிருப்தியோடும் பயன்படுத்துதல் அகமைய வெளிப்பாடு. பிறருடன் மேற்கொள்ளும் தொடர்பாடல் வழியாக மொழியாற்றலை மேம்படுத்துதல் சமூகமயப்படல் இயல்பாகும்.

> கேட்டல் அல்லது கேள்விச் செல்வம் சிறப்பார்ந்த ஓர் அறிகைச் செயற்பாடாகும். குழந்தைக்கு இரண்டு வார வயதாக இருக்கும் பொழுதே தாயின் குரல் ஒலியை ஏனையவர்களது குரல் ஒலியிலிருந்து வேறுபடுத்தி அறியும் ஆற்றல் வளர்ந்து விடுகின்றது. குழந்தையின் கேட்கும் ஆற்றலை வளர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஒப்பீட்டளவிற் குறைவாகவே காணப்படுகின்றன. அதாவது, குழந்தைக் கல்வியில் வாசிப்புக்கும் எழுத்துக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவம் கேட்டலுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

மொழியறிவு தொடர்பான கருத்துக்களில் தகவலிடுகை (Information Processing) அண்மைக்காலமாக முக்கியத்துவம் பெற்றுவருகின்றது. மனித மூளையும் நினைவுகளும் செயலூக்கமுள்ளவையாயும், சிக்கலானவற்றை ஒழுங்கமைக்கும் திறனுள்ளவையாயும், தகவல்களைப் பொருத்தமான முறையிலே நிரற்படுத்தி வைப்பவையாயும் காணப்படுகின்றன. (Bell Gredler, 1986, P. 160) சந்திக்கும் செயல் முறையானது, தகவல்களைத் திரட்டுதல், தெரிவு செய்தல், புலக்காட்சிகொள்ளல், ஒழுங்கமைத்தல், நிரற்கோடாக்கம் செய்தல், (Encoding) களஞ்சியப்படுத்தல், மீட்டெடுத்தல் முதலாம் செயற்பாடுகளை உள்ளடக்கியது. இந்தச் செயற்பாடுகள் சிக்கலானவையாயும், பன்முகத்தன்மை கொண்டவையாயும் அமைந்துள்ளன. மனத்திலே தகவல்கள் ஒழுங்கமைந்த வலைப்பின்னலாக்கம் செய்யப்பட்ட அமைப்பு "சீமா" (Schema) எனப்படும். இதன் அமைப்பை அடியொற்றியே மொழித்தகவல்கள் உள்வாங்கப்படுகின்றன.

சிறார்கள் தகவல்களை எவ்வாறு நிரற்படுத்தி மனத்திலே அமைப்பாக்கம் செய்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளல் அதிக முக்கியத்துவம் பெறும் ஒரு செயற்பாடாக அமைந்துள்ளது. தகவல்களை வரன்முறையாக ஒழுங்கமைக்கும் ஆற்றல்களைச் சிறுவர்களிடத்து உரிய முறையிலே கட்டியெழுப்ப வேண்டும்.

மொழிக்கலைகள் கற்பித்தலை பன்முக நுண்மதிகளுடன் (Multiple Intelligence) தொடர்புபடுத்தி ஆராயப்படுதலும் உண்டு. நுண்மதி என்பது தனித்துக் காரணங் காணுதலுடன் மட்டும் தொடர்புடையதன்று என கோவார்ட் காட்னர் (Howard Gardner) விளக்கினார். ஏழுவிதமான நுண்மதித் திறன்கள் அவரால் இனங்காணப்பட்டன. அவையாவன:-

1) மொழி சார்ந்த நுண்மதி
2) இசை சார்ந்த நுண்மதி
3) அளவை மற்றும் கணிதவியல் நுண்மதி
4) வெளி (Spatial) சார்ந்த நுண்மதி
5) உடல் மற்றும் உடலியக்க நுண்மதி

6) தன்னுணர்வு அறியும் நுண்மதி

7) ஆளிடைத் தொடர்பாடல் நுண்மதி

எமது ஆய்வுகள் இந்த நுண்மதிப் பரிமாணங்களை மேலும் விரிவாக்கலாம் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. மேற்குறிப்பிட்ட நுண்மதிப் பரிமாணங்களை அடியொற்றி மொழிக் கலைகளைக் கற்பித்தல் பயன்மிகு விளைவுகளை ஏற்படுத்தவல்லவையாக அமையும்.

மேற்கூறியவையைக் கருத்திற் கொண்டு எத்தகைய கற்பித்தல் மாதிரிகைகளை ஒழுங்கமைக்கலாம் என்பதை அடுத்ததாக நோக்கலாம். இந்த வகையில் குறிப்பிடத்தக்கது,

1. முன்னேற்றகரமான ஒழுங்கமைப்பாக்கிகள் (Advance Organisers) என்பதாகும். இவ்வகையான கற்பித்தல் அமைப்பை ஒசுபெல் (Ausubel) அறிமுகம் செய்தார். அதாவது, அறிவை மாணவர்கள் தமது மூளையிலே எவ்வாறு ஒழுங்கமைப்பாக்கம் செய்கிறார்களோ, அந்த அமைப்பாக்கத்துக்கு சமாந்தரமான முறையில் ஆசிரியர் அறிவை ஒழுங்கமைத்துக் கொடுத்தல் வேண்டும். மாணவரிடத்து ஏற்கனவே இருக்கும் அறிவுடன் புதிய அறிவை ஒன்றிணைக்கும் வகையிலும் தொடர்புபடுத்தும் வகையிலும் புதிய அறிவை முன்னெடுத்தல் வேண்டும். ஒரு மொழிப் பாடத்தைக் கற்பிப்பதற்கு முன்னதாக அப்பாடத்தில் இடம் பெறும் மாணவர் அறிந்திராத புதிய எண்ணக்கருக்களை விளக்கியபின் பாடத்தைச் சமர்ப்பித்தால் மாணவர்களால் இலகுவில் கற்றுக் கொள்ளப்பட முடியும்.

2. மொழிக்கலைகளைக் கற்பித்தலிலே பயன்படுத்தக்கூடிய பிறிதோர் உபாயம் பணிப்புரைசாரா (Nondirective) கற்பித்தலாகும். இது கட்டுமானவாக்கம் (Constructivism) என்றும் கூறப்படும். மாணவர் சுயமாக நெறிப்பட்டு தாமாக ஊக்கங் கொண்டு நம்பிக்கை மேலோங்கி கற்றலை இது குறிப்பிடுகின்றது. தூண்டல் அளிக்கக்கூடிய வகுப்பறைச் சூழலை உருவாக்குதலே இங்கு ஆசிரியரின் உன்னத கடமையாகின்றது. ஆசிரியர் ஆதிக்கம் செலுத்துபவராக இருக்கும் நிலையை விடுத்து வளஞ் செய்பவராக மாறல் வேண்டும். மாணவரின் எல்லா விதமான துலங்கல்களையும் ஆசிரியர் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். மாணவரை மத்தியாகக் கொண்டு குழுநிலைக் கலந்துரையாடல்களை ஒழுங்கமைத்துத் தருதல் ஆசிரியரின் கடமையாகின்றது. விரிசிந்தனை இங்கு ஊக்குவிக்கப்படும். மாணவர் நிலைப்பட்ட சுயமதிப்பீடுகளும் உருவாக்கப்படும்.

**மொழியறிவு தொடர்பான கருத்துக்களில் தகவலிடுகை (Information Processing) அண்மைக் காலமாக முக்கியத்துவம் பெற்று வருகின்றது. மனித மூளையும் நினைவுகளும் செயலூக்கமுள்ளவையாயும், சிக்கலானவற்றை ஒழுங்கமைக்கும் திறனுள்ளவையாயும், தகவல்களைப் பொருத்தமான முறையிலே நிரற்படுத்தி வைப்பவையாயும் காணப்படுகின்றன. (Bell Gredler, 1986, P. 160) சந்திக்கும் செயல் முறையானது, தகவல்களைத் திரட்டுதல், தெரிவு செய்தல், புலக்காட்சிகொள்ளல், ஒழுங்கமைத்தல், நிரற்கோடாக்கம் செய்தல், (Encoding) களஞ்சியப் படுத்தல், மீட்டெடுத்தல் முதலாம் செயற்பாடுகளை உள்ளடக்கியது.**

3. மொழிக்கலையைக் கற்பிக்கும் நுட்பங்களுள் கூட்டுறவுக் கற்றலும் (Cooperative Learning) ஒரு சிறப்பார்ந்த முறையாகக் கருதப்படுகின்றது. கூட்டுறவு நிலை, போட்டி நிலை என்றவாறு போதனா இலக்குகள் வேறுபட்டு நிற்கின்றன. குழுவின் வெற்றியிலே தனியாள் வெற்றி தங்கியிருத்தல் கூட்டுறவுக் கற்றலின் அடிப்படைக் கருத்தாகும். அவ்வாறான ஒரு குழு இடைவினை வாயிலாகக் கற்றலை ஒழுங்கமைத்தல் ஆசிரியரின் பணியாகின்றது. மாணவர்களை அவர்களின் விருப்பங்களை உள்ளடக்கிய சிறு குழுக்களாக அமைத்து செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும். மொழிவாயிலாகப் புதிய தகவல்களைப் பரிமாற்றம் செய்வதற்கும், எண்ணக்கருக்களுக்குரிய தெளிவான விளக்கங்களைப் பெறுவதற்கும், மொழி வாயிலான விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் கூட்டுறவுக் கற்றல் துணை செய்யும். மாணவர்கள் எழுத்துப் பிழைகள் இன்றி எழுதுவதற்கும் தெளிவான உச்சரிப்புத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் கதை சொல்லும் ஆற்றலை மேம்படுத்துவதற்கும், நாடகங்களை உருவாக்குவதற்கும் இந்த உபாயம் பெரிதும் துணைநிற்கும்.

4. இடைநிலைப் பாடசாலைகளில் மொழிக்கலைகளை வளர்ப்பதற்கு "இலக்கிய வட்டங்கள்" என்ற அமைப்பு துணையாக அமைகின்றது. இலக்கியங்கள் பற்றிய அறிவை வளர்க்கவும், தாம் வாசித்தவற்றைப் பகிர்ந்து கொள்ளவும், இலக்கிய ஆக்கங்கள் தொடர்பாக தமது வகுப்பில் உள்ளோரது கருத்துக்களை பெற்றுக்கொள்ளவும், இலக்கிய ஆக்கங்களிலே ஒரு மாணவர் தம்மை ஈடுபடுத்திக்கொள்வதற்கும், தமது கலைப்புலக் காட்சியினைத் தாமே மேம்படுத்திக் கொள்வதற்கும், சமூக நோக்கையும் அழகியல் திறனையும் ஒன்றிணைக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கும், நூலியத்துக்கு (Text) வெவ்வேறு பொருளைக் கொடுக்கும் திறனை வளமாக்கிக் கொள்வதற்கும் இலக்கிய வட்டங்கள் துணை செய்யும்.

வகுப்பறையிலே பயன்படுத்தப்படும் இலக்கிய வட்ட அணுகுமுறையில் பின்வரும் வகிபங்குகளை உருவாக்கி தொழிற்பாடுகளை வினைத்திறன்படுத்தலாம்.

1. கலந்துரையாடலுக்கு தலைமை தாங்குபவர்

2. பாத்திரத் தலைவர் - இலக்கியப் பாத்திரங்களின் இயல்புகளை விளக்கும் பொறுப்பு இவருக்கு உரியது.
3. சந்தர்ப்ப விளக்குநர் - காட்சிகளையும், சந்தர்ப்பங்களையும் விபரிக்கும் பொறுப்பு இவருடையது.
4. பந்தித்தலைவர் - சிறப்பார்ந்த பந்திகளையும், பகுதிகளையும் இனங்கண்டு வெளிப்படுத்தும் பொறுப்பு இவருடையது.
5. நடப்பியல் வெளிப்படுத்துநர் - குறிப்பிட்ட இலக்கிய ஆக்கம் யதார்த்த நிலைகளுடன் எவ்வளவு தூரம் இணைந்துள்ளது அல்லது விலகியுள்ளது என்பதை வெளிப்படுத்துதல் இவருக்குரிய பணி.
6. நடைவிளக்குநர் - குறிப்பிட்ட இலக்கியத்தில் இடம் பெறும் நடைச் சிறப்பினை இனங்கண்டு வெளிப்படுத்துதல் இவருக்குரிய பொறுப்பு.

> மொழிக்கலையைக் கற்பிக்கும் நுட்பங்களுள் கூட்டுறவுக் கற்றலும் (*Cooperative Learning*) ஒரு சிறப்பார்ந்த முறையாகக் கருதப் படுகின்றது. கூட்டுறவு நிலை, போட்டி நிலை என்றவாறு போதனா இலக்குகள் வேறுபட்டு நிற்கின்றன. குழுவின் வெற்றியிலே தனியாள் வெற்றி தங்கியிருத்தல் கூட்டுறவுக் கற்றலின் அடிப்படைக் கருத்தாகும். அவ்வாறான ஒரு குழு இடைவினை வாயிலாகக் கற்றலை ஒழுங்கமைத்தல் ஆசிரியரின் பணியாகின்றது. மாணவர்களை அவர்களின் விருப்பங்களை உள்ளடக்கிய சிறு குழுக்களாக அமைத்து செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும்.

இலக்கிய வட்ட உபாயத்தின் வழியாக வினைத்திறன்மிக்க கேட்கும் ஆற்றலை வளம்படுத்துதல் முக்கியமானதாகும். கேட்கும் ஆற்றல் பின்வரும் மட்டங்களை உடையதாக இருக்கும்.

1. எல்லை நிலைக் கேட்கும் ஆற்றல் : அதிக உற்சாகமின்றி கேட்கும் ஆற்றலை இது புலப்படுத்தும்
2. இரசனைநிலைக் கேட்கும் ஆற்றல் : ஒன்றைச் சுவைத்துக் கேட்கும் ஆற்றலை இது குறிக்கும்.
3. கவனநிலைக் கேட்கும் ஆற்றல் : உன்னிப்பாகவும், கிரகித்தல் மேம்பாட்டுடனும் கேட்டலை இது புலப்படுத்தும்.
4. திறனாய்வுநிலைக் கேட்டல் : விமர்சனப்பாங்குடன் செவிமடுத்தல் இப்பிரிவில் அடங்கும்.
5. துலங்கும் கேட்டல் : விடயங்களை கிரகித்து அவற்றை அடியொற்றிய மொழி வடிவிலான வெளிப்பாடுகளைத் தருதல் துலங்கும் கேட்டலாகின்றது.

குவியப்படுத்தப்பட்ட கேட்டற் செயற்பாடுகளை வளர்த்தலில் மூன்று படிநிலைகள் காணப்படுகின்றன அவை:-

1) முற்கேட்டல் (Pre listen)

2) கேட்டல்

3) கேட்டல்நடவடிக்கையைத் தொடர்ந்து செயற்படுதல்

கேட்டலையும் அதனை அடியொற்றிய சிந்தனைகளைத் தூண்டலும் தொடர்பான செயற்பாடுகளை வளர்க்கும் நடவடிக்கைகளையும் கற்பித்தற் செயற்பாடுகள் வழியாக முன்னெடுக்க முடியும்.

மொழிக்கலையில் இலக்கணம் கற்பித்தல் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. மொழியின் அடிப்படைகளை இலக்கணம் விளக்குகின்றது. மரபு வழி இலக்கணம், அமைப்பு நிலை இலக்கணம், நிலைமாறல் இயல்புடன் உயிர்ப்பெடுக்கும் இலக்கணம் என மூவகைப்படும். மரபு வழி இலக்கணம் இவ்வாறுதான் அமைக்கப்பட வேண்டும். ஒரு வித பணிப்பு நிலையில் கறாராகக் குறிப்பிடும் நடவடிக்கையாகும். மரபுவழி இலக்கணம் முன்னுறுத்தல் (Prescriptive) பண்பைக் கொண்டது. இதிலிருந்து வேறுபட்டது அமைப்பு நிலை இலக்கணமாகும். அமைப்பு நிலை இலக்கணம் விபரிப்பு (Descriptive) பண்பைக் கொண்டது. கருத்தையும் அமைப்பையும் தனித்தனியாக ஆராய்தல் இவ்வணுகுமுறையிலே சிறப்பிடம் பெறும். அமைப்பு நிலை இலக்கணத்தில் சொற்கள் அதன் தொழிற்பாட்டில் அடிப்படையில் விளக்கப்படும். அதாவது ஒரு சொல்லின் தொழிற்பாடு குறித்த வசனத்தின் இயல்பை அடியொற்றியதாக அமையும். நிலைமாறல் இயல்புடன் உயிர்ப்பெடுக்கும் இலக்கணம் நோம் சோம்ஸ்கியின் ஆய்வுகளில் இருந்து முகிழ்ந்தெழத் தொடங்கியது. வசனத்தின் அடியமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மேற்குறித்த இலக்கண முறைமையை அவர் விளக்கினார். திட்டவட்டமான விதிகளை அடியொற்றியதாக இந்த இலக்கணம் அமைகின்றது.

எளிமையான கருத்து முன்மொழிவு கொண்ட ஒரு வசனம் கருத்தை உற்பவிக்கும் புதிய வசனமாக மாற்றப்பட முடியும். பேசுவோரின் ஒலிப்புச் செயலும் கேட்போரின் இயல்பும் குறித்த வசனத்துக்குப் புதிய கருத்துக்களை உற்பத்திக்கும், வசனங்களை இணைக்கும் பயிற்சிகள் மாணவரின் மொழியாற்றலை வளர்க்க உதவும். சிறிய துண்டாடப்பட்ட வசனங்களை பயிற்றுவித்தலிலும் நீண்ட வசனங்களை பயிற்றுவித்தலே சிறப்பான கற்பித்தல் முறையாகும். ஆரம்பப் பாடசாலைகளிலேயே வசனங்களை இணைக்கும் பயிற்சிகளை வழங்கல் சாலச்சிறந்தது.

இலக்கணம் கற்பிக்கப்படும் பொழுது சிறிய பாடப்பரப்புகளாக (Mini Lesson) கற்பிப்பதே சிறந்த அணுகுமுறையாகும். மாணவர்களின் மொழிக்களஞ்சியத்தை அடிப்படையாகக் கொண்டே விளக்கங்களையும், எடுத்துக்காட்டலையும் தருதல் வேண்டும். மொழிக்கலைகளைக் கற்பித்தல் பன்முகப்படுத்தப்பட்ட முறைமைகளை நோக்கி நகர்த்தப்பட வேண்டியுள்ளது. ஓரணுமுறை, ஒரே அணுமுறை என்ற எற்பாடுகளை கைவிட்டுப் பன்மை நிலைகளை நோக்கி நகரவேண்டியுள்ளது. ❑

# தமிழ்மொழி வழி கல்வி கற்கும் மாணவர்கள் தமிழ் மொழி இலக்கியம் சாராப் பாடங்களைப் பயில்வதற்குப் பெற்றிருக்க வேண்டிய அடிப்படை மொழித் தேர்ச்சியும், அறிவும்

## இதற்கான கற்பித்தல் முறைமை பற்றிய ஒரு குறிப்பு


பேரா. கா. சிவத்தம்பி
தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்,
யாழ். பல்கலைக்கழகம்


இன்றைய உயர் வகுப்பு மாணவர்களின் தமிழ் அறிவு பற்றிய பொதுக் குறிப்புரைகளிலொன்று அவர்கள் பெரும்பாலும் வாக்கியங்களைக் கூட சரிவர எழுதத் தெரியாதவர்கள் என்பதாகும். அதாவது இம்மாணவர்கள் எழுதும் வாக்கியங்களை அர்த்தப்படுத்துவதிற் சிரமம் காணப்படுகின்றது என்பதே இந்தக் குற்றச்சாட்டாகும். உயர்நிலை மாணவர்களின் சிங்களமொழி பற்றிய மொழிப்பயிர்வுத் தேர்ச்சி பற்றிக் கூறப்படும் பொழுதும் இதே மாதிரியான குற்றச்சாட்டு (அதாவது சிங்களத்தைச் சரியாக எழுதத் தெரியாதவர்கள் எனக்) கூறப்படுவது இயல்பாகியுள்ளது.

தமிழ் / சிங்களம் வழியே ஏறத்தாழ உயர்கல்வி கற்பிக்கப்படும் இந்நாட்டில் இக்குறைபாடு பற்றிக் கூறப்படுவதை மிகுந்த கவனத்துடன் நோக்குதல் வேண்டும்.

> மொழியென்பது கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கான ஓர் ஊடகம் (சாதனம்) என்பதே பெரும்பாலும் எடுத்துக் கூறப்படுவதுண்டு. அது உண்மையே. ஆனால் அதற்கும் மேலே முக்கியத்துவமுள்ள. உண்மையாதெனில் மனிதர்கள் மொழி கொண்டே சிந்திக்கின்றார்கள் என்பதாகும். அறிவுப் பாண்டித்தியம் மிக உயர்வாக உள்ள நிலையிலேயே குறியீடுகள் மூலம் சிந்திக்கும் முறையும் திறனும் கிட்டுகின்றன. (உயர் கணிதம்) அத்தகைய நிலைக்கு வரும் வரை நியமமான மொழி கொண்டே நாம் சிந்திக்கிறோம். இந்நிலையில் மொழி இல்லாமற் சிந்தனை இல்லை.

தமிழ் / சிங்கள மொழிவழிப் பயிலும் மாணவர்கள் தமிழ் / சிங்களம் ஆகிய மொழி, இலக்கியம் சாராப் பாடங்களை மாத்திரம் தமது பாடங்களாகக் கொள்ளும் முறைமை க.பொ.த சாதாரண நிலைக்கு மேலே தொடங்குகின்றது. க.பொ.த. சாதாரண தர நிலையை எடுத்துக்கொண்டால் குறிப்பாக ஆறாந்தரம் முதல் மொழி, இலக்கியம் சாராப் பாடங்களை சற்று ஆழமாகக் கற்கும் முறையைத் தொடங்குகின்றனர். ஆனால் அந்த நிலையில் தரங்கள் 6,7,8,9,10,11 வரை அவர்கள் தமிழ் / சிங்கள மொழி இலக்கியஞ் சாராப் பாடங்களைப் படிக்கும் அதே வேளையில் தமிழ் / சிங்கள மொழி, இலக்கியம் ஆகிய 3 பாடத்தையும் கற்கின்றனர்.

தரம் 6 இலிருந்து ஒவ்வொரு பாடத்துக்கும் ஒவ்வொரு தனித்தனி ஆசிரியரைப் பயன்படுத்தும் முறைமை இப்பொழுது வழக்கிலுள்ளது. அதாவது தமிழ் மொழியைத் தமது சிறப்புப் பாடமாகக் கொள்ளாத ஆசிரியர்கள் மூலமாக மொழி இலக்கியஞ் சாராப் பாடங்களைப் படிக்கும் முறை தரம் 6 இலிருந்தே தொடங்கிவிடுகிறது. ஆயினும் தரம் 6 இலிருந்து 11 வரை தமிழ் மொழி இலக்கியத்தையும் அம்மாணவர்கள் பயில்வதால் மாணவர்களின் அறிகை நிலையில் இந்த இரு பாடநிலைகளுக்குமிடையே ஊடாட்டம் தென்படும். இது நடைபெறுகின்ற வயதெல்லை 11 - 16 ஆகும். இப்பொழுதுள்ள கல்வி முறைமையில் சராசரியாக 16 வயதிற்கு மேலே கலைத்துறை (Arts) சாரா மாணவர்கள் தங்கள் பாடங்களை மொழிப்பாட ஊடாட்டம்.எதுவுமின்றியே பயில்கின்றனர் என்பது ஒரு முக்கியமான உண்மையாகும்.

மேற்கூறிய உண்மையை மனதிற் பதித்துக் கொண்டு மொழிப் பயில்வுக்கும் அறிகை விருத்திக்குமுள்ள தொடர்பினை இவ்விடத்திற் குறித்துக்கொள்வது அவசியமாகின்றது.

மொழியென்பது கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கான ஓர் ஊடகம் (சாதனம்) என்பதே பெரும்பாலும் எடுத்துக் கூறப்படுவதுண்டு. அது

உண்மையே, ஆனால் அதற்கும் மேலே முக்கியத்துவமுள்ள, உண்மையாதெனில் மனிதர்கள் மொழி கொண்டே சிந்திக்கின்றார்கள் என்பதாகும். அறிவுப் பாண்டித்தியம் மிக உயர்வாக உள்ள நிலையிலேயே குறியீடுகள் மூலம் சிந்திக்கும் முறையும் திறனும் கிட்டுகின்றன. (உயர் கணிதம்) அத்தகைய நிலைக்கு வரும் வரை நியமமான மொழி கொண்டே நாம் சிந்திக்கிறோம். இந்நிலையில் மொழி இல்லாமற் சிந்தனை இல்லை.

மொழி நிலைச் சிந்திப்பு என்பது இரண்டு விடயங்களை உள்ளடக்கியது. ஒன்று வார்த்தைகள் சுட்டும் பொருள் / அர்த்தம் இவை பருப்பொருள்களாகவுமிருக்கலாம். (கண்ணாடி, அணு உலை) அல்லது அருவமான எண்ணக்கருக்களாகவும் இருக்கலாம் (கோபம், நொதுமல்) இவற்றுக்கான அறிவு, தகவற் சேகரிப்புக்களினால் வருவது.

மற்றையது இது மிகமுக்கியமானது. சொற்களின் கட்டமைப்பால் உணர்த்தப் பெறும் பொருள் / அர்த்தமாகும்.

சௌமியனின் குடை

சௌமியனுக்குக் குடை

இவ் உதாரணத்தில் மொழியின் அமைப்பு முக்கியமான வேறுபாட்டினை உணர்த்துகின்றது. இவை பற்றிய ஒரு வினாவாகும்போது அது பற்றிய சிந்திப்பில் இந்த அமைப்பு முறைமை முக்கியமாகின்றது. இதனைச் சரியாக விளங்கிக் கொள்வதற்கு மாணவர்கள் இந்த அமைப்பு முறைமையினை நன்கு விளங்கியிருத்தல் வேண்டும். கோளங்களின் சூடு என்பதற்கும், கோளங்களுக்கான சூடு என்பதற்குமிடையிற் பெருத்த கருத்து வேறுபாடு உண்டு.

மேற்கூறிய இரண்டு மொழித் தேர்ச்சிகளுமில்லாது மொழிவழி அறிகையோ மொழிநிலைச் சிந்தனையோ ஏற்படாது.

திட்டவட்டமாகக் கூறினால் வாக்கியங்களின் அர்த்தப்பாடுகளைத் தெரிந்து கொள்ளாமல் வாக்கியங்களை விளங்க முடியாதென்பது முக்கிய உண்மையாகின்றது. இதனால் எந்தப்பாடத்தைப் பயில்பவரும் தான் அந்தப் பாடத்தை எந்த மொழி மூலம் பயில்கின்றாரோ அந்த மொழியின் அமைப்புப் பற்றிய பரிச்சயம் மூலம் தான் அந்த அறிகையை அதன் வழியாக அறிவைப் பெற முடியும் என்பது தெளிவாகின்றது. இதில் இன்னுமொரு உள்நிலை முக்கியத்துவமுண்டு. மொழியமைப்பும் அதன் அர்த்தப்பாடும் பற்றியுள்ள அறிவினால் அவர் தன் முன்னேயுள்ள ஒரு பாடத்தை அல்லது பாடப்பகுதியை விளங்கிக் கொள்ளுதல் என்பது ஒரு அம்சம். இன்னொன்று தான் அறிந்தனவற்றை குறிப்பாகத் தனக்குப் பிரச்சினையாக உள்ளனவற்றை அல்லது தான் கண்டறிந்தனவற்றை மற்றவர்கள் புரிந்து கொள்ளுமாறு எடுத்துக் கூறுவதற்கும் இந்த மொழியமைப்புத் தேர்ச்சி முக்கியமாகும். இதனை மேலும் சற்று நுண்ணியதாகக் கூறலாம். அதாவது தான் எடுத்துக் கூறவிரும்பும் கருத்து நுண்மையைப் புலப்படுத்தத்தக்க வகையிலே மொழியமைப்பைக் கையாளுவதற்கான அறிவும் ஆற்றலும் வேண்டும்.

*மழை பெய்கிறது*

*மழை பெய்து கொண்டிருக்கிறது*

*மழை பெய்து கொண்டேயிருந்தது*

இவ் உதாரணம் மிகச் சாதாரண நிலையில் நாம் காணும் ஒரு விடயத்தின் நெளிவு சுழிவுகளைக் கூறுகின்றது.

இந்த மொழியறிவு இல்லாமல் எந்தப் பாடத்தையும் விளங்கிக் கொள்ள முடியாது. மொழியின் இந்த அடித்தள அமைப்புப் பற்றிய அறிகைத் தேவையையும் அறிகை முறைமையையும் நாம் இரண்டாம் மொழியாக அல்லது மூன்றாம் மொழியாகக் கற்றுக் கொள்ளும் ஆங்கில மொழி கற்கை நெறி மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்கும் போது ஆங்கிலம் மூலம் ஒன்றை எடுத்துச் சொல்வதற்கோ அல்லது ஆங்கிலத்திற் பொதுப்படையாகக் கூறப்படுவதை விளங்கிக்கொள்வதற்கு வேண்டிய அம்மொழியின் அடிப்படை அமைவு முறைமை பற்றிய அறிவே அங்கு Basic English (அடிப்படை ஆங்கிலம்) என்று கொள்ளப்படுகிறது. அதாவது அந்த அடிப்படை அமைவுகள் பற்றிய விளக்கமும் அவை பற்றிய தாடனமும் இருந்தால் அறிகை வரம்பைக் கூட நாம் அகட்டிக் கொள்ளலாம். அந்த அடிப்படை ஆங்கில அறிவு தளம் போன்றது.

க.பொ.த சாதாரண நிலைக்கு மேல் தமிழ்மொழி வழியாகத் தனது பாடங்களை (தமிழ் சாராதவை) கற்க விரும்பும் மாணவரொருவர் தனக்கு தமிழில் கற்பிக்கப்படுகின்ற அந்தப் பாடத்தை அல்லது பாடங்களை விளங்கிக் கொள்வதற்கும் அத்துடன் தான் அதனை விளங்கியுள்ளேன் என்பதை தெரியப்படுத்திக் கொள்வதற்கும் வேண்டிய அடிப்படைத் தமிழ்த் தேர்ச்சிநிலை யாது? அது எவ்வெவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் எனும் வினா அடுத்துத் தோன்றுவது இயல்பே.

ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்கும் போது ஆங்கிலம் மூலம் ஒன்றை எடுத்துச் சொல்வதற்கோ அல்லது ஆங்கிலத்திற் பொதுப்படையாகக் கூறப்படுவதை விளங்கிக்கொள்வதற்கு வேண்டிய அம்மொழியின் அடிப்படை அமைவு முறைமை பற்றிய அறிவே அங்கு அடிப்படை ஆங்கிலம் என்று கொள்ளப்படுகிறது. அதாவது அந்த அடிப்படை அமைவுகள் பற்றிய விளக்கமும் அவை பற்றிய தாடனமும் இருந்தால் அறிகை வரம்பைக் கூட நாம் அகட்டிக் கொள்ளலாம். அந்த அடிப்படை ஆங்கில அறிவு தளம் போன்றது.

இந்த வினாவை மீண்டும் ஒரு தடவை எடுத்துக் கூறுவோம். தமிழில் ஒன்றை விளங்கிக் கொள்வதற்கும் அல்லது அத்துடன் அதனைத்தான் விளங்கிக் கொண்டதாக தன்னுள் தான் மதிப்பிடுவதற்கும், அப்படி விளங்கியதை இன்னொருவருக்கு எடுத்துச் சொல்வதற்கும் தெரிந்திருக்க வேண்டிய குறைந்த பட்ச அடிப்படை மொழியமைப்பறிவு யாது? இந்த விடயம் நம்மை எவ்வித தங்கு தடையுமின்றி தமிழலக்கணம் பற்றிய வினாவுக்கு இட்டுச் செல்கின்றது.

இலக்கண அறிவின் தேவைப்பாடு பற்றிய இந்த நிலையை மேலும் சற்று ஆழமாக விளங்கிக் கொள்வதற்கு இதே விடயத்தை இன்னொரு வகையாகவும் எடுத்துக்கூறலாம். அது பின்வருமாறு:-

தமிழ்மொழியில் அர்த்தம் எவ்வாறு தோற்றுவிக்கப்படுகின்றது? இவ்வாறு நோக்கும் போது தமிழ் மொழியின் அடிப்படை அம்சங்களென எடுத்துக் கூறப்படுகின்றனவற்றுக்கு நாம் வருகின்றோம்.

இன்னொரு மொழியோடு ஒப்பு நோக்கும் போது தமிழில் அர்த்த உருவாக்கத்துக்கான மொழியமைப்பு எவ்வாறிருக்கும் என்பதே உண்மையில் எம்முன்னுள்ள பிரச்சினையாகும்.

ஒவ்வொரு மொழியும் அதனுடைய இயல்பு முறைமைக்கேற்ப இந்த அர்த்தப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளும், உதாரணமாக ஆங்கிலத்தில்,

**He came**

**She came**

**It came**

என்று அந்த came எனும் பயனிலைச் சொல்லில் வேறுபாடு காட்டாமல் முடிக்கலாம். ஆனால் தமிழிலோ

***அவன் வந்தான்***

***அவள் வந்தாள்***

***அது வந்தது***

எனவே முடித்தல் வேண்டும். அப்படி இல்லாமல் முடித்தால் அந்த அர்த்தப்பாடு ஏற்படாது.

மொழிகளின் தனித்துவ இயல்புகளை விளங்கிக் கொள்வது மிக மிக அவசியம் உதாரணம். "நேற்றிரவு மழை பெய்தது" என்ற தொடரை ஆங்கிலத்திற் கூறும் போது ***"It rained Yesterday night"*** என்றே கூற வேண்டும். இவ்வாக்கியத்தில் It என்பதனை வழக்கம் போல "அது மழை பெய்தது" என்று கூறிவிட முடியாது. தமிழில் மழை பெய்தது என்று மாத்திரமே கூறல் வேண்டும். அதுபோல், is, are எனப்படும் பிரயோகங்கள் ஆங்கில மொழி மூலம் அர்த்தப்பாட்டைத் தோற்றுவிப்பதற்கு அத்தியாவசியமாக அமைந்துள்ளன.

இதே போன்று தமிழில் அர்த்தப்பாடு எவ்வாறு ஏற்படுத்தப்படுகின்றது? என்பதை அறிய முனைதல் வேண்டும். தமிழுக்கான இலக்கணத்தை எடுத்துக் கூறுவதற்கு முதலில் இரண்டு படி நிலைகளுள்ளன.

*1. எழுத்து நிலைப்பட்டது*

இங்கே எழுத்து என்பது இரண்டு கருத்துக்களையுடையது. ஒன்று எழுத்தின் ஒலி (ஒலி வடிவம்) இது மாறுவதில்லை. மற்றயது எழுத்துக்கான எழுதுவடிவம் (வரி வடிவம்) இது மாறுதலுக்குட்பட்டது. எழுத்தின் உயிர் நிலையென்பது அதன் ஒலியமைப்பேயாகும். (Phonology Phonetics) இந்த ஒலியமைப்பில் அடிப்படை மாற்றம் ஏற்படுவதில்லை. "அ" வின் ஒலி என்றுமே "அ" தான்.

*2. சொல் நிலைப்பட்டது*

இந்தச் சொல்நிலையில் தான் கருத்துக் குறிப்பு / பொருட் குறிப்பு ஏற்படும். இச்சொற்கள் ஒரு தனியொலியாகவோ அல்லது கூட்டொலியாகவோ அமையலாம்.

| | |
|---|---|
| *வா* | *போ* |
| *வார்* | *போர்* |
| *வாகனம்* | *போர்வை* |

இவ்விடத்தில் தனியே சொல் என்று சொல்வதிலுள்ள சிரமத்தை அவதானித்துக் கொள்ளல் வேண்டும். உண்மையில் தனியொரு சொல்லினால் ஒரு கருத்தினை ஏற்படுத்திவிட முடியாது. சொல் என்ற நிலைக்கு வருவதற்கு முன்னர் கிளத்தல் (Uttering, Utterance) என்ற நிலையிலிருந்து தொடங்குவது நல்லது. ஏனெனில் கிளத்தல் எனும் செயற்பாடு ஏதோ ஒரு நோக்கத்தினை மனதிற் கொண்டு அதற்கான மரபொலியை அல்லது மரபொலிகளைக் கூறுவதாகும். சந்தர்ப்பம் கொண்டே நாம் கருத்தினை தீர்மானிப்போம், உதாரணமாக வாள் என்பது பெயராகவும் வரலாம் வினையாகவும் வரலாம் கருத்தினை மனத்தில் வைத்துக் கொண்டு கூறமுடிவதை கிளத்தல் எனலாம். இவ்வாறு கிளத்தப்படுவதை கிளவி என்போம். இலக்கிய நிலையில் கிளவி என்பதற்கு கூற்று என்று பொருள் கூறுவர். கூறுவது கூற்று. அதே போல கிளத்தப்படுவது கிளவி. இந்தக் கிளவி நிலையிலேயே அர்த்தம் தோன்றும். இதனாலேயே தொல்காப்பியம் சொல்லதிகாரம் கிளவியாக்கம் எனும் இயலுடன் ஆரம்பிக்கின்றது.

*தனியொரு சொல்லினால் ஒரு கருத்தினை ஏற்படுத்திவிட முடியாது. சொல் என்ற நிலைக்கு வருவதற்கு முன்னர் கிளத்தல் (Uttering, Utterance) என்ற நிலையிலிருந்து தொடங்குவது நல்லது. ஏனெனில் கிளத்தல் எனும் செயற்பாடு ஏதோ ஒரு நோக்கத்தினை மனதிற் கொண்டு அதற்கான மரபொலியை அல்லது மரபொலிகளைக் கூறுவதாகும். சந்தர்ப்பம் கொண்டே நாம் கருத்தினை தீர்மானிப்போம். உதாரணமாக வாள் என்பது பெயராகவும் வரலாம் வினையாகவும் வரலாம் கருத்தினை மனத்தில் வைத்துக் கொண்டு கூறமுடிவதை கிளத்தல் எனலாம்*

ஆசிரியர்கள் இந்த உண்மையை நன்கு உள்வாங்கிக் கொள்ளல் வேண்டும்.

அடுத்த வினா தமிழிற் பொருள் தோன்றக் கிளத்தலுக்கான அடிப்படை அமைப்பு யாது? இவ்வாறு நோக்கத்தொடங்கும் போதும் தமிழ் மற்றைய மொழிகளோடு ஒப்பு நோக்கப்படும்போதும் இதன் பிரதான பண்பு யாது? என்று அறிந்து கொள்ளல் வேண்டும்.

திராவிட மொழியெனும் வகையில் தமிழின் மிகப்பிரதான அம்சம் அதன் திணை வகுப்பாகும். தொல்காப்பியம் கிளவியாக்கத்தில் முதற் சூத்திரமாக இதனையே சொல்லும்.

எந்தப் பாடத்தைக் கற்கும் பொழுதும் மாணவர்கள் பேசும் பொருள் பற்றிய அல்லது நடக்கும் செயல் பற்றிய அந்தப் பொருள் அல்லது செயலின் சில நிலைகள், இயல்புகள் பற்றி கூறவேண்டிய தேவையேற்படும். (உதாரணம் உப்புத் தண்ணீர், வெந்து வீழ்ந்தது போன்றவை) இப்படி பெயர்ப்பொருளின் அல்லது செயலின் தன்மையைப் பற்றிக் கூறுவனவற்றை பெயரடை அல்லது வினையடை என்பர். இப்பயன்பாடு பற்றிய தெளிவான பயன்பாட்டு முறைமை மாணவருக்குத் தெரிந்திருத்தல் வேண்டும்.

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவர் அலபிறவே
ஆயிரு திணையின் இசைக்கு மனசொல்லே

இதுவே சொற்களுக்கு அடிப்படையாகும். இந்தத் திணையின் அடிப்படையிலேயே பால், எண், இடம் என்பன வரும். பால் பற்றிய எண்ணக்கருவை தொல்காப்பியச் சூத்திரம் விளக்கும் முறையின் நுணுக்கத்தை அறிந்து கொள்ளல் வேண்டும்.

ஆடுஉ அறிசொல், மகடூஉ அறிசொல்
பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி
அம் முப்பாற் சொல் உயர்திணையவ்வே

ஆண்பால், பெண்பால் என்று சொல்லாமல் ஆணென்று அறிந்து கொள்ளும் சொல், பெண்ணென்று அறிந்து கொள்ளும் சொல் என்பதன் நுணுக்கத்தை விளங்கிக் கொள்ளல் வேண்டும். மாணவன் மாணவி என சொல்லின் இறுதி வடிவம் மூலம் மாத்திரம் காட்டாமல் பிடி, களிறு என தனித்தனிச் சொற்களாகவும் வரும். இதில் மேலும் ஒரு நுணுக்கம் உண்டு. தமிழில் ஒருமையிலேயே ஆண், பெண் பால் வித்தியாசம் அழுத்தமாகக் காட்டப்பெறும்.

ஆண்கள் வந்தனர்
பெண்கள் வந்தனர்

எனும் போது ஆண்பாலோ, பெண்பாலோ பொதுவாக பன்மை நிலையில் "அர்" என்ற வடிவத்தையே பெறும். இவ்வாறு கொள்வதற்கான காரணங்களைத் தமிழ்ச் சமூகத்தின் கண்ணோட்டத்திலிருந்தே கண்டு கொள்ளல் வேண்டும். அதேபோல அஃறிணையில் ஒருமை, பன்மையைக் கூறுவதற்கும் தொல்காப்பியம் கூறும் முறைமை நுணுக்கமானது.

ஒன்று அறிசொல்லே, பல அறிசொல் என்று
ஆயிரு பாற்சொல் அஃறிணையவ்வே

அஃறிணைக்கு ஆண், பெண் பால் சொல்லும் மரபு இல்லையென்பது இதனால் பெறப்படுகிறது (இது பற்றிய சமூக நிலை விளக்கத்துக்கு இலக்கணமும் சமூக உறவுகளும் என்ற நூலைப் பார்க்கவும்).

அஃறிணையில் ஒன்றன், பலவின் என்ற சொற்களைப் பயன்படுத்துவதற்குக் காரணம் எண்ணில் ஒன்றாக (Single) நிற்கும் அது என்றும், பலவாக நிற்கும் அவற்றின் என்றுமே கருத்துப்படும்.

இடம், தன்மை, முன்னிலை படர்க்கை என வரும். இவ்வழக்கு ஏறத்தாழ எல்லா மொழிகளிலும் உண்டு. எனவே தமிழிற் சொல்லுருவாக்கத்தின் (கிளத்தலின்) அடிப்படையான அம்சம் திணை வழியாகவே வருகிறது.

அடுத்து முக்கியம் பெறுவது இந்த சொல்லமைப்பின் அல்லது கிளத்த விரும்பும் கருத்து மாற்றங்களுக்கியைய எடுத்துக் கூறுவதாகும். அதாவது அர்த்தத்தை மாற்றுவதற்கான தமிழ் நடைமுறை யாது? என்பதை அறிந்து கொள்வதாகும் *(How is meaning changed in Tamil).*

விதுரன் அடித்தான்
விதுரனை அடித்தான்

சேயோன் கொடுத்தான்
சேயோனுக்கு கொடுத்தான்

தரங்கிணி எழுதினாள்
தரங்கிணியால் எழுதப்பட்டது

மாதங்கி வருகிறாள்
மாதங்கி இங்கே வா

மேல் வந்த உதாரணங்களைப் பார்க்கும் நாம் உரையாடும் பொழுதோ, எழுதும் பொழுதோ குறித்த சொல்லின் இறுதியிலேயே அர்த்த வேறுபடுத்தலுக்கான சுட்டியை வைத்துக் கொள்கிறோம். இது ஒரு முக்கிய விடயம். இந்தப் பொருள் மாற்றுச் சுட்டி சில மொழிகளில் அந்தச் சொல்லுக்கு முன்னரே வந்துவிடும்.

உதாரணம் :

**The book is on the table**
அந்தப் புத்தகம் மேசை மேல் இருக்கிறது.

தம்பிக்கு மாம்பழம் கொடுத்தேன்
**I gave mango to your brother**

இவ்வாறு சொல்லின் பொருளில் மாற்றத்தை ஏற்படுத்தும் முறைமையை வேற்றுமைப்படுத்தல் என்பர். இது ஒரு முக்கிய கட்டம். எந்தச் சொல்லில் பொருள்

மாற்றத்துக்கான சுட்டியை எத்தகைய சொல்லோடும் இணைத்துக் கொள்கிறோம் என்பது இப்போது முக்கியமாகின்றது. ஒரு பொருளைக் குறிக்கும் சொல்லுடனேயே அந்தப் பொருளின் மாற்றுச் சுட்டியைச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

சேயோனை

வந்தவனை

இந்தக் கட்டத்துக்கு வந்ததும் எத்தனை வகைச் சொற்களுள்ளன என்ற கேள்வி எழுகிறது. மொழிகளை எடுத்துக் கொண்டால் சொற்கள் பொருள் குறிக்கும் சொற்கள், செயல் குறிக்கும் சொற்கள் என இருவகைப்படுவதை அவதானிக்கலாம். தமிழில் இவை பெயர், வினை என்று குறிப்பிடப்பெறும். வினையென்பது ஒன்றினைச் செய்தல் (doing) என்பதாகும். சங்க இலக்கியங்களில் வினை எனும் சொல் ஒரு கருமத்தை அல்லது காரியத்தைச் செய்வதைக் குறிக்கிறது (doing activity) (வினைவலர், வினைஞர்)

எந்தப் பாடத்தைக் கற்கும் பொழுதும் மாணவர்கள் பேசும் பொருள் பற்றிய அல்லது நடக்கும் செயல் பற்றிய அந்தப் பொருள் அல்லது செயலின் சில நிலைகள், இயல்புகள் பற்றி கூறவேண்டிய தேவையேற்படும். (உதாரணம் உப்புத் தண்ணீர், வெந்து விழ்ந்தது போன்றவை) இப்படி பெயர்ப்பொருளின் அல்லது செயலின் தன்மையைப் பற்றிக் கூறுவனவற்றை பெயரடை அல்லது வினையடை என்பர். இப்பயன்பாடு பற்றிய தெளிவான பயன்பாட்டு முறைமை மாணவருக்குத் தெரிந்திருத்தல் வேண்டும்.

பெயர், வினை என்பனவே அடிப்படை முக்கியத்துவமுடையனவாகும் தமிழில், அதாவது தமிழின் நடைமுறை நிலையில் இடை, உரி என்ற சொல்வகைகளையும் சேர்த்துக் கொள்ளும் மரபு உண்டு. இவற்றுக்கென தனியே பொருள் இல்லை. பெயரோடு அல்லது வினையோடு அல்லது அவற்றுக்கிடையே வருவனவாக அமையும். அந்த வகையில் பொருள்மாற்றச் சுட்டிகளும் இடைச் சொற்களேயாகும். இந்தச் சுட்டிகளை உருபு (form) என்பர்.

உரி என்பதும் பொருள் செயலைக் குறிக்காமல் அவற்றின் தர நிலையைக் குறிப்பதாகும்.

சாலச் சிறந்தது.

நனி சிறந்தது.

இடைச் சொற்களின் தன்மையைப் புரிந்து கொள்வதற்கு ஆங்கிலத்தில் வரும் Particle எனும் சொல்லுக்கு தரப்படும் கருத்தினை நோக்குதல் வேண்டும். Particle என்பது ஒரு பொருளின் துகள் அல்லது துணிக்கை என்பது பொருள். அது இலக்கணத்தில் எவ்வாறு தொழிற்படுகின்றதென்பதை விளக்கும்போது தனக்கென ஒரு பொருளில்லாமல் ஒரு சொல்லுக்கு முன்னரோ பின்னரோ வந்து அப்பொருளை அழுத்தியோ குறைத்தோ கூறுவது. அந்தவகையில் இடைச் சொல் என்று கூறுவர்.

பெயர், வினை என்பனவே அடிப்படை முக்கியத்துவமுடையன வாகும் தமிழில், அதாவது தமிழின் நடைமுறை நிலையில் இடை, உரி என்ற சொல்வகைகளையும் சேர்த்துக் கொள்ளும் மரபு உண்டு. இவற்றுக்கென தனியே பொருள் இல்லை. பெயரோடு அல்லது வினையோடு அல்லது அவற்றுக்கிடையே வருவனவாக அமையும். அந்த வகையில் பொருள்மாற்றச் சுட்டிகளும் இடைச் சொற்களேயாகும். இந்தச் சுட்டிகளை உருபு என்பர்.

உரி என்பது மேலே கூறப்பட்ட சொற்பொருளின் அழுத்தத்தைக் காட்டுவதற்குப் பயன்படுவதாகும் (சால, நனி, தவ) அந்த அளவில் இதுவும் Particle தான். உரிச் சொல்லை ஒரு தனிப்பிரிவாகக் கொள்ளலாமா என்பது பற்றி இலக்கணகாரரிடையே கருத்து வேறுபாடுண்டு.

இதுவரை கூறியவற்றால் தமிழில் அர்த்தம் தோன்றுவதற்கும் இரண்டு அடிப்படைகளுண்டு என்பது தெரியவந்துள்ளது.

ஒன்று திணை - ஏற்கனவே கூறியவாறு பால், எண், இடம் இதற்குள் அடங்கும்.

மற்றயது பொருள் மாற்றுச் சுட்டிகள் - இது பற்றிப் பேசுகின்றபோது பொருள் குறித்தல் செயல் குறித்தல் என்பன முக்கியமாகின்றன. இவை பெயர்வினை என்பனவாகும்.

எனவே அடுத்து நாம் பெயர், வினை பற்றிய தெளிவுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அப்போது தான் நாம் விரும்பியபடி "கிளத்தலை"ச் செய்யலாம். இது அத்துணைச் சுலபமல்ல.

அவன் வந்தான்

அவன் (அப்பொழுது) நல்லவன்)

மூன்றாவது உதாரணத்தில் நல்லவன் எனும் சொல் பெயர் அல்ல. அது உண்மையில் வினைச் சொல்லே. நல்லவனாக இருக்கும். செயலைக் குறிப்பதாகும். ஆனால் அது எப்பொழுது என்பதுதான் கேள்வி. முன்னராக இருந்தால் இறந்த காலம், இப்பொழுதாக இருந்தால் நிகழ்காலம் (இந்த மயக்கத்தைத் தீர்ப்பதற்கு ஆக இருத்தல் என்ற பொருள்பட சொல்லுருவாக்கத்தைச் செய்யலாம். இதனைக் குறிப்பாற் காலங் காட்டுவதென்பர்)

இந்தக் கட்டத்தில் "காலம்" (Time - Tence) முக்கியமாகின்றது. தமிழில் இது விரிவாக ஆராயப்பட்டுள்ளது. நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் என்பன எவ்வாறு குறிப்பிடப்படுகின்றன என்பது பற்றிய விரிவான விளக்கம் தமிழிலக்கணத்திலுண்டு. வினைச் சொற்களில் இடைநிலைகளாக வரும் உருபுகள் (Particles) இங்கு முக்கியமாகின்றன.

வருகிறான் — கிறு

வருகின்றான் — கின்று

வராநின்றனர் — ஆநின்று

இவ்விடத்தில் தமிழின் சொற் கட்டமைப்புப் பற்றிய தெளிவு இருத்தல் வேண்டும். தமிழில் சொற்கள் பெரும்பாலும் ஒட்டு நிலையாகவே இருக்கும்.

வருகிறான்
வரு (வா) + கிறு + ஆன்

மனைவி
மனை + (வ்) இ

பார்த்துக்கொண்டிருக்கிறான்
பார் + (த்) து பார்த்து +
கொண்டு + இரு + கிறு + ஆன்

இல்லாள்
இல் + ஆள்

நன்னூலில் வரும் பதவியல் எனும் பகுதியில் இம்முறைமை விளக்கப் பெற்றுள்ளது. தமிழானது திராவிட மொழியெனும் வகையில் ஓர் ஒட்டு மொழியாக இருப்பதால் வருகின்ற கூறுகள் எல்லாம் இணைந்தே வரும்.

"தொடக்க நிலையில் மாணவர் களுக்கு பாட விடயத்தைக் காட்டு வதல்ல முக்கியம். உண்மையில் அவர்களின் கைகளைப் பிடித்து அவர்களை அவற்றினூடாக கூட்டிச் செல்லல் வேண்டும்."

கைகளைப் பிடித்துக் கூட்டிச் செல்லும் தன்மை நிச்சயமாக நமது பாடநூற்றொடரில் இல்லை. இந்தப் பாடநூற்றொடரிற் காணப்படும் மிகப் பெரிய குறைபாடு யாதெனில், குறிப்பாக இலக்கணப் பகுதியைப் பொறுத்தவரையில் பரம்பரை பரம்பரையாக வரும் ஒரு வாய்ப் பாட்டு முறைமையிலேயே இலக்கண அமைவுகளை விளக்குவதாகும். இதற்கான நல்லதோர் உதாரணமாக அமைகின்றது தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 7 நூலில் புணர்ச்சி விளக்கப்பட்டுள்ள முறைமையாகும்.

இதுவரை கூறியவற்றால் தமிழில் ஒரு கருத்தை விளங்கிக் கொள்வதற்கோ எடுத்துக் கொள்வதற்கோ மேற்கூறிய திணை அதனைச் சார்ந்து வருபவை, பொருள் மாற்று முறைமை, சொல்வகை, காலமுணர்த்தல் ஆகியன அடிப்படையான அமைப்பியல் (Structural) அம்சங்களாகும்.

உண்மையில் இந்தக் "கிளத்தல்" நிலைக்கு வருவதற்கு முன்னர் தமிழில் அர்த்தங்கள் தோன்றும் முறைமை பற்றி விளங்கிக் கொள்வதற்கு தமிழின் ஒலிப்பு அமைதி மிகமுக்கியமானதென்பதனை குறிப்பிடுதல் வேண்டும்.

அதாவது தமிழில் தொடர்ந்து கிளத்தலை (uttering) செய்கின்றபொழுது ஓர் அர்த்தத்தினைக் குறிக்கும் ஒலி அலகின் இறுதி ஓசையும், அதனைத் தொடர்ந்து வரும் அர்த்த ஒலி அலகின் முதல்வரும் ஓசையும் இணைந்து வரும். மேலே கூறிய ஒட்டுத்தன்மை (agglutination) காரணமாக இது நிகழும்.

அர்த்த உருவாக்கத்தில் இவ்விடயம் முக்கிய இடத்தைப் பெறுகின்ற ஒன்றாகும். மேற்கூறிய ஓசைகளின் ஒட்டு நிலைத் தன்மை தமிழில் அர்த்த வேறுபாடுகளை ஏற்படுத்தும். அந்த ஓசை ஒட்டுகையின் அடிப்படையில் அர்த்தங்கள் தீர்மானிக்கப்படும்.

தந்த சங்கிலி
தந்தச் சங்கிலி

இந்த இரண்டு தொடர்களிலுமுள்ள கருத்து வேறுபாட்டை இங்கு விரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை. தந்த என்ற சொல்லில் வரும் இறுதி ஓசையான "அ" வையும் சங்கிலியில் வரும், முதல் ஓசையான "ச" வையும் சேர்த்துக்கூறுகின்றோமோ அல்லது தனித்தனியே ஓர் இடைவிட்டு கூறுகின்றோமோ என்பதைக் கொண்டு கருத்து வேறுபடுகிறது. இதற்கான மிக்க வலுவான ஓர் உதாரணமுண்டு. (இதனை எனது மாணவர் ரவி மூலம் அறிந்து கொண்டேன்)

அந்த உதாரணம்:

"அவன் கத்தி கொண்டு வந்தான்"

"அவன் கத்திக் கொண்டு வந்தான்"

ஓசை இணைவின் அர்த்த வேறுபாடு மிகத் துலக்கமாகத் தெரிகிறது. இது போன்று பல உதாரணங்களைக் கூறலாம்.

பல்பசை
பற்பசை

முதலாவது தொடர், பல்லுப் பசையாக இருக்கிறது என்ற கருத்தையும் இரண்டாவது தொடர் பல்லுக்கான பசை என்ற கருத்தையும் தருகிறது. இந்த விடயம், தமிழில் அர்த்தங்கள் தோற்றுவிக்கப்படுவது பற்றிய ஓர் அச்சாணி அம்சமாகும்.

உண்மையில் இது எழுத்துக்கள் (letters) - (அவை ஒலிக்கப்படும் முறை) எழுத்து பற்றிய விடயமாகும்.

இலக்கண நூல்கள் இதனை "புணரியல்" என விபரிக்கும். சொற்களின் "புணர்ச்சி" என்று கூறும். புணர் என்னும் சொல்லின் கருத்தினை விளங்கிக் கொண்டால் இவ்விடயம் மிகச் சுலபமாக புரிந்து விடும். புணர்தல் என்பது தனித்தனியாக இருந்த இரண்டு பொருள்கள் ஒன்றாக இணைதல் என்பதாகும். பல + பசை என்ற இரண்டும் "பற்பசை" ஆகும்போது அந்த இணைவு ஒரு புதிய கருத்தினை தோற்றுவிக்கின்றது.

இவ்விடயம் மிகவும் நிதானமாக கையாளப்படுதல் வேண்டும். ஏனெனில் தமிழின் எழுதுமுறை "அசை" யெழுத்து முறையாக இருப்பதால் சொற்கள் உச்சரிக்கப்படும் முறையிலேயே எழுதப்படல் வேண்டும். இல்லாள் என்னும் சொல்லை "இல் ஆள்" என்று எழுதிவிட முடியாது. "இல்லாள்" என்றே எழுத வேண்டும். இங்கு உச்சரிப்பு ஒலி முக்கியமாகும். இவ்விடயம் கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்திப் பேசவேண்டிய நிலைவரும்போது பல கருத்து இயக்கங்கள் ஏற்படலாம். இதற்கான நல்ல உதாரணம் கீழே தரப்படுகின்றது.

அவன் பஸ்ஸிலிருந்து இறங்கினான்.
அவன் பஸ்ஸில் இருந்து இறங்கினான்.

அவன் கண்டியிலிருந்து வந்தான்.

அவன் கண்டியில் இருந்து வந்தான்.

மேற்கூறிய உதாரணங்களில் கருத்து வேறுபாடு தோள்றுவதை அவதானித்தல் வேண்டும். ஆனால் அதே வேளையில் நமது பாரம்பரிய எழுது முறைமையில் இன்றைய நிலையில் சிக்கலானவை என்று கூறப்படத்தக்க சொற் புணர்ச்சி வடிவங்கள் உள்ளன.

தொழிற்றுறை

தொழில் துறை

கல்வியியற்றுறை

கல்வியியல் துறை

இரண்டாவது உதாரணத்தில் கல்வியியல் என்பதை மேலும் பிரித்து கல்வி + இயல் எனக்கொள்வது பொருத்தமாக இருக்காது என்பது நமக்குத் தெரியும்.

எனவே, இதற்கு காரணம் என்னவெனில் நவீன உலகில் தமிழர்கள், 17,18 ஆம் நூற்றாண்டுகளிலே பழக்கப்படாத ஒலிமுறைகளுக்கு இப்பொழுது பழக்கப்பட்டுள்ளோம் என்பதேயாகும். இதனால் மீள்திறன் என்பதை இப்பொழுது, மரபுப்படி மீடிறன் என்று சொல்ல வேண்டியதில்லை. ஆனால் அதே வேளையில் "கண்டியிலிருந்து" வருவதற்கும் "கண்டியில் இருந்து" வருவதற்கும் இன்று கூட கருத்து வேறுபாடு உண்டு.

எனவே தமிழில் அர்த்தங்கள்தோற்றுவிக்கப்படும் முறைமையில் சொற்களின் ஒசையிணைவு பற்றி மாணவர் அறிந்திருத்தல் அவசியம்.

இதுவரை கூறியவற்றால் தமிழ் மொழியில் அர்த்த உருவாக்கத்திற்கு பின்வரும் விடயங்கள் மாணவருக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றனவென்பது தெளிவாகின்றது. அவையாவன:

அ) எழுத்து நிலையில் ஓசைகளின் புணர்வு (சேர்க்கை)

ஆ) கிளத்தல் / சொல்நிலையில்

1) திணையும் அதனுடன் வருபவையும் (திணை, பால், எண், இடம்)

2) பொருளை வேறுபடுத்தும் சுட்டிகள் (வேற்றுமை)

3) சொல்வகை - பொருள் குறித்தவை / செயல் குறித்தவை

4) செயல் குறிக்கும் வினைச்சொல் பற்றியது முக்கியமாகக் காலம் காட்டுதல் ஆகும்.

> உண்மையில் இலக்கணம் பற்றிய தொல்காப்பியர் நன்னூலார் கையாண்டுள்ள சொற்கள் பொருள் பொதிந்தவை. துரதிஸ்டவசமாக நமது கற்பித்தல் முறைமை காரணமாக அவற்றின் நுண்மையை அறியும் திறனை இழந்துவிட்டோம். என்னைக் கேட்டால் இலக்கணங் கற்பித்தலில் நாம் தொல்காப்பியம் நன்னூல் ஆகிய நூல்களில் குறிப்பாக தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியனவற்றின் இயல் வைப்பு முறையினையும் இயல்களினுள்ளே சூத்திரங்களின் ஒழுங்கமைதி முறையையும் புரிந்து கொண்டோமென்றால் தமிழில் இலக்கணம் (இலட்சணம் *features*) நன்கு தெரியும்.

இதனை இன்னொரு வகையிலும் கூறலாம். தமிழில் அர்த்தம் ஏற்படுத்தப்படுவதற்கு தமிழின் மேற்கூறிய மொழி அமைவுகளை அறிந்து கொள்ளாமல் அந்த நோக்கினை வெற்றிகரமாக நிறை வேற்ற முடியாது.

இந்த அறிவினை நமது தமிழ் பயிற்றல் முறை க.பொ.த (சா.த) நிலையினுள்ளே புகட்டுகின்றதா? என்பதனை நோக்குதல் வேண்டும்.

இப்பொழுது வழக்கிலுள்ள "தமிழ்" நூற்றொடரில் வரும் இலக்கணப் பகுதிகளிலே காணப்படும் குறைபாடுகளை எடுத்துக் கூறுவதற்கான ஓர் இடமாக இக்கட்டுரையை நாம் பயன்படுத்த விரும்பவில்லை. எனினும் தரம் 8 வரையுள்ள தமிழிலக்கணம் பயிற்றுவதிலே காணப்படும் சில இயைபின்மைகளை எடுத்துக்காட்டுவது அவசியமாகின்றது. இது தொடர்பாக முதலாவதாக எடுத்துக் கூறப்பட வேண்டுவது இலக்கணம் கற்பித்தல் என்ற எடுகோளின் அடிப்படையிலே கற்பிக்கப்படுவனயாவற்றையும் உண்மையான மொழி இலட்சண (இலக்கண) அம்சங்களாகக் கொள்ள முடியாது என்பதாகும். தரம் 5 வரை விசேட அழுத்தம் கொடுக்கப்பெறும் ஒத்தகருத்துச் சொற்கள், எதிர்க் கருத்துச் சொற்கள் எனும் எண்ணக்கரு சொற்களஞ்சிய விரிவாக்கத்துக்கு உதவுகின்ற அளவுக்கு தமிழிலக்கண கட்டமைவு பற்றிய உணர்கைக்கு பெரிதும் உதவாதென்பதனைக் கூறல் வேண்டும். மேலும் ஒத்தகருத்து எனக் கூறப்படுவனவற்றினூடே காணப்படும் அழுத்த வேறுபாடுகளை மாணவர்கள் உணராது போகுமளவிற்கு கற்பித்தலும் கூடாது. உதாரணம் நதி, ஓடை, அருவி, ஆறு என்பன ஒத்தசொற்களென்பர். உண்மையில் இத்தகைய கற்பித்தலின் மூலம் சொற்பொருளின் நெளிவு சுழிவாக்கத்தை மாணவருக்கு உணர்த்தாமல் விட்டு விடுவோமோ என்ற பயம் ஏற்படுகின்றது. கருத்துத் தொடர்புடைய சொற்களை ஒத்தகருத்தின என்று கூறுவது பற்றி ஆழமாகச் சிந்தித்தல் வேண்டும்.

அடுத்து தரம் 5ல் நடத்தப்பெறும் புலமைப் பரீட்சைக்கென கட்டமைக்கப்பெறும் தமிழ்மொழி வினாத்தாள் அவ்வயது மாணவர்களின் அறிகை நிலைக்கு பெரிதும் அப்பாற்பட்டது என்ற விமர்சனத்தை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

தமிழ் நூற்றொடரைப் பார்க்கும் போது மாணவர்களின் வகுப்பு, வயது நிலைக்கேற்ற பாட அமைப்புக்கள் பற்றி சிந்தித்துள்ளமை புலனாகின்றது. ஆனால் அதேயளவிற்கு வாக்-

கியங்களின் கட்டமைவு பற்றிய விளக்கங்களில் அதிலும் ஒரு படிப்படியான வளர்ச்சி இருக்க வேண்டுமென்பதிலே கவனஞ் செலுத்தப்பட்டுள்ளதா என்பதை நோக்குதல் வேண்டும். இவ்விடத்தில் பிறநாடொன்றில் ஆரம்பநிலை மொழி வகுப்பாசிரியர் ஒருவர் இக்கட்டுரையாசிரியருக்கு கூறிய ஒரு கருத்தினை இங்கு எடுத்துக் கூறுதல் பொருத்தமானது.

"தொடக்க நிலையில் மாணவர்களுக்கு பாட விடயத்தைக் காட்டுவதல்ல முக்கியம். உண்மையில் அவர்களின் கைகளைப் பிடித்து அவர்களை அவற்றினூடாக கூட்டிச் செல்லல் வேண்டும்."

கைகளைப் பிடித்துக் கூட்டிச் செல்லும் தன்மை நிச்சயமாக நமது பாடநூற்றொடரில் இல்லை. இந்தப் பாடநூற்றொடரிற் காணப்படும் மிகப் பெரிய குறைபாடு யாதெனில், குறிப்பாக இலக்கணப் பகுதியைப் பொறுத்தவரையில் பரம்பரை பரம்பரையாக வரும் ஒரு வாய்ப்பாட்டு முறைமையிலேயே இலக்கண அமைவுகளை விளக்குவதாகும். இதற்கான நல்லதோர் உதாரணமாக அமைகின்றது தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 7 நூலில் புணர்ச்சி விளக்கப்பட்டுள்ள முறைமையாகும்.

### சொற்புணர்ச்சி

#### இயல்புப் புணர்ச்சி

*இரு சொற்கள் ஒன்றுடனொன்று சேர்ந்து நிற்றல் புணர்ச்சி எனப்படும். இரண்டு சொற்கள் சேர்ந்து நிற்கும் போது, முன்நிற்கும் சொல் நிலைமொழி என்றும் அதனோடு வந்துசேரும் சொல் வருமொழி என்றும் சொல்லப்படும்.*

*எனவே நிலைமொழி இறுதியும் வருமொழி முதலும் பொருள் பொருத்தமுறச் சேர்வது சொற்புணர்ச்சி எனப்படும்.*

*சொற்புணர்ச்சி இருவகைப்படும்.*

* இயல்புப் புணர்ச்சி
* விகாரப் புணர்ச்சி

இதில் வரும் சொற்பிரயோகங்களைப் பார்க்கும் போது இவை 12 வயதுப் பிள்ளைக்கு விளங்கக்கூடியனவா? என்ற கேள்வி கேட்கப்படவில்லையென்றே தெரிகிறது. நிலைமொழி, வருமொழி எனும் சொற்களில் வரும் மொழி எனும் சொல் உண்மையில் மொழியப்படுவன (Pronounced) என்ற கருத்திலேயே வருகின்றதே அல்லாது மொழி (Language) என்ற கருத்திலல்ல. இத்தகைய விமர்சனங்களைக் கூறுவது சுலபம், எழுதுவது சிரமம் என்பது தெரிந்த ஒன்றே. இங்கு நான் கூறுவது என்னவென்றால் சரியான முறையில் மாணர்களுக்கு விளங்கப்படுத்தப்படாமல் போகின்றது என்பதேயாகும்.

உண்மையில் இலக்கணம் பற்றிய தொல்காப்பியர் நன்னூலார் கையாண்டுள்ள சொற்கள் பொருள் பொதிந்தவை. துரதிஸ்டவசமாக நமது கற்பித்தல் முறைமை காரணமாக அவற்றின் நுண்மையை அறியும் திறனை இழந்துவிட்டோம். என்னைக் கேட்டால் இலக்கணங் கற்பித்தலில் நாம் தொல்காப்பியம் நன்னூல் ஆகிய நூல்களில் குறிப்பாக தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியனவற்றின் இயல் வைப்பு முறையினையும் இயல்களினுள்ளே சூத்திரங்களின் ஒழுங்கமைதி முறையையும் புரிந்து கொண்டோமென்றால் தமிழில் இலக்கணம் (இலட்சணம் **features**) நன்கு தெரியும். (மேல் நாட்டு மரபில் முதலில் எழுதப்படும் மொழியின் ஒழுங்கமைவு பற்றியே - Grammatical இலக்கணம் ஏற்பட்டது. Grammer எனும் சொல் எழுதுவதைக் குறிக்கும் 'Grammatical இல் இருந்து வந்தது)

நாம் இதுவரை பேசிய விடயத்தில் இரண்டு அம்சங்கள் மிக முக்கியமானவை,

1. அர்த்தங்களைக் கொள்வதற்கான / கூறுவதற்கான மொழிக் கட்டமைப்பை விளங்கிக்கொள்ளல்
2. இதனை வயது நிலைக்கேற்ப விளக்கல்

இவற்றிலுள்ள மிகமுக்கியமான அம்சம் என்னவெனில் இம்மொழி தாய்மொழி என்பதால் இந்த அர்த்தவாக்க விளக்கத்திறன் மாணவர்களுக்கு இயல்பாகவே வரும். உண்மையில் பாடசாலைக்கு வருவதற்கு முன்னரே தங்கள் சமூக / வாழ்வியல் தேவைகளுக்கான மொழிக்கட்டமைப்பு அறிவுடனேயே மாணவர்கள் வருகிறார்கள். ஏற்கனவே கூறியபடி இலக்கண வகுப்பு என்பது மாணவர் தம்மிடத்து ஏற்கனவேயுள்ள மொழித்திறனை மீளக்கண்டறிந்து கொள்வதாகும் (Rediscoverg). தான் இயல்பாகப் பயன்படுத்தும் ஒரு மொழிக்கட்டமைவின் அர்த்தங்களை தானே புரிந்து கொள்ளும்போது அந்த மாணவருக்கு ஏற்படவேண்டிய ஏற்படும் உள்ளச் சிலிர்ப்பு, மகிழ்ச்சி இலக்கண வகுப்பின் ஒவ்வொரு நிமிடத்திலும் புலனாக வேண்டும்.

*இக்கட்டுரையின் விடயப் பொருளின் சில அம் சங்கள் பற்றி உரையாடி உதவிய பேராசிரியர் எஸ். சுசிந்திரராஜா அவர்களுக்கும், வகுப் பறை அநுபவ அறிவுபற்றிப் பல விடயங் களைக்கூறி உதவிய கொழும்பு விவேகா னந்தாக் கல்லூரி சிரேஷ்ட தமிழாசிரியை செல்வி மாகிறித்தா வேதநாயகம் அவர் களுக்கும், நெறி பயின்றபின் கல்வியியல் அம் சங்கள் பற்றிக் கூறிய தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் திரு உ. நவரத்தினம் அவர் களுக்கும் எனது நன்றிகள்.*

❑

# சுவாமி விபுலாநந்தரின் கல்விச் சிந்தனைகள்

கிழக்கிலங்கை தமிழ் உலகிற்கு வழங்கிய ஞானதீபம் அருட்திரு. விபுலாநந்த அடிகளார். தனக்கென வாழாது பிறர்க்குரியாளனாக வாழ்ந்த அறிவுப் பெருந்தகை. அடிகளாரின் பணிகள் அளவிடற்கரியன. தமிழ்மொழியையும் சைவத்தையும் தமது இரு கண்களாகக் கொண்டமைந்த அன்னாரது வாழ்க்கை எமது தமிழ்கூறும் நல்லுலகத்துக்குத் தலை சிறந்த எடுத்துக்காட்டாக, வழிகாட்டியாக அமைந்து விளங்குகின்றது. அடிகளார் இவ்வுலகில் வாழ்ந்த காலம் 55 வருடங்களேயாயினும் அவர்தம் காலத்தில் சாதித்தவைகளோ பலப்பல. ஆசிரியராக, அதிபராக, இராமகிருஷ்ண சங்கப்பாடசாலைகளின் முகாமையாளராக, நூலாசிரியராக, புரட்சிமிக்க சமூக சேவகராக, மொழியியலாளராக ஆற்றிய சேவை ஏட்டிலடங்காதவை. மற்றவர்கள் சாதித்து முடிக்க முடியாத பலவற்றை அடிகளார் தாம் வாழ்ந்த காலத்தே சாதித்துள்ளார். யாழ்நூலும், அன்னாரினால் ஆரம்பிக்கப்பட்ட கல்விக்கூடங்களும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். அன்னாரின் பெருமைகளை, சிறப்புக்களைப் பூரணமாக நாம் இது வரையும் அறிந்து கொள்ளவில்லையென்றே கொள்ளல்வேண்டும்.

விபுலாநந்த அடிகளாரது வாழ்க்கைப் பணிகளில் பாரிய சமூக, கல்வி, கல்வி கலாச்சாரத் தாக்கங்களையும் அரும் பெறுபேறுகளையும் கொண்டிருந்தமை, அன்னாரது கல்விப்பணிகளும் கல்விசார் சிந்தனைகளுமாம்.

> சுவாமி விபுலாநந்தர் வாழ்ந்த காலம் ஆங்கிலேயரது ஆட்சியின் உச்சக் கட்டம். எமது நாட்டின் கல்லூரிகள் பல கிறிஸ்தவ சங்கங்களின் நிருவாகத்தின் கீழிருந்த காலம். எமது பாரம்பரிய இந்து சமயம், பண்பாடு, கலாசாரம் என்பன ஒதுக்கப்பட்டிருந்த காலம் — ஆங்கில மொழி, கிறிஸ்தவ சமயம் மேனாட்டுக் கலாசாரம் ஆகியவைகள் மேலாதிக்கம் செலுத்திய காலம் — கல்வி கற்ற இளைஞர்கள் பட்டம், பதவி, செல்வாக்கு ஆகியவற்றைப் பெறுவதற்காக தமது சமயத்தையே மாற்றிக் கொள்ளத் தலைப்பட்டிருந்த காலம் — வசதிகள், செல்வாக்கு அற்றவர்கள் உயர்கல்வி பெற முடியாதிருந்த காலம் — கிராமப் புறங்களில் உயர் கல்வி, ஆங்கிலக் கல்வி, விஞ்ஞானக் கல்வி பெறும் வாய்ப்பு வசதிகள், கல்விக்கூடங்கள் இல்லாதிருந்த காலம் — இக்காலகட்டத்தில் அடிகளாரது மனதில் ஏற்பட்ட சிந்தனைப் புரட்சி கிழக்கிலங்கையில் கல்விப் புரட்சிக்கும் சமுதாயப் புரட்சிக்கும் வழிகோலியது என்று கூறலாம்.


க. தியாகராசா
இலங்கை கல்வி நிர்வாக சேவை.


கல்வித்துறையினைப் பொறுத்த வரையில் மாணவராய் இருந்த காலந் தொட்டு தனது வாழ்க்கையையே அர்ப்பணித்துத் தனக்குள்ளே சிந்தித்து அச்சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுத்து வரலாறு படைத்த பெருமை அடிகளாரைச் சாரும்.

மிகத் தெளிவானதும் நடைமுறைக்கு ஏற்றதும் அவர் வாழ்ந்த காலத்தில் மிக வேண்டப்பட்டவையுமான கல்விசார் எண்ணக்கருத்துகளை வெளியிட்டவர் அடிகளார். எமது நாடு கண்ட தலை சிறந்த கல்வியியலாளர்களில் அடிகளாருக்குத் தனி இடம் உண்டு. கல்வி பற்றிய அவரது சிந்தனைச் சிறப்பிற்கு அன்னார் இளமையிலிருந்து பெற்ற கல்வியும் இயல்பாக அவரிடம் நிறைந்திருந்த கேள்வி ஞானமும், சிந்தனைத் தெளிவும், மதிநுட்பமும், பேரார்வமும், இராமகிருஷ்ண சங்கத் தொடர்பும், சிறந்த ஆசிரியர்களின் கீழ் பாடம் கேட்ட பண்பும், சிறந்த தமிழ் அறிஞர்களது தொடர்பும் காரணங்களாக அமைந்தன. பன்மொழி அறிவும் இலக்கியம், விஞ்ஞானம், கணிதம், இசை, கலை, சமயம் ஆகிய துறைகளில் அன்னாருக்கிருந்த நாட்டமும் அத்துறைகளில் அவர் பெற்ற பயிற்சியும் நுண்ணறிவும் அன்னாரது கல்விச் சிந்தனைத் தெளிவிற்கு உதவியாய் அமைந்தன.

தமிழ், ஆங்கிலம், கிரேக்கம், யவனம், இலத்தீன், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை நன்கு கற்றவர் அடிகளார். மாணவர் பராயத்தில் குஞ்சித்தம்பி ஆசிரியர், வைத்திலிங்கதேசிகர், பொனல் அடிகளார் ஆகியோ-

ரின் கீழ்பெற்ற அறிவும் பின்னர் பண்டிதர் கந்தையாபிள்ளை, வித்துவான் எஸ். தாமோதரம்பிள்ளை, சுன்னாகம் குமாரசாமிப்புலவர் போன்றவர்களது தொடர்பும் அடிகளாரது கல்வியறிவு உரம் பெற்றதொன்றாக அமைய வழிவகுத்தன.

கல்வித்துறையில் அவரது ஆசிரியர் பணி மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும், கல்முனை கத்தோலிக்க மிஷன் பாடசாலையிலும் கொழும்பு அரசினர் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் புனித சம்பத்திரியார் கல்லூரியிலும் இடம் பெற்றது. மானிப்பாய் இந்துக்கல்லூரியும், திருகோணமலை இந்துக்கல்லூரியும், மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயமும் அன்னாரை அதிபராகக் கொண்டு விளங்கும் பேற்றினைப் பெற்றிருந்த கல்லூரிகளாகும். விவேகானந்த சபையின் பொறுப்பிலுள்ள பாடசாலைகளைப் பொறுப்பேற்றதுடன் இராம கிருஷ்ண சங்கத்தின் கீழ் புதிய பாடசாலைகள் பலவற்றை ஆரம்பித்து அவற்றின் முகாமையாளராகவும் விளங்கினார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் (1931 - 1933) இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் (1943-1947) முதற் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து சிறப்பித்தார்.

> மிகத் தெளிவானதும் நடைமுறைக்கு ஏற்றதும் அவர் வாழ்ந்த காலத்தில் மிக வேண்டப்பட்டவையுமான கல்விசார் எண்ணக்கருத்துகளை வெளியிட்டவர் அடிகளார். எமது நாடு கண்ட தலை சிறந்த கல்வியியலாளர்களில் அடிகளாருக்குத் தனி இடம் உண்டு. கல்வி பற்றிய அவரதுசிந்தனைச் சிறப்பிற்கு அன்னார் இளமையிலிருந்து பெற்ற கல்வியும் இயல்பாக அவரிடம் நிறைந்திருந்த கேள்வி ஞானமும், சிந்தனைத் தெளிவும், மதிநுட்பமும், பேரார்வமும், இராமகிருஷ்ண சங்கத் தொடர்பும், சிறந்த ஆசிரியர்களின் கீழ் பாடம் கேட்ட பண்பும், சிறந்த தமிழ் அறிஞர்களது தொடர்பும் காரணங்களாக அமைந்தன. பன்மொழி அறிவும் இலக்கியம், விஞ்ஞானம், கணிதம், இசை, கலை, சமயம் ஆகிய துறைகளில் அன்னாருக்கிருந்த நாட்டமும் அத்துறைகளில் அவர் பெற்ற பயிற்சியும் நுண்ணறிவும் அன்னாரது கல்விச் சிந்தனைத் தெளிவிற்கு உதவியாய் அமைந்தன.

அவர் சித்தியெய்திய பரீட்சைகளைப் பொறுத்தவரையில் கேம்பிறிஜ் சீனியர் பரீட்சை (1908), அரசினர் ஆசிரியர் பயிற்சி (1911-1912), அரசினர் பொறியியற் கல்லூரியில் டிப்ளோமாப் பட்டம் (1916), மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் (1916), இலண்டன் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான மாணிப்பட்டம் (1920) ஆகியன குறிப்பிடலாம்.

அன்னார் வகித்தவேறு பதவிகளைப் பொறுத்தவரையில் மைலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தில் வெளியிடப்பட்ட இராமகிருஷ்ண விஜயம் (தமிழ்), வேதாந்த கேசரி (ஆங்கிலம்) 1922, மாயாவதியில் பிரபுத்த பாரத (ஆங்கிலம்) (1940-1941) ஆகிய பத்திரிகைகளுக்கு ஆசிரியராக விளங்கியமையும் மேற்கூறிய வேறுபட்ட கல்வித்துறை சார்ந்த அனுபவங்களும் அத்துறையில் அவர் முன்னர் பெற்றிருந்த பயிற்சிகளும் அடிகளாரது கல்வி பற்றிய சிந்தனைகளுக்கு வலுவும் வடிவமும் அமைத்துக் கொடுத்தனவென்றே கூறவேண்டும்.

கல்வித்துறையின் பல்கோணங்களில் அடிகளாரது சிந்தனைகள் வியாபித்திருந்தன. இலக்கியம், இசை, நாடகம், சமயக்கல்வி, விஞ்ஞானக் கல்வி, உடற்கல்வி, தொழிற் கல்வி, கற்பித்தல் முறைகள், ஆசிரியர் பயிற்சி ஆகிய துறைகளில் அடிகளார் தெளிவான, ஆழமான கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள்.

பத்திரிகை ஆசிரியராக இருந்த காலத்தில் அன்னார் எழுதிய கட்டுரைகள் வாயில்களாகவும் கல்வி ஆராய்ச்சிக் குழு, பாடவிதானச் சபை, பரீட்சைச் சபை ஆகியவற்றில் அங்கத்தவராக இருந்த காலத்திலே தெரிவித்த அபிப்பிராயங்கள் மூலமாகவும், தலைமை வகித்த மகாநாடுகளில் அவர் வெளியிட்ட கருத்துக்கள் மூலமாகவும் அடிகளாரது கல்விக் கருத்துக்களை எம்மால் அறிய முடிகின்றது.

அடிகளாரது கல்விச் சிந்தனைகளுக்கு அவர் பெற்ற கல்வியும், அவர் பெற்ற அனுபவங்களும், பயிற்சிகளும், வகித்த பதவிகளும் அடிப்படைகளாக அமைந்தன போன்று அன்னார் வாழ்ந்த காலமும் காரணமாக அமைந்தனவென்றே கொள்ளல் வேண்டும்.

சுவாமி விபுலாநந்தர் வாழ்ந்த காலம் ஆங்கிலேயரது ஆட்சியின் உச்சக்கட்டம். எமது நாட்டின் கல்லூரிகள் பல கிறிஸ்தவ சங்கங்களின் நிருவாகத்தின் கீழிருந்த காலம். எமது பாரம்பரிய இந்து சமயம், பண்பாடு, கலாசாரம் என்பன ஒதுக்கப்பட்டிருந்த காலம் - ஆங்கில மொழி, கிறிஸ்தவ சமயம் மேனாட்டுக் கலாசாரம் ஆகியவைகள் மேலாதிக்கம் செலுத்திய காலம் - கல்வி கற்ற இளைஞர்கள் பட்டம், பதவி, செல்வாக்கு ஆகியவற்றைப் பெறுவதற்காக தமது சமயத்தையே மாற்றிக்கொள்ளத் தலைப்பட்டிருந்த காலம் - வசதிகள், செல்வாக்கு அற்றவர்கள் உயர்கல்வி பெற முடியாதிருந்த காலம் - கிராமப் புறங்களில் உயர்கல்வி, ஆங்கிலக் கல்வி, விஞ்ஞானக் கல்வி பெறும் வாய்ப்பு வசதிகள், கல்விக்கூடங்கள் இல்லாதிருந்த காலம் - இக்காலகட்டத்தில் அடிகளாரது மனதில் ஏற்பட்ட சிந்தனைப் புரட்சி கிழக்கிலங்கையில் கல்விப் புரட்சிக்கும் சமுதாயப் புரட்சிக்கும் வழிகோலியது என்று கூறலாம்.

அடிகளாரது வாழ்வின் முக்கிய பணி இப்பகுதிகளில், தாம் பொறுப்பேற்ற பாடசாலைகளிலும், புதிதாகத் தோற்றுவித்த பல பாடசாலைகளிலும் புகுத்திய கல்விக் கோட்பாடுகளிலும் கற்பித்தல் முறைகளிலும் பரிணமித்திருந்ததைக் காணலாம். அடிகளாரது கல்விப்பணி இப்பகுதிகளில் சைவத்தையும் தமிழையும் தழைத்தோங்-

கச் செய்தது என்பது மறக்க முடியாத உண்மையாகும். அடிகளாரது தலைமைத்துவத்தின் கீழ் பெருவளர்ச்சியடைந்த கல்லூரிகளுள் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரர் வித்தியாலயமும், திருகோணமலை இந்துக் கல்லூரியும், மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயமும் குறிப்பிடும்படியானவையாகும் இவற்றுள் சிவானந்த வித்தியாலயம் அவரால் ஆரம்பிக்கப்பட்டு அவரால் கண்ணென வளர்க்கப்பட்ட கலாசாலையாகும் - அவரது இலட்சியப் படைப்பென்று கூறலாம் - அன்னாரின் கல்வித் தத்துவங்களின் பரிசோதனைக்கூடமாக வளர்க்கப்பட்ட கல்லூரியாகும். அவரது கல்விச் சிந்தனைகள் பல நடைமுறைப்படுத்தப்பட்ட ஒப்பற்ற கல்வி நிலையம்.

அடிகளாரது முகாமைத்துவத்தின் கீழுள்ள பாடசாலைகளில் மாணவர்களிடையே அருகிவிட்ட தேசப்பற்று, சமயப்பற்று, மொழிப்பற்று ஆகியவற்றை ஊட்டி வளர்க்கும் பணியில் இப்பாடசாலைகளின் அன்றாட நியமங்களும் கல்விப் போதனைகளும் அமைந்திருந்தன. கல்வித் துறையிலே பெரும் தீர்க்கதரிசியாக அடிகளார் விளங்கினார். அன்னார் வகுத்த கல்வித்திட்டம் தேசியத்தையும், தேசிய கருத்தொருமைப்பாட்டையும் வளர்க்கும் கருவூலமாக அமைந்தன என்று கூறலாம்.

கல்வித்துறையில் அவரது ஆசிரியர் பணி மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும், கல்முனை கத்தோலிக்க மிஷன் பாடசாலையிலும் கொழும்பு அரசினர் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் புனித சம்பத்திரியார் கல்லூரியிலும் இடம் பெற்றது. மானிப்பாய் இந்துக்கல்லூரியும், திருகோணமலை இந்துக்கல்லூரியும், மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயமும் அன்னாரை அதிபராகக் கொண்டு விளங்கும் பேற்றினைப் பெற்றிருந்த கல்லூரிகளாகும். விவேகானந்த சபையின் பொறுப்பிலுள்ள பாடசாலைகளைப் பொறுப்பேற்றதுடன் இராமகிருஷ்ண சங்கத்தின் கீழ் புதிய பாடசாலைகள் பலவற்றை ஆரம்பித்து அவற்றின் முகாமையாளராகவும் விளங்கினார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் (1931 — 1933) இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் (1943 — 1947) முதற் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து சிறப்பித்தார்.

சுவாமி விவேகானந்தரின் பிரசங்கங்களையும், மகாகவி பாரதியின் தேசிய கீதங்களையும் மாணவரிடையே புத்துணர்வினையும், புத்தாக்கத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதற்குப் பயன்படுத்தியவர் அடிகளார். சமயம், மொழி, கலை, தொழிலின் மகத்துவம் ஆகியன அடிகளாரின் கல்விச்சிந்தனையில் முக்கிய இடம் வகித்தன. அடிகளாரின் கல்விக் கோட்பாடு தேசியக் கல்வி முறையாகும். விஞ்ஞானக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை மெய்ஞ்ஞானக் கல்வியுடன் கலந்து போதித்தவர் அடிகளார். அவரது கல்விச் சிந்தனையில் சமயப் பணியும் தமிழ்ப் பணியும் சங்கமித்துப் பரிணமித்தன. வசதி குறைந்த மாணவர்களுக்கு உயர் வகுப்புவரை ஆங்கிலக் கல்வியும் விஞ்ஞானக் கல்வியும் பெறும் வாய்ப்பினை ஆக்கிக்கொடுத்த பெருமை அடிகளாரையே சாரும். சாதிகுல வேறுபாடுகள் அற்ற நிலையில் மாணவர்கள் கல்வியினைப் பெறத்தக்க "சூழலை" தமது அரவணைப்பிலிருந்த பாடசாலைகளில் ஏற்படுத்தி வெற்றிகண்டவர் அடிகளார்.

வெறும் வகுப்பறைக் கற்பித்தல் மாத்திரமன்றி மனிதனை மனிதனாக்கும் கல்வியை, ஒழுக்கமும் சீலமும் இளமை முதல் விரவி நின்ற கல்வியில் வழங்கியது அன்னாரது கல்விக்கோட்பாடு - சுவாமி விவேகானந்தரது ஆளுமைக் கல்வி ஒழுக்கமேன்மைக் கல்வி - The man making Character Building Education - அடிகளாரது கல்விச் சிந்தனையின் ஒப்பற்ற இலக்குகளாக அமைந்திருந்தன. மகாத்மாகாந்தி அடிகளின் ஆதாரக் கல்வி முறையும், மகாகவி ரவீந்திரநாத்தாகூரின் சர்வதேசக் கல்வியும் அடிகளாரது கல்விச் சிந்தனைகளுக்கு அத்திவாரங்களாக அமைந்து காணப்பட்டன. அன்னாரது செல்லப்பிள்ளையான சிவானந்தா வித்தியாலயம் ஈழத்துச் சாந்திநிகேதனாக விளங்கியது பலரறிந்த உண்மை - தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளின் பயிற்சி தமது மாணவர்களுக்கு இருக்கவேண்டும் என்பது அடிகளாரது கருத்தாகும். மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் கலைஞானமும் அடிகளாரது கல்விச் சித்தாந்தம். ஏழைச் சிறார்களது ஏற்றம் அன்னாரது திறமைகளை வெளிப்படுத்தி அவர்களை அவைகளின் முன் அமர்த்துதல் அவரது கல்விச் சிந்தனையின் இலட்சியம். அடிகளார் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து கல்லடி உப்போடையில் நிறுவி வளர்த்த மாணவர் இல்லம் அன்னாரது இலட்சியத்தின் மாபெரும் படைப்பு. அடிகளாரது கல்விச் சிந்தனைகளின் விளைவாக, அவரது சிந்தனைகள் செயல் உருப்பெற்றதின் விளைவாக கிழக்கிலங்கையில் ஒரு சமூகப்புரட்சியே ஏற்பட்டது என்று கொள்வது சாலவும் பொருந்தும். எம் நாட்டுச் சமயம், கல்வி, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றிற்கு புத்துயிர் ஊட்டி புதிய பொலிவான வரலாற்றை ஏற்படுத்தியவர் அடிகளார்.

அடிகளாரது கல்வி சார்ந்த சிந்தனைச் சிதறல்களை அன்னாரது எழுத்தோவியங்கள் தெளிவாக எடுத்து இயம்புகின்றன - கல்வியுடன் சம்பந்தப்பட்ட துறைகள் சிலவற்றையும் அவரது கருத்துக்களையும் கீழே தரமுனைகின்றேன். அடிகளார் ஒரு தேசிய வீரர். தான் பிறந்த நாட்டையும் தமது மொழியினையும் பெரிதும் நேசித்தவர் - கல்வியின் மூலமாக சமயப்பணி செய்ய முற்பட்டவர் - சாதிவேற்றுமையைக் கண்டு வருந்தியவர் - தன்னால் முடிந்தவரை சாதி வேறுபாடுகளை ஒழிக்கப் பாடுபட்டவர். சிதம்பரத்திலிருக்கும் பொழுது சேரிப் பாடசாலைகளை நிறுவி தாழ்த்தப்பட்ட சிறுவர்களுக்கு -ஆதி

திராவிடர்களுக்கு கல்விப் போதனையும் பிற உதவிகளும் துணிந்து வழங்கியவர் - தற்காலக் கல்வி பற்றியும் தொழிற் கல்வியின் அவசியம் பற்றியும் அடிகளார் கூறுகின்றார்:-

"தற்காலக் கல்வி ஒரு ஏட்டுச்சுரைக்காய் - தற்காலத்தில் போதிக்கப்படும் கல்விமுறை குறைகள் பல பெற்றிருப்பதனாலேயே கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பத்து வருடங்கள் பள்ளியில் படித்து சர்வகலாசாலையால் தந்த யோக்கியதாபட்டம் பெற்றவர்களும் எவ்வேலைக்குச் செல்வதெனத்திகைக்கின்றனர். அவர்கள் காசு அதிகம் செலவிட்டுக் கற்ற கல்வி சிறிதும் அவர்களுக்கு உபயோகப்படுவதில்லை. கற்ற கல்வி கைத்தொழிலே தேனும் செய்வதற்குப் பயன்படுவதில்லை - அதன் பயனாக நம் மாணவர்கள் சுவல்ப சம்பளத்தில் குமாஸ்தா வேலைக்கும் போட்டி போடுகின்றனர். அதையே பெரும் கௌரவமாக நினைக்கின்றனர்" - கைத்தொழில் பல பயிற்றும் கல்வி வேண்டும் என்பது அடிகளாரது கல்விச் சிந்தனையின் ஒரு பிரதான அம்சமாகும். அன்னாரது கல்வித்தத்துவத்தில் தொழில்சார் கல்விக்கு பெரும் முக்கியத்துவத்தை வழங்கியிருந்தார்" தொடர்ந்து அடிகளார் கூறுகின்றார்.

"நம் நாடு தற்காலம் கைத்தொழில்களில் பயிற்சி பெற்றோரையே பெரிதும் வேண்டி நிற்கின்றது. வியாபாரங்களை நடத்தவும் நாட்டிலுள்ள விளைபொருள்களை தகுந்தபடி விளைவித்து அவற்றை நம் நாட்டவர்க்கு பயன்படுமாறு செய்யவும் போதுமான அறிவு நிறைந்தவர்கள் வேண்டும் -

நம் சிறுவர்கள் வெறும் பட்டங்களைப் பெறுவதற்குப் படிப்பதை நிறுத்தி தமக்குப் பிழைப்பைக் கொடுக்கக்கூடியதான கைத்தொழில்களைக் கற்றல் வேண்டும் - நாற்காலியின் மேல் உட்கார்ந்து நாலெழுத்தெழுதி வாழுவதைவிட நான் கிடத்தில் கஷ்டப்பட்டு சம்பாதிப்பது மேல் என நினைக்கவேண்டும். நமக்கு வேண்டிய பொருள்களுக்கு பிறநாட்டார் உதவியை நாடி அவர்கள் அனுப்புவதை நம்பியிருத்தல் கூடாது. பிறர் உதவியை நாடி எழுந்து உட்காருபவன் நொண்டி"-

அடிகளாரின் கருத்துக்களில் ததும்பி நிற்கும் தேசியம் நமக்கு அன்னார் பெரிதும் மதித்த புலவர் பாரதியை நினைவூட்டவில்லையா?

அப்படியாயின் எம்மாதிரிக் கல்வி இக்காலத்திற்கு அவசியம் என்பது கேள்வி. - விடையினைத் தருகின்றார் அடிகளார்:-

"சிறுவயதிலே எழுதவும் படிக்கவும் தெரியவேண்டும். அத்துடன் நல்லொழுக்கமும் தெய்வ பக்தியும் ஊறவேண்டும். இதற்கு குருகுலக் கலாசாலையே அவசியமாகும். சிறு வயதிலே இம்மாதிரிக் கல்வி கற்ற பிறகு தன் குலத்தொழிலோ அல்லது சிறுவருக்கு எத்தொழில் கற்கவேண்டுமென்ற ஆர்வமுண்டாகின்றதோ அதனைப் போதிக்க வேண்டும். முற்காலத்தில் நடைபெற்றுவந்த கல்வி முறையில் அறிவுப் பயிற்சியும் தொழிற் பயிற்சியும் ஒருங்கே அமைந்திருந்தன. அம் முறையையே நாம் பின்பற்ற வேண்டும் - அப்போது சாதிச் சண்டைகள் ஒழியும் - அமைதியுண்டாகும்" - நம் நாட்டில் உள்ள இளைய பரம்பரையினர் மாத்திரம் கல்வி கற்றவர்களாக இருத்தல் போதாது. சகலருக்கும் கல்வி வேண்டும் அறிவு போதிக்கப்படல் வேண்டும் - இது அடிகளாரது விருப்பம். - அடிகளார் பேசுகின்றார்:-

"நமது நாட்டில் எழுத வாசிக்கத் தெரியாத பெண்பாலார் பலர் இருக்கின்றார்கள். ஆடவர் பலர் இருக்கின்றார்கள். இவர்களுக்கு அறிவமுதம் ஊட்டவைத்தல் எவ்வாறாகும்,? இதற்கு ஒரு வழியுண்டு. கற்றலைப் போலவே கேட்டலும் சிறப்புடையது. முன்னாளில் ஔவைப் பிராட்டியார் ஏழைகள் அளித்தகூழமுதையுண்டு. அவர்களுக்கு அறிவமுதத்தை யூட்டி வைத்தாரல்லவா? உப்புக்கொரு பாட்டும் புளிக்கொரு கவியும் சொன்ன எம்மன்னை.... சென்றவிடமெல்லாம் அறிவும் பின் தொடர்ந்து சென்றது - ஔவையார் செய்த கைங்கரியத்தைச் செய்வதற்கு அறிவாலும் வயதாலும் முதிர்ந்த அன்னைமார் முற்பட்டுவரலாகாதா?

மாணவர் கல்வியில் ஆசிரியர் வகிக்கும் பங்கினை அடிகளார் - மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். ஆண்டவனின் கட்புல வெளிப்பாடாக விளங்குபவன் ஆசிரியன் - மாணவரது மனக்கண்முன் ஒரு சிறந்த நன் மாதிரியாக Model ஆக விளங்கவேண்டியவன் - ஆசிரியரது பொறுப்பு மிகப் பாரியதாகும். ஆசிரியர் மாணவரில் காணப்படும் நல்லம்சங்களைக் காணக்கூடியவராகவும், நற்பண்புகளை வெளிக்கொணர்ந்து முறையாக வளர்க்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

மாணவரில் காணப்படும் குறைபாடுகளை அடிக்கடி சுட்டிக்காட்டல் கூடாது. ஆசிரியத் தொழிலுக்கு மன நூற்பயிற்சி இன்றியமையாதது. குறை பாடுகளை சுட்டிக்காட்டுவதால் நன்மைகள் எதுவும் ஏற்படாது. நல் நடத்தை, பயிற்றுவிக்கக்கூடியதொன்று. பேச்சினால் அல்ல நடத்தையினால் - முன்மாதிரிகையினால் - குருகுலக் கல்வியில் அடிகளாருக்கு மிகுந்த மதிப்பும் ஈடுபாடும் காணப்படுகின்றது. அன்னார் ஆரம்பித்து நடாத்திய பாடசாலையில் இம்முறையினை அடியொற்றிய கல்வி புகட்டலை அவர் வழங்கியுள்ளார். - குரு-

> அடிகளாரது முகாமைத்துவத்தின் கீழுள்ள பாடசாலைகளில் மாணவர்களிடையே அருகிவிட்ட தேசப்பற்று, சமயப்பற்று, மொழிப்பற்று ஆகியவற்றை ஊட்டி வளர்க்கும் பணியில் இப்பாடசாலைகளின் அன்றாட நியமங்களும் கல்விப் போதனைகளும் அமைந்திருந்தன. கல்வித் துறையிலே பெரும் தீர்க்கதரிசியாக அடிகளார் விளங்கினார். அன்னார் வகுத்த கல்வித்திட்டம் தேசியத்தையும், தேசிய கருத்தொருமைப் பாட்டையும் வளர்க்கும் கருவூலமாக அமைந்தன என்று கூறலாம்.

குலக்கல்வி மாணவருக்கு ஒரு முழுமையான பூரணத்துவமான கல்வியை வழங்குகின்றதென்பது அடிகளாரது கருத்தாகும் - அறிவுத்துறையிலும் ஆத்மீகத்துறையிலும் மாத்திரமன்றி ஒழுக்கத்துறையிலும் உடல் வளர்ச்சித்துறையிலும் குருகுலக் கல்வி மாணவருக்கு வேண்டிய அனைத்துப் பயிற்சிகளையும் அறிவினையும் வழங்குகின்றது - உபநிடதங்களே வேதாந்தக் கருத்துகளுக்கான நீர் ஊற்றுக்கள் - குருகுலக் கல்வியின் பின்வரும் நான்கு சிறப்பு அம்சங்களும் அடிகளாரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

> மாணவர் கல்வியில் ஆசிரியர் வகிக்கும் பங்கினை அடிகளார் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். ஆண்டவனின் கட்புல வெளிப்பாடாக விளங்குபவன் ஆசிரியன் — மாணவரது மனக்கண்முன் ஒரு சிறந்த நன் மாதிரியாக விளங்கவேண்டியவன் — ஆசிரியரது பொறுப்பு மிகப் பாரிய தாகும். ஆசிரியர் மாணவரில் காணப் படும் நல்லம்சங்களைக் காணக் கூடியவராகவும். நற்பண்புகளை வெளிக்கொணர்ந்து முறையாக வளர்க்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

1. கல்வி போதிக்கப்படும் சுதந்திரமான கட்டுப்பாடுகளற்ற சூழல்.
2. அதி உன்னதமான அறிவும் ஒழுக்கவிவேகமும் கொண்ட ஆசிரியர்கள்.
3. பெரும்பான்மையும் செய்முறையிலமைந்த போதனாமுறை - மாணவர்களை ஆசிரியர் விபரங்களையும் தொடர்புகளையும் தாமே அறிந்து கொள்வதற்கு வழிகாட்டும் கற்பித்தல் முறை.
4. பெரிதும் பரந்த கலைத்திட்டம் - தற்காலத்திலுள்ள வரையறைகள் மிக்க நேரசூசிகளும், பரீட்சைகளும், நெருக்கடியான வகுப்பறைகளும் இதற்கு முரணானவை என்பது அடிகளாரது முடிவு.

அடிகளார் கூறிய கல்விமுறை ஒரு பூரணத்துவம் பெற்ற முழுமையான கல்வி முறைமையாகும். உபநிடதங்களில் பேசப்பட்ட முறைமை - அவரது திட்டத்தில் எதுவும் விடப்படவில்லை - எதுவும் மறைக்கப்படவுமில்லை. அது அடிப்படையானது - மாணவரது ஒவ்வொரு வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது. உடல் வளர்ச்சி, உளவளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி இவை ஒவ்வொன்றுக்கும் உரிய இடம் வழங்கப்பட்டதுடன் அவை வளர்ச்சியடைவதற்கும் பூரணத்துவம் பெறுவதற்குமான வழிவகைகள் அமைக்கப்பட்டிருந்தன - அடிகளாரது கல்வி முறையில் அறிவுவளர்ச்சியும் உரம் வாய்ந்த உடல் வளர்ச்சியும் ஆன்மீக அடிப்படையில் அமைந்த ஒழுக்க வளர்ச்சியும் நுண்ணிய கலை உணர்வு வளர்ச்சியும் சீராக இயைந்து இடம்பெற்றிருந்தன. படிப்பு - விளையாட்டு - இறைவணக்கம் - இசை அனுபவம் - இப்படியாக அமைந்து விட்டதொன்று அடிகளார் அறிமுகப்படுத்திய கல்வித் திட்டம். உடல் வளர்ச்சிக்கு அவரது கல்வித்திட்டத்தில் மிக முக்கியமான பங்கு அளிக்கப்பட்டிருந்தது. தேகாப்பியாசங்களும் யோகப் பயிற்சிகளும் மாணவரில்லத்தில் சிறப்பு இடம் பெற்றிருந்தன. A Sound mind in a Sounds Body. இது அடிகளாரது திடமான நம்பிக்கை. இரும்பினால் ஆன தசைகளையும் உருக்கிலான நரம்புகளையும் கொண்ட மனிதரை வேண்டி நின்ற சுவாமி விவேகானந்தரின் சீடரல்லவா அடிகளார்!

சுவாமி விவேகானந்தரின் கல்வித் தத்துவங்கள் அடிகளாரது கல்விச் சிந்தனையில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது. நல்லொழுக்கத்தையும் ஆளுமையையும் மனவலுவையும் தன்னம்பிக்கையையும் வளர்க்கும் கல்வியை விவேகானந்தர் வேண்டி நின்றார். ஆங்கிலக் கல்வியும் மே நாட்டு விஞ்ஞானமும் தொழில்நுட்பக் கல்வியும் நாட்டு முன்னேற்றத்துக்கு வேண்டியவை என்றார். அவர் கூறினார்:

"It is a man making Religion that we want. It is the man making theories we want. It is the man making Education all round that we want,"

ஒரு சிறந்த கல்வி அமைப்பு முறையே சகல சமூக நோய்களுக்கும் பரிகாரமாகும். மனிதன் ஒவ்வொருவனும் தெய்வீகத் தன்மையை உடையவனே. கல்வியானது மனிதனில் உள்ள பூரணத்துவத்தின் வெளிப்பாடேயாகும். சுவாமி விபுலாநந்தரது கல்வி பற்றிய கருத்துக்கள் இவையாக அமைந்திருந்ததில் வியப்பில்லையே. விபுலாநந்த அடிகளாரது கல்விமுறை எளிமையானது. ஆயினும் ஆழமானது - தாராளத்தன்மை வாய்ந்தது. செயற்கைக் கட்டுப்பாடுகளற்றது. Knowledge without Conscience is but the ruin of the soul - மனவுணர்வு இல்லாத அறிவு உயிரின் பேரழிவேயாகும்.

இதில் அடிகளாருக்கு பெரும் நம்பிக்கை இருந்தது. அடிகளார் தமிழ் நாட்டில் இருந்த காலத்தில் (1922) அங்கு நிலைபெற்றிருந்த சந்நிதானக் கல்வி இயல்பினை அவர் அமைத்த மாணவர் இல்லத்தில் கையாளானார். மாணவர் இல்லத்தில் சேர்ந்த மாணவன் ஒவ்வொருவனும் ஒரு "சிவனடியாராக" ஒரு "பண்டாரச் சன்னிதானமாக கருதப்படுகின்ற நிலையினைக் காண முடிந்தது - அடிகளாரது கல்விச் சிந்தனைகள் வேதாந்தக்கோட்பாடுகளும் அணுகுமுறைகளும் செல்வாக்குப் பெற்றிருந்ததைக் காண முடிகின்றது.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டுமென்ற பாரதியாரது கூற்றினைப் பெரிதும் ஆதரித்ததுடன் செய்கையிலும் காட்டியவர். தமிழ் அன்னைக்குச் சிறந்த முறையில் பணி செய்ய வேண்டுமாயின் வடமொழி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் நன்கு கற்க வேண்டும் என்பது அடிகளாரது கருத்தாகும். பிறமொழி வெறுப்பு என்பது அடிகளாரிடம் அறவே இருக்கவில்லை. உயிருள்ள மொழியானது பிற மொழித் தொடர்பு கொண்டு அத்தொடர்பின் பயனாய்

தனக்குரிய சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளு-தல் வேண்டும் என்பது அன்னாரது ஆணித்தரமான கருத்தாகும்.

அடிகளாரது கல்வித் தத்துவம் புதுமையானது, எளிமையானது. அது பன்னாள் சிந்தனை, அனுபவம், வைராக்கியம் என்பவற்றின் பயனாக வடிவமைந்த-தொன்றாகும். எமது நாட்டில் அன்று நிலவிய அவலங்-களுக்குப் பரிகாரமாக அடிகளார் வகுத்தமைத்த-தொன்று. தன்னையே மனித சேவைக்கு அர்ப்பணித்த அடிகளார் தான் பிறந்த நாட்டின் விடுதலைக்காக, மேம்பாட்டுக்காக, கல்வியறிவு வேண்டி நின்ற பின்-னடைந்த நிலையிலிருந்த கிராமச் சிறுவர் சிறுமி-களுக்காக, புதையுண்ட நிலையிலிருந்த சமய மறுமலர்ச்-சிக்காக தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக வகுத்தளித்த கல்வித் திட்டம் - கல்விப் பரிசோதனை - அடிகளாரின் இப்பெரிய முயற்சியின் முடிவு, போற்றத்தக்கனவாக அமைந்து விட்டதை இவ்வுலகம் கண்டு மெச்சிநின்றது. அவர் காட்டிச் சென்ற வழியில் வீறுநடை போடும் கலைக்கல்லூரிகளும் அவர் வழித்தோன்றிய பல்துறை விற்பன்னர்களும் அடிகளாரது கல்விச் சிந்தனைகளில் இருந்து பெறப்பட்ட விலை மதிப்பற்ற முத்துக்களாக விளங்குவதை நாம் மறந்து விட முடியாது.

"கற்போரை உயிரெனவே மதித்து
நிதம் கருத்தாகக் கல்வி யூட்டி
மற்றோரை வழிபடுத்தத் திருக்கோயில்
மன்றுதொறுஞ் சொற்பொழிவு செய்து
பொற்புறவே குருகுலந்தந் தேழைகளைப்
புரந்தகுரு மணிபொற் பாதம்
கற்புடையீர்! சிரந்தாழ்த்திக் கவிபாடிப்
போற்றிடுவோம் கருதி வாரீர்!"

| | |
|---|---|
| ஈழகேசரி - 30-10-38. | இந்து சாதனம் - 24-06-35. |
| பிரபுத்த பாரத - 1941. | Hindu Orgen - 18-09-41. |
| விவேகானந்தன் - 1926. | ஈழகேசரி ஆண்டுமலர் - 1939. |
| மேற்றிசைச்செல்வம் - | Hindu Organ - 07 - 08- 41 (Teacher Education) |

செந்தமிழ்ச்செல்வி - "இலக்கியச்சுவை"
செந்தமிழ்ச் செல்வி - பயனுள்ள கல்வி:

நன்றி :சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா மலர்

❑

*"பிரித்தானியர் 1796 ஆம் ஆண்டு இலங்கையைக் கைப்பற்றிய காலம் முதல் ஆங்கிலம் நாட்டின் நிர்வாக மொழியாகச் செயற்பட ஆரம்பித்திருந்தது. எனினும் நாட்டின் கல்வியில் அதனைப் பிரயோகிப்பதற்குரிய முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்தகைய ஒரு நிலை 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் சீர்திருத்தங்களுடனேயே ஏற்படுகின்றதெனலாம். நாட்டின் நிர்வாகச் செலவைக் குறைப்பதற்கான ஒரு வழிமுறையாக உயர் பதவி தவிர்ந்த ஏனைய நடு கீழ் மட்டப் பதவிகள் இலங்கையர் அவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் திறந்து விடப்பட வேண்டுமெனக் கோல்புறூக் பரிந்துரை செய்தார். எனினும் சுதேசிகள் ஆங்கிலத்தில் தேர்ச்சியடைந்தாலன்றி அதனைச் சாதிக்க முடியாதென்பதை உணர்ந்த அவர் அதற்குகந்த வகையில் ஆங்கிலக் கல்வியைப் பரப்பு வதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு சிபாரிசு செய்தார்.*

**பேரா. வி. நித்தியானந்தம்,**
**இலங்கை அரசியற் பொருளாதாரம் 1948 - 1956, பக் 191, 1989**

*"1823 இல் நிறுவனம் பெற்ற வட்டுக்கோட்டைச் செமினரி ஆசியாவில் நிறுவப்பெற்ற நவீன பாணியில் அமைந்த உயர் தரக்கல்லூரிகளில் மிக முற்பட்டது. சுதேசிகளுக்கு ஆங்கிலம் மூலம் உயர்கல்வி போதிக்கும் நிலையம் என்ற வகையில் கீழைத்தேய நாடுகளில் அமைவுற்ற நிலையங்களில் இது மிகப் பழமையானதாகும். இந்தியாவில் 1823 ஆம் ஆண்டிற்கு முன்னர் சில உயர் கல்வி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆனால் அவற்றினை நவீன பாணியில் அமைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகள் என்று எவரும் கூறத்துணியார்."*

**கலாநிதி எஸ். ஜெபநேசன், வட்டுக்கோட்டைச் செமினரியும்**
**பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் மறுமலர்ச்சியும், 1990.**

# இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை

## நோர்வே, எத்தியோப்பியா, இலங்கை - ஓர் ஒப்பீட்டு ஆய்வு


கலாநிதி தி. கமலநாதன்
பீடாதிபதி
பா.தனபாலன்
உப பீடாதிபதி
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி


ஏந்த ஒரு இனத்தினதும், சமூகத்தினதும், எதிர்காலத்திற்கும், நல்வாழ்விற்கும், இருப்பிற்கும் முழு நிறைவான கல்வி இன்றியமையாதது. மானுடவியல் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் இன்று முழு நிறைவான கல்வியின் சகல முகங்களையும் உள்ளடக்கி அபிவிருத்தி நோக்கிய நகர்வுகள் மிக விரைவாக மேற்கொள்ளப்படுகின்றன. உலக நாடுகள் அனைத்துமே நிலையான அபிவிருத்தியை நோக்கிக் கல்வியை முன்னெடுக்கின்றன. ஆனாலும் தற்போது இலங்கைத் தீவின் நிலைமையை ஆராய்கின்ற போது அது தோல்வியுற்ற - பன்முக நெருக்கடியில் சிக்கித் தவிப்பது புலனாகின்றது.

> சிறந்த வாழ்க்கையை நடாத்துவதற்கு வேண்டிய அறிவு, விளக்கம், செயற்றிறன்கள், மனப்பாங்குகளைக் கொண்ட மாணவர்களை எமது கல்வி முறை வழங்கத் தவறிவிட்டது எனவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. புத்தாக்கங்கள் *(Innovative)*, புதிய சீராக்கங்கள் *(Modifications)*, பல்லூடக வெளிப்படுத்தல்கள் *(Multimedia Presentation)*, ஒழுக்கம், மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், சகிப்புத் தன்மை, அன்புடைமை என்பவற்றுடன் கூடிய பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட முழுமையான ஆளுமை விருத்தியை மாணவர்களுக்கு அளிக்க முடியாத பாடசாலைச் சூழ்நிலைகள் நிலவுகின்றன.

காலனித்துவத்திலிருந்து விடுபட்டு 56 வருட சுதந்திரத்திற்குப் பின்னர் தோல்வி உணர்வைக் கொண்டுள்ளோம். தோல்வியுற்ற அரசு, தோல்வியுற்ற மக்கள், தோல்வியுற்ற சமூகங்கள் என்ற உணர்வுகளே முனைப்பாகவுள்ளன. நிகழ்காலம் பற்றியும் எதிர்காலம் பற்றியும் உள்ள நம்பிக்கைதான் சமூக நிலை பற்றிய அளவு கோல் எனின் கடந்த காலத்தில் சிற்சில வெற்றிகளையும் நோக்க வேண்டியுள்ளது. மனித அபிவிருத்திக் குறிகாட்டி, பால்நிலை சமத்துவக் குறிகாட்டி, பெருந்தோட்டங்கள், ஆடைக்கைத்தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வீடமைப்புத் திட்டங்கள் என்பவை வெற்றிகளுக்கான உதாரணங்களாக உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முற்பட்டவை.

பின் வந்த இரு தசாப்தங்களும் தோல்விகளையே தளமாகக் கொண்டவையாகவுள்ளன. இவற்றில் உள்நாட்டு யுத்தம், இளைஞர் கிளர்ச்சிகள், இனவாத அடக்கு முறைகள், விழுமியங்களின் சீரழிவுகள், திறமையற்றவர்களினதும் சுயநலவாதிகளினதும் நிர்வாகம், சந்தர்ப்பவாத அரசியல், தடையற்ற நுகர்ச்சி விளம்பரக் கலாசாரம், கலாசாரச் சீரழிவுகள், வரட்சி, இயற்கைச் சூழல் மாசடைதல், சுனாமித் தாக்கங்கள், ஏற்க முடியாத அளவில் இளைஞர் வேலையின்மை, மாயமாகி நிற்கும் நிரந்தர சமாதானம், வன்முறைகள், போதைப் பொருட் பாவனை, சிறு பாலியற் துன்புறுத்தல்கள் இவை தான் இன்றைய இலங்கைத் தீவின் நிலைகள். இவை தோல்வியுற்ற மாறும் நிலையினூடு நெருக்கடியை எடுத்துக் காட்டுகின்றன.

மேலும் சிறந்த வாழ்க்கையை நடாத்துவதற்கு வேண்டிய அறிவு, விளக்கம், செயற்றிறன்கள், மனப்பாங்குகளைக் கொண்ட மாணவர்களை எமது கல்வி முறை வழங்கத் தவறிவிட்டது எனவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. புத்ததாக்கங்கள் (Innovative), புதிய சீராக்கங்கள் (Modifications), பல்லூடக வெளிப்படுத்தல்கள் (Multimedia Presentation), ஒழுக்கம், மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், சகிப்புத் தன்மை, அன்புடைமை என்பவற்றுடன் கூடிய பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட முழுமையான ஆளுமை விருத்தியை மாணவர்களுக்கு அளிக்க முடியாத பாடசாலைச் சூழ்நிலைகள் நிலவு-

கின்றன. இவற்றிலிருந்து விடுதலை பெற,

1. கல்வியினூடும், ஆசிரியர்களினூடும் வழிகாட்டல் சேவையைப் பிரயோகித்தல்
2. கல்விக்கான வாய்ப்புக்களை விரிவாக்குதல்
3. கல்வியின் தரத்தை மேம்படுத்தி, பாரம்பரிய விழுமியங்களைக் கைக்கொள்ளும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்
4. செயல்முறை மற்றும் தொழில்நுட்பத் திறன்களை விருத்தி செய்தல்
5. ஆசிரியர் அதிபர்களுக்கு வினைத்திறனான பயில்வுகளை வழங்குதல்
6. சுய கற்றல் கற்கக் கற்றல் தேர்ச்சி (Learning to learn), சேர்ந்து வாழ்வதற்குக் கற்றுக் கொள்ளல் (Learning to live together), ஆற்றுவதற்காகக் கற்றுக் கொள்ளல் (Learning to do), அறிந்து கொள்வதற்காகக் கற்றுக் கொள்ளல் (Learning to know), ஆவதற்காகக் கற்றுக் கொள்ளல் (Learning to be) என்ற திறன்களை மாணவர்களுக்கு வழங்குதல்.

என்ற வகையில் சமூக வியாபகமான நோக்குகளின் தீய விளைவுகளில் இருந்து வளரும் பிள்ளைகளைப் பாதுகாத்தல், பெற்றோர் - பிள்ளைகள் - சமூகத்தவர்கள் ஆகியோருக்கு வழிகாட்டி ஆலோசனை வழங்கல் என்பனவும் புதிதாகச் சாதிக்க வேண்டியவையாகவுள்ளன. தற்போதைய எமது கல்வி முறையானது முறைசார் - முறைசாரா ரீதியில் பல்வேறு பரிமாணங்களில் கல்வியில் நிபுணர்களினால் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவர்களின் கண்டுபிடிப்புக்கள் கல்விக் கொள்கை உருவாக்கங்களில் புகுத்தப்படுகின்றன. இத்தோடு ஏனைய நாடுகளின் கல்வி முறைமைகள் ஆராயப்பட்டு அவற்றுள் நல்ல அம்சங்கள் எமது கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகளில் சேர்க்கப்படுகின்றன.

இவ்வடிப்படையில் இன்று சர்வதேச ரீதியாகக் கல்வியியல் ஆய்வுச் செல்நெறிகளில் ஒப்பீட்டு ஆய்வே (Comperative Research) முதன்மையாகவுள்ள சூழலில் நோர்வே, இலங்கை, எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் இடைநிலைப்பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை தொடர்பான எமது ஆய்வை முன்வைக்கின்றோம்.

காலனித்துவத்திலிருந்து விடுபட்டு 56 வருட சுதந்திரத்திற்குப் பின்னர் தோல்வி உணர்வைக் கொண்டுள்ளோம். தோல்வியுற்ற அரசு, தோல்வியுற்ற மக்கள், தோல்வியுற்ற சமூகங்கள் என்ற உணர்வுகளே முனைப்பாகவுள்ளன. நிகழ்காலம் பற்றியும் எதிர்காலம் பற்றியும் உள்ள நம்பிக்கைதான் சமூக நிலை பற்றிய அளவு கோல் எனின் கடந்த காலத்தில் சிற்சில வெற்றிகளையும் நோக்க வேண்டியுள்ளது. மனித அபிவிருத்திக் குறிகாட்டி, பால்நிலை சமத்துவக் குறிகாட்டி, பெருந்தோட்டங்கள், ஆடைக்கைத்தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வீடமைப்புத் திட்டங்கள் என்பவை வெற்றிகளுக்கான உதாரணங்களாக உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முற்பட்டவை.

## வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் (Guidance and Counselling)

உலகளாவிய ரீதியில் இன்று மிக வேகமான சமூக மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன. இம் மாற்றங்கள் குடும்பம், பாடசாலை ஆகிய முக்கிய சமூக அலகுகளைப் பல்வேறு தாக்கங்களுக்கு உட்படுத்துகின்றன. இத்தாக்கங்களின் விளைவாகப் பிள்ளை - பெற்றோர் தொடர்பு குறைதல், ஆசிரியர் - மாணவர் உறவு சிதைதல், பிளவுபட்ட குடும்பங்கள், கலாசாரச் சீரகேடுகள், விழுமியங்களின் சிதைவு, இடைவிலகல், மனித உரிமை மீறல்கள் போன்ற தீய தாக்கங்களுக்கு சமூகங்கள் ஆளாகி மோசமான நிலையில் காணப்படுகின்றன. இந்நிலையிலிருந்து விடுபட உகந்த நெறிமுறையாக வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் சேவை காணப்படுகின்றது. பண்டைய சமூகத்தில் நிலவிய பாரம்பரிய நம்பிக்கைகள், குடும்ப உறவுகள், மூத்தோர் வழிகாட்டல்கள், சமயப் பழக்க வழக்கங்கள் இயல்பாகவே வழிகாட்டல் ஆலோசனை வழங்கும் அம்சங்களாகச் செயற்பட்டன. இன்று இந்நிலை முற்றாக மாற்றமடைந்துள்ளது. இம் மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து இயைபாக்கம் அடையவைக்கும் செயன்முறையாகவும் ஆலோசனை வழிகாட்டல் சேவை அமைகின்றது.

இங்கு வழிகாட்டல் என்பது சரியானதைச் தெரிவு செய்தல் பொருத்தப்பாடு காணல், பிரச்சினை தீர்த்தல் ஆகியவற்றில் ஒருவர் மற்றவருக்கு ஆற்றும் உதவியாகவே வழிகாட்டல் அமைகின்றது. அதாவது வாழ்க்கையின் சகல சந்தர்ப்பங்களிலும், எல்லாப் பருவங்களிலும் சூழலுடன் இயைபாக்கம் காணவும், சுயதிறன் விருத்தி செய்யவும், தீர்மானங்களை மேற்கொள்ளவும், உளவியல் அணுகுமுறை அடிப்படையில் வழங்கப்படும் உதவியாகவும் வழிகாட்டல் பரிணமிக்கின்றது. இப் பரிணமிப்பின் ஒரு முக்கிய கூறாகவே ஆலோசனை வழங்கல் அமைந்துள்ளது. இது ஆலோசனை நாடி தனது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஆலோசகரை நேர்முகமாகச் சந்தித்துப் புரிந்துணர்வுடன் கலந்துரையாடி சுயவிளக்க அடிப்படையில் தனது பிரச்சினைகளைத் தானே தீர்ப்பதற்கான உதவி வழங்கும் அம்சமாக ஆலோசனை வழங்கல் சேவை உள்ளது. இன்று உலகளாவிய ரீதியில் மனிதர்கள் அனைவருக்குமே இவ் ஆலோசனை வழிகாட்டல் சேவை மிக அவசியமாகவுள்ளது. இது உள வளத்துணைக்கான அடிப்படைகளையும் வழங்குகின்றது.

அடிப்படையான உளவளத்துணை இருவருக்கிடையில் ஏற்படும் நெருங்கிய உறவை வளர்க்க உதவுவதற்காகப் பயன்படுகின்றது. தொடர் உள ஆற்றல்கள், திறன்கள், உறவாடும் நிலைகள் இம்முறைமையின் மையங்களாகவுள்ளன. மேலும் அடக்கி ஒடுக்கப்படும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி ஆறுதல் பெறுவதற்கு ஒரு பாதுகாப்பான சூழலையும் இது உருவாக்குகின்றது. இவ்வாறான செயற்பாட்டில் உளவியல் விழிப்புணர்வும், உள்ளார்ந்த ஆற்றலும், ஆளுமை வளர்ச்சியும் ஏற்படுகின்றது. மன நலவியலில் (Mental Hygine) புத்தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றது. இவ்வகையில் பாடசாலைக் கல்வியுடன் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் சேவையும் மாணவர்களுக்கு மிகுந்த அவசியமாக இன்றைய நிலையில் உள்ளது.

### பாடசாலை மாணவர்களுக்கு வழிகாட்டுதலின் முக்கியத்துவம் (*Importance of Guidance*)

1. தற்போது கல்வியின் நோக்கம் விரிவடைந்துள்ளது. மாணவர்களது ஆளுமையைப் பல பரிமாணங்களில் விருத்தி செய்ய வேண்டியுள்ளமை
2. விரைவாக மாறிவரும் சூழ்நிலையுடன் சிறந்த, உயர் நிலைப்பட்ட பொருத்தப்பாட்டினைப் பெறும் திறன்களை அபிவிருத்தி செய்ய
3. ஒவ்வொரு தனிப்பட்ட மாணவர்களது தேவைகள், விருப்பங்கள், நாட்டங்கள் ஆகியவற்றுடன் கல்வியை இணைத்துச் செல்வதற்கு
4. மாணவர்களது கல்வியை இடையூறு செய்யும் காரணிகளைக் கண்டு பிடித்து நீக்குவதற்கு
5. கல்விக்கும், எதிர்காலத் தொழில் வழிகாட்டலுக்குமான ஆற்றல்களைப் பெருக்குவதற்கு
6. மாணவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள், மனமுறிவுகள், தாழ்வு மனப்பான்மை, கவலைகள், இழப்புக்கள் போன்றவற்றிலிருந்து மீள்வதற்கும், சமூகத்தில், நாட்டில் எதிர்கால நற்பிரசைகளாக மாணவர்களை உருவாக்கவும் வழிகாட்டுதல் மிக முக்கியமாகக் கொள்ளப்படுகின்றது.

மேற்கூறியவற்றிலிருந்து குறிப்பாக இடைநிலைப் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு உலகளாவிய ரீதியில் அபிவிருத்தியடைந்த நோர்வே, இடைநிலை அபிவிருத்தியடைந்து வரும் இலங்கை இதைவிட அபிவிருத்தியில் பின்னோக்கியிருக்கும் எத்தியோப்பியா ஆகிய நாடுகளை ஒப்பீட்டு ஆய்வு (Comperative Research) அடிப்படையில் அணுகி நீண்ட பயன்பாடுள்ள நோக்கில் இதனை ஒழுங்கமைத்துள்ளோம்.

> வழிகாட்டல் என்பது சரியானதைத் தெரிவு செய்தல் பொருத்தப்பாடு காணல், பிரச்சினை தீர்த்தல் ஆகியவற்றில் ஒருவர் மற்றவருக்கு ஆற்றும் உதவியாகவே வழிகாட்டல் அமைகின்றது. அதாவது வாழ்க்கையின் சகல சந்தர்ப்பங்களிலும், எல்லாப் பருவங்களிலும் சூழலுடன் இயைபாக்கம் காணவும், சுயதிறன் விருத்தி செய்யவும், தீர்மானங்களை மேற்கொள்ளவும், உளவியல் அணுகுமுறை அடிப்படையில் வழங்கப்படும் உதவியாகவும் வழிகாட்டல் பரிணமிக்கின்றது. இப்பரிணமிப்பின் ஒரு முக்கிய கூறாகவே ஆலோசனை வழங்கல் அமைந்துள்ளது.

## நோர்வே (Norway)

### அமைவிடம்

ஸ்கன்டிநேவிய குடாநாட்டின் மேற்கு மற்றும் வட பகுதியை உள்ளடக்கியதாகவும் ஆட்டிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள "ஸ்வல்பாட்" (Svalbard) என்ற தீர்வுக் கூட்டங்களைக் கொண்டதாகவும் நோர்வே உள்ளது. நோர்வேக்குக் கிழக்காக சுவீடன், பின்லாந்து மற்றும் ரஷ்யா உள்ளன. மேற்கில் வடகடலும் அத்திலாந்திக் சமுத்திரமும் உள்ளன. வடக்கில் பரெண்ட்ஸ் கடல் (Berents Sea) உள்ளது. ஸ்வல்பாட் தீவுக் கூட்டங்களை உள்ளடக்கிய நோர்வே நாட்டின் பரப்பளவு 386,958 சதுர கிலோமீற்றர் கொண்டதாகவும் எத்தியோப்பியாவின் சுமார் மூன்றிலொரு பகுதியாகவும் உள்ளது. பிரதான தரைப்பகுதி, தெற்கிலிருந்து வடமுனைவரை 1752 கிலோமீற்றர் நீளமானதாக உள்ளது. நோர்வேயின் கரையோரைப் பகுதியானது உலகிலேயே மிக நீளமானதும் மிகவும் கரடுமுரடானதும் கிட்டத்தட்ட 50,000 தீவுகளைக் கொண்டிருப்பதும் ஆகும் (Visit norwey) இங்கு 01-01-2000 ஆண்டைய கணக்கின் படி 4,525,000 சனத்தொகை காணப்பட்டது.

### கலாசாரம்

நோர்வே பொதுவாக ஓர் ஓரின நாடாகக் கருதப்படுவதுடன் பரவலான சனத்தொகையைக் கொண்டதாகவும் உள்ளது. இந்நாட்டு மக்கள் ஒரே மொழியை - நோர்வேஜிய மொழி - பேசுபவர்களாகவும், ஒரே கலாசாரத்தைக் கொண்டவர்களாகவும் உள்ளனர். அமெரிக்கா அல்லது எதியோப்பியா அல்லது இலங்கை போன்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது அது இன்னும் ஓரின நாடாகவே உள்ளது. இருந்தபோதும் - அநேகமாக ஏனைய நாடுகள் ஒவ்வொன்றைப் போலவும் நோர்வே இனரீதியாகவும், கலாசார ரீதியாகவும் மக்களின் கலப்பினை எப்பொழுதும் கொண்டிருந்தது. சமி (Sami) மற்றும் பினிஷ் (Finnish) மொழி பேசும் மக்கள் அங்கு சிறுபான்மையினராகவும், அவர்களின் பாரம்பரியம் நீண்டதொரு வரலாற்றைக் கொண்டதாகவும் உள்ளது.

இருந்தபோதும் நோர்வேயில் சிறுபான்மை இனத்தவர்கள் என்ற பிரச்சினை கடந்த 15 வருடங்களாக மட்டும் இருந்து வருகின்றது. இதற்கான பல காரணிகள் இருந்த போதும் ஐரோப்பியர் அல்லாத நாடுகளிலிருந்து குடிவரவே இதற்கான முக்கிய காரணியாக உள்ளது.

பாக்கிஸ்தானியர், துருக்கியர், பெருமளவில் குடியேறினர். தொடர்ந்து அகதிகளாக சிலி, ஈரான், எரித்திரியா, சோமாலியா, இலங்கை, வியட்நாம், துருக்கி, குர்கிஸ்ரான் மற்றும் முன்னைய யுகோசிலாவியா போன்ற நாடுகளிலிருந்து அங்கு வந்தனர். இவர்களில் அனேகர் பெரிய நகரங்களில் குறிப்பாகத் தலைநகரில் குடியேறினர். எனவே இவர்கள் ஒரே அயலில் வசித்தனர். சில நகரங்களின் பகுதிகள் திடீரென உண்மையான பல்லினச் சமூகமாக மாறிவிட்டன - இது வழமைக்குமாறானதாகவும் நோர்வே இனத்தவர்களுக்கு அச்சம் ஊட்டுவதாகவும் இருந்தது. இவ்வாறு குடியேறினவர்களில் 70,000 பேர் முஸ்லிம் ஆவர். மொழி மற்றும் கலாசார வேறுபாடுகள் ஆகிய இரண்டும் ஒன்றிணைவதற்கு ஒரு பாரிய தடையாக இருக்கின்றது. எனவே பாகுபாடு பரந்தளவில் உள்ளதென்பதில் சந்தேகமில்லை. இனவாத சம்பவங்களையும் எம்மால் அவதானிக்க முடிகிறது. நோர்வேயில் இன்று வழிகாட்டல் ஆலோசனைகள் பலர் கையாள வேண்டிய பிரச்சினையாக இது உள்ளது. இப்பிரச்சினை அரசியலிலும், மக்களின் விவாதங்களிலும் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

**சிறுவர்களுக்கான சர்வதேச, பாடசாலைக் கல்வி முறை நோர்வேயில் 250 வருடங்களுக்கு முன்பு அறிமுகப் படுத்தப்பட்டது. 1889 ஆம் ஆண்டிலிருந்து ஏழு வருடகட்டாயக் கல்வி முறை ஏற்படுத்தப்பட்டு 1969 இல் அது 9 வருடங்களாகவும், 1997 இல் 10 வருடங்களாகவும் அதிகரிக்கப் பட்டது. மேல் இடைநிலைப் பாடசாலைக் கல்வி சுயவிருப்பின் அடிப் படையில் அமைந்த போதும் நடைமுறையில் பெரும்பாலும் சகல மாணவர்களும் சமூகமளிக்கின்றனர். கட்டாயமாக பாடசாலைக்குச் செல்லவேண்டிய காலப்பகுதி நோர்வேயில் 10 வருடங்களாகும். சிறுவர்கள் 6 வயதில் தமது கல்வியை ஆரம்பிக்கின்றனர். ஆரம்ப மற்றும் கீழ் இடைநிலைக் கல்வியானது தனியானதொரு தேசிய பாடவிதானத்தின் அடிப்படையில் சமத்துவமான ஒருங்கிணைக்கப்பட்ட பாடசாலை முறைக் கோட்பாட்டுக்கு அமைய நோர்வேயில் ஸ்தாபிக்கப்பட்டன.**

## நோர்வேயின் கல்வி முறை

சிறுவர்களுக்கான சர்வதேச, பாடசாலைக் கல்வி முறை நோர்வேயில் 250 வருடங்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டது. 1889 ஆம் ஆண்டிலிருந்து ஏழு வருடகட்டாயக் கல்வி முறை ஏற்படுத்தப்பட்டு 1969 இல் அது 9 வருடங்களாகவும், 1997 இல் 10 வருடங்களாகவும் அதிகரிக்கப்பட்டது. மேல் இடைநிலைப் பாடசாலைக் கல்வி (Upper Secondary School) சுயவிருப்பின் அடிப்படையில் அமைந்த போதும் நடைமுறையில் பெரும்பாலும் சகல மாணவர்களும் சமூகமளிக்கின்றனர். கட்டாயமாக பாடசாலைக்குச் செல்லவேண்டிய காலப்பகுதி நோர்வேயில் 10 வருடங்களாகும். சிறுவர்கள் 6 வயதில் தமது கல்வியை ஆரம்பிக்கின்றனர். ஆரம்ப மற்றும் கீழ் இடைநிலைக் கல்வியானது தனியானதொரு தேசிய பாடவிதானத்தின் அடிப்படையில் சமத்துவமான ஒருங்கிணைக்கப்பட்ட பாடசாலைமுறைக் கோட்பாட்டுக்கு அமைய நோர்வேயில் ஸ்தாபிக்கப்பட்டன. இது கிட்டத்தட்ட ஒவ்வொரு பத்து வருடங்களுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்யப்படுவதுடன் தற்போதுள்ள கல்விமுறைக்கு "யாவருக்கும் கல்வி" என்பது அடிப்படைக் கருத்தாக உள்ளது. சகல சிறுவர்களுக்கும் அவர்களின் சமூக, கலாசாரப் பின்னணியைக் கருத்திற் கொள்ளாது கல்வி புகட்டப்படுகின்றது. மேல் இடைநிலைக் கல்வி உட்பட அரசினால் வழங்கப்படுகின்ற கல்வி வசதிகள் யாவும் இலவசமானவையாகும். நாம் இங்கு கட்டாயக் கல்வி எனக் குறிப்பிடுவது யாதெனில் - நோர்வேயிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் 10 ஆம் தரம் வரை பாடசாலைக்கு சமூகமளிக்கின்றது என்பதாகும்.

**கல்வியின் பிரதான கட்டங்கள்**

1. கீழ் ஆரம்பக் கல்வி (தரங்கள் 1- 4 வரை)
2. மேல் ஆரம்பக் கல்வி (தரங்கள் 5 - 7 வரை)
3. கீழ் இடைநிலைக் கல்வி (தரங்கள் 8-10 வரை)
4. மேல் இடைநிலைக் கல்வி (தரங்கள் 11-13 வரை)
5. உயர் கல்வி

மாநகரசபைகள் (Kommune) ஆரம்ப மற்றும் கீழ் இடைநிலைப் பாடசாலைகளுக்குப் பொறுப்பாக உள்ளன. இதே வேளை மாவட்டங்கள் (Counties) மேல் இடைநிலைக் கல்விக்குப் பொறுப்பாக உள்ளன. அத்துடன் அரசு உயர்கல்விக்குக் பொறுப்பாக உள்ளது. மற்றும் கீழ் இடைநிலை மட்டங்களில் கிட்டத்தட்ட 2% சதவீதத்தினதாகத் தனியார் பாடசாலைகள் உள்ளன.

### மேல் இடைநிலைக் கல்வி (*Upper Secondary Education*)

நோர்வேயில் நேர்முகங்காணல்களை இந்த மட்டத்திலிருந்து தெரிவு செய்த காரணத்தால், இவ் அறிக்கையில் இடைநிலைக் கல்வி பற்றி அதிகளவு விரிவான தகவல்களை தரவுள்ளோம். 1994 இலையுதிர் காலத்திலிருந்து 16-19 வயதுப் பிரிவினருக்கு, உயர் கல்விக்கு அல்லது தொழிற்கல்வித் தகைமைகளுக்கு வழிவகுக்கின்ற மேல் இடைநிலைக் கல்வியை 3 வருடங்களுக்குப் பெறுகின்ற உரிமை உள்ளது.

— தொடர்ச்சி அடுத்த இதழில்

# அழுத்தமும் ஆசிரியர் செயலாற்றுகையும்

## அறிமுகம்

ஆசிரியரின் செயலாற்றுகையில் தாக்கம் செலுத்துகின்ற பல்வேறு புறக்காரணிகளும் அகக்காரணிகளும் உள்ளன. வகுப்பறையிலும் பாடசாலையிலும் காணப்படுகின்ற கவிநிலை ஆசிரியரின் விளைதிறனைப் பாதிக்கும். அத்தகைய பாதிப்புகள் உடன்பாடானவைகளாகவோ அல்லது எதிர்மறையானவைகளாகவோ இருக்கலாம். பாடசாலைக் கவிநிலையை சாதகமானதாக மாற்றியமைப்பதன் மூலம் ஓர் ஆசிரியரின் செயலாற்றுகை மட்டத்தை உயர்த்த முடியும். ஆனால் ஆசிரியரின் செயலாற்றுகையிலும் நடத்தையிலும் செல்வாக்கு செலுத்துகின்ற பல அகக்காரணிகளும் உள்ளன. அவற்றில் ஒன்று அழுத்தம் (Stress) என்பதாகும். Stress என்பதைக் குறிக்க நெருக்கீடு, தகைப்பு போன்ற வேறு சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன.

இக்கட்டுரையானது அழுத்தம் என்றால் என்ன, அழுத்தம் ஏன் ஏற்படுகிறது, ஆசிரியரின் நடத்தையிலும் செயலாற்றுகையிலும் அது எவ்வாறு செல்வாக்கு செலுத்துகிறது, அழுத்தத்தின் பாதிப்பை எவ்வாறு குறைக்க முயற்சி செய்யலாம் போன்றவற்றை விளக்க முயல்கிறது.

> ஒரு பலமான தூண்டிக்கு ஒரு நபர் காட்டுகின்ற துலங்கலையே நாம் அழுத்தம் என்கிறோம். வேறு வார்த்தைகளில் கூறினால் ஓர் அறைகூவலுக்கு முகம் கொடுக்க ஒரு நபர் தன்னை தயார்ப்படுத்திக் கொள்ளுதலையே அழுத்தம் எனக் குறிக்கிறோம். இத்தகைய அழுத்தத்துக்கு முகம் கொடுத்து அதனை வெற்றிகரமாக சமாளிப்பதையே நாம் அழுத்த முகாமைத்துவம் எனக் கூறுகிறோம்.

## அழுத்தம் என்றால் என்ன?

ஒரு பலமான தூண்டிக்கு (Stressor) ஒரு நபர் காட்டுகின்ற துலங்கலை (response)யே நாம் அழுத்தம் என்கிறோம். வேறு வார்த்தைகளில் கூறினால் ஓர் அறைகூவலுக்கு முகம் கொடுக்க ஒரு நபர் தன்னை தயார்ப்படுத்திக் கொள்ளுதலையே அழுத்தம் எனக் குறிக்கிறோம். இத்தகைய அழுத்தத்துக்கு முகம் கொடுத்து அதனை வெற்றிகரமாக சமாளிப்பதையே நாம் அழுத்த முகாமைத்துவம் (Stress Management) எனக் கூறுகிறோம்.


தை. தனராஜ்
நிபுணத்துவ ஆலோசகர்
தொலைக்கல்வி நவீனமாக்கற் செயற்றிட்டம்


ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். சத்திய மூர்த்தி பத்தாம் தரத்தின் வகுப்பாசிரியர். ஆண்டிறுதிப் பரீட்சை முடிந்துவிட்டது. நாளை பிள்ளைகளுக்கு முன்னேற்ற அறிக்கையை வழங்க வேண்டும். வீட்டில் சில பிரச்சினைகள் காரணமாக மூன்று பாடங்களுக்கான விடைத்தாள்களை இன்னும் திருத்தவில்லை. அவற்றைத் திருத்தி முன்னேற்ற அறிக்கையைப் பூரணப்படுத்தி நாளைக் காலையில் அதிபரின் மேசையில் வைத்துவிட வேண்டும். இந்நிலையில் மகனை வைத்தியரிடமும் கூட்டிச் செல்ல வேண்டும்.

இந்த அறைகூவலை சத்திய மூர்த்தி எவ்வாறு சமாளிக்கப் போகிறார்? அழுத்தம் நிறைந்த இந்த சூழ்நிலையை சத்திய மூர்த்தி வெற்றிகரமாக சமாளித்து நாளைக் காலையில் அதிபர் மேசையில் முன்னேற்ற அறிக்கையை வைத்து விட முடியும். அல்லது அழுத்தத்தை சமாளிக்க முடியாமல் அதாவது சரியான முறையில் முகாமை செய்ய முடியாமல் அதிபர் முன் தலைகுனிந்து நிற்கும் நிலைக்கும் ஆளாகலாம்.

## பொதுவான மாற்றியமைப்பு ஒத்திசைவு
**General Adaptation Syndrome-GAS**

அழுத்தம் ஏற்படும்போது அதனைத் தொடர்ந்து "மாற்றியமைத்து ஒத்திசைவாக்கும்" செயன்முறையும் தொடங்குகிறது. இதனை சுருக்கமாக GAS எனக் கூறலாம் (Griffin, 1997). மாணவர் முன்னேற்ற அறிக்கைகள் பூதாகரமாக சத்தியமூர்த்திக்கு நிற் கும் போது அவருக்கு என்ன ஏற்படும்? முதலில் அவருக்கு ஒருவகையான திகில் அல்லது பயம் ஏற்படும். அதுவும் பிள்ளையை வைத்தியரிடம் கூட்டிச் செல்ல-

வேண்டும் என்பது திகிலை இன்னும் கூட்டும். அழுத்தத்துக்கு ஆளாகும் போது எம்மிடம் ஏற்படும் முதலாவது துலங்கல் இது தான். ஆனால் இந்நிலை தொடர்ந்து நீடிக்க முடியாது.

சத்தியமூர்த்தி திகிலிருந்து விடுபடுவார். அதிபரிடம் முகம் கொடுக்க வேண்டுமென உறுதி கொள்வார். எவ்வாறு தன்முன் உள்ள சவால்களை சமாளிப்பது என திட்டமிடுவார். இது GAS இன் இரண்டாவது கட்டம். முதலில் தனது மகனை வைத்தியரிடம் அவர் கூட்டிச் செல்வார். ஏனெனில் அதனைப் பின்போட முடியாது. தனது நெருங்கிய நண்பரும் சக ஆசிரியருமான திரு. இராஜேந்திரனை தன்னுடன் வந்து இரவு தங்குமாறு அழைப்பார். அவருக்கு உணவு தயாரிக்குமாறு தனது மனைவியிடம் கேட்டுக்கொள்வார். அவர் திட்டமிட்டது போல் வெற்றியடையும் வாய்ப்பு உள்ளது.

ஆனால் மகனை வைத்தியரிடம் காட்டிவிட்டு வீட்டுக்குத் திரும்பும் போது வீட்டில் மனைவியின் உறவினர்கள் ஐந்து பேர் வந்திருந்தால் எப்படி இருக்கும்? அதே நேரத்தில் திரு. இராஜேந்திரன் தான் அவசரமாக இரவு பஸ் வண்டியில் யாழ்ப்பாணம் செல்வதாகக் கூறினால் சத்தியமூர்த்தியின் நிலை என்ன? இந்நிலையில் அவரது அழுத்தம் அதிகரிக்கலாம். அவரால் சமாளிக்க முடியாமல் போகலாம். இது GAS இன் மூன்றாவது கட்டம். இதனை முழுச்சோர்வுநிலை (exhaustion) எனக் கூறுகிறோம். மேற்படி மூன்று கட்டங்களையும் உருவம் 1 காட்டுகின்றது.

அழுத்தம் என்பது எந்நேரமும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதல்ல. அதேபோல மோசமான விடயங்கள் தான் அழுத்தத்தை ஏற்படுத்தும் எனவும் கூற முடியாது. பரீட்சைக்கு முன்னர் விளையாட்டுப் போட்டி ஆரம்பிக்குமுன்னர் அழுத்தம் ஏற்படுகிறது. ஆனால் அந்த அழுத்தத்தின் காரணமாகவே சாதிக்கவும் முடிகிறது. இதனை உடன்பாடான அழுத்தம் எனலாம். இதேபோல பதவி உயர்வு, சம்பள உயர்வு, "லொட்டரி" சீட்டில் பரிசு கிடைத்தல் போன்ற நல்ல விடயங்களும் கூட அழுத்தத்தை ஏற்படுத்தக் கூடியன.

அழுத்தம் என்பது எந்நேரமும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதல்ல. அதேபோல மோசமான விடயங்கள் தான் அழுத்தத்தை ஏற்படுத்தும் எனவும் கூற முடியாது. பரீட்சைக்கு முன்னர் விளையாட்டுப் போட்டி ஆரம்பிக்குமுன்னர் அழுத்தம் ஏற்படுகிறது. ஆனால் அந்த அழுத்தத்தின் காரணமாகவே சாதிக்கவும் முடிகிறது. இதனை உடன்பாடான அழுத்தம் எனலாம். இதே போல பதவி உயர்வு. சம்பள உயர்வு. "லொட்டரி" சீட்டில் பரிசு கிடைத்தல் போன்ற நல்ல விடயங்களும் கூட அழுத்தத்தை ஏற்படுத்தக் கூடியன.

## அழுத்தம் ஏற்படுவதற்கான காரணங்கள்

அழுத்தம் தொழில்சார் காரணங்களினதும் தனிப்பட்ட காரணங்களினதும் ஏற்படலாம். தொழில்சார் காரணங்களை நான்கு வகுதிகளுக்குள் அடக்கலாம்.

**பணி சார்ந்தவை** (Task demands)

இயல்பாகவே சில பணிகள் அழுத்தம் நிறைந்தவையாக இருக்கலாம். விரைவான தீர்மானம் மேற்கொள்ள வேண்டிய தொழில்கள் கூடிய அழுத்தம் நிறைந்தவை. உதாரணமாக ஒரு பல் வைத்தியரின் தொழிலை விட இருதய சத்திர சிகிச்சை நிபுணரின் தொழில் கூடிய அழுத்தம் நிறைந்தது.

**பௌதீக நிலைமைகள் சார்ந்தவை** (Physical demands)

தொழில் செய்யும் இடத்தின் சூழ்நிலை அழுத்தம் ஏற்பட காரணமாகலாம். மிகையான வெப்பம் அல்லது குளிர் அல்லது இரைச்சல் அழுத்தத்தை ஏற்படுத்தும் நெருக்கமும் மிதமிஞ்சிய இரைச்சலும் நிறைந்த ஒரு வகுப்பறை ஆசிரியரை அழுத்தத்துக்கு ஆளாக்கி அவரது செயலாற்றுகை குறைக்கலாம். அதேபோல கூரை இடிந்து விழுந்துவிடலாம். என்னும் எதிர்பார்ப்புகளும், உயிராபத்து ஏற்படும் என்னும் சூழ்நிலைகளும் மிகையான அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடியவை.


**வகிபங்கு சார்ந்தவை** (Role demands)

தனது வகிபங்கு வரையறை செய்யப்படாமையினாலும் அல்லது வகிபங்கு முரண்பாடு ஏற்படும் நிலையிலும் அழுத்தம் ஏற்படலாம். உதாரணமாக மாணவர்களை பரீட்சைக்குத் தயார்படுத்திக் கொண்டிருக்கும் ஆசிரியரை அதிபர் அலுவலக வேலைகளைச் செய்ய பணித்தால் அவர் அழுத்தத்துக்கு உள்ளாகலாம்.

**ஆளிடை அம்சங்கள்** (Interpersonal demands)

விருப்பமில்லாதவர்களுடன் சேர்ந்து குழுவாக செயற்படுதல், தீமானம் மேற்கொள்ளும் செயன்முறை-

உருவம் 1 : பொதுவான மாற்றியமைப்பு ஒத்திசைவு (GAS)




மூலம்: Griffin (1997)

யிலிருந்து ஒதுக்கப்படுதல், அதிபரின் தலைமைத்துவ பாங்கு போன்றவைகளும் கூட அழுத்தம் ஏற்படுத்தலாம்.

> இன்றைய வாழ்க்கை முறையில் "அழுத்தம்" ஏற்படுவதை நாம் முற்றாகத் தவிர்த்து விட முடியாது. எனவே அழுத்தங்களை எவ்வாறு சமாளிக்கலாம் என்பது தான் முக்கியமானது. உலகில் பல நிறுவனங்கள் தமது பணியாளர்களுக்கு ஏற்படும் அழுத்தங்களைக் குறைப்பதில் கரிசனை கொண்டுள்ளன. எனவே அழுத்த முகாமைத்துவத்தில் தனியாள் பொறுப்பை போல நிறுவன பொறுப்பும் உள்ளது.

## அழுத்தத்தின் விளைவுகள்

நாம் முன்னர் கூறியவாறு அழுத்தம் என்பது எப்போதும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதல்ல. பெரும்பாலானோர் அழுத்தம் ஏற்படும் ஆரம்ப திகில் நிலையிலிருந்து வெகுசீக்கிரமே விடுபட்டு செயலாற்ற எத்தனிக்கின்றனர்: எனினும் அழுத்த நிலை தொடரும்போது அது பல்வேறு விளைவுகளை தோற்றுவிக்கின்றது. அவற்றை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

**1. உடல் சார் விளைவுகள்** (Physiological impact)

அழுத்தம் ஏற்படும்போது உடலில் பல மாற்றங்கள் ஏற்படலாம். நெஞ்சுத்துடிப்பு அதிகரித்தல், இரத்த அழுத்தம் உயர்தல், மூச்சிரைத்தல், உடல் இறுகுதல், வியர்த்தல், நெஞ்சேரிவு, தலைவலி, அசதி, மயக்கம், குமட்டல் போன்றவை அழுத்தத்தின் விளைவுகளே. அழுத்தத்திலிருந்து விடுபட முடியாத நிலையில் சீரண குறைபாடுகள், மலச்சிக்கல், வயிற்றுப் புண், பாலுணர்வு பிரச்சினைகளும் தோன்றக்கூடும்.

**2. உளஞ்சார் விளைவுகள்** (Psychological impact)

கருத்தொன்ற முடியாமை, மறத்தல், ஊக்கமிழத்தல், பயம், கோபம், அழுகை அல்லது அழமுடியாமை, பொறுமையிழத்தல் போன்றவை அழுத்தத்தினால் ஏற்படும் உளஞ்சார் விளைவுகளாகும்.

**3. உளச் சமூக விளைவுகள்** (Psycho-social impact)

அழுத்தம் காரணமாக தன்னுள் பிரச்சினைகள் ஏற்படலாம். அதேபோல் பிறரோடு கொண்டுள்ள உறவுநிலைகளிலும் பல பிரச்சினைகள் தோன்ற இடமுண்டு.

## அழுத்தங்களை முகாமை செய்தல்

இன்றைய வாழ்க்கை முறையில் "அழுத்தம்" ஏற்படுவதை நாம் முற்றாகத் தவிர்த்து விட முடியாது. எனவே அழுத்தங்களை எவ்வாறு சமாளிக்கலாம் என்பது தான் முக்கியமானது. உலகில் பல நிறுவனங்கள் தமது பணியாளர்களுக்கு ஏற்படும் அழுத்தங்களைக் குறைப்பதில் கரிசனை கொண்டுள்ளன. எனவே அழுத்த முகாமைத்துவத்தில் தனியாள் பொறுப்பை போல நிறுவன பொறுப்பும் உள்ளது.

அழுத்த முகாமைத்துவ செயற்பாடுகளை நாம் இரண்டு வகுதிகளுக்குள் அடக்கலாம்:

1) அழுத்தங்களை தவிர்த்தல் **(Stress avoidance)**
2) அழுத்தங்களை குறைத்தல் **(Stress reduction)**

பின்வருவன அழுத்தங்களைத் தவிர்க்கும் செயற்பாடுகளாகும்

* சிறந்த நேர முகாமைத்துவம்
* குழுவாகச் செயற்படுதல்
* பங்குபற்றும் முகாமைத்துவம்
* சிறந்த தொடர்பாடல்கள்
* பங்கேற்பு தீர்மானம் மேற்கொள்ளல்
* உடன்பாடான மனப்பாங்குகளை வளர்த்தல்
* ஆரோக்கியமான வாழ்க்கை முறை
* பகுத்தறிவுடன் சிந்தித்தல்

பின்வருவன அழுத்தங்களைக் குறைக்கும் செயற்பாடுகளாகும்

* விடுமுறைகளை அனுபவித்தல்
* தியானம்
* தினமும் முறையான உடற்பயிற்சிகள்
* உடல் உறுப்புகளைத் தளர்த்துவதற்கு (relax) பயிலுதல்

## முடிவுரை

ஆசிரியர் தொழில் அடிப்படையில் அழுத்தம் நிறைந்த தொழிலல்ல என கூறுகின்றனர். ஆனால் போட்டியும் அவசரமும் நிறைந்த இன்றைய சமூக, பொருளாதார சூழ்நிலை ஆசிரியரையும் பாடசாலையையும் விட்டு வைக்கவில்லை. எனவே அதிபரும் ஆசிரியர்களும் இன்று அழுத்தத்துக்கு உட்படுகின்றனர்.

மாணவர்களும், ஆசிரியர்களும், அதிபரும் ஒன்று சேர்ந்து செயற்படுவதன் மூலம் தமது பாடசாலையை அழுத்தத்துக்கு அப்பாற்பட்ட ஓர் இடமாக மாற்றிக் கொள்ள முடியும். அதற்கு முதலாவது படி அழுத்தம் பற்றியும் அது ஏற்படுவதற்கான தனியாள், நிறுவன காரணிகளையும், அழுத்த முகாமைத்துவம் பற்றியும் பற்றியும் தெரிந்து கொள்வது தான்.

வெளிநாடுகளில் அழுத்தம் பற்றி பல ஆய்வுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. ஹெல்சிங்கி பல்கலைக்கழகம் 800 பணியாளர்களில் மேற்கொண்ட ஓர் ஆய்வில் தொழில்சார் அழுத்தம் காரணமாக நெஞ்சு வருத்தங்கள் மற்றும் மாரடைப்பு ஏற்படுவதற்கான நிலைமைகள் 2.2 மடங்கினால் அதிகரிப்பதாக அறியப்பட்டது. அழுத்தம் செயலாற்றுகையை நிச்சயமாகப் பாதிக்கிறது என நிறுவப்பட்டுள்ளது. எனவே தமது செயலாற்றுகையை மேம்படுத்திக் கொள்ள விரும்புகின்ற ஆசிரியர்களும் தமது பாடசாலையின் அடைவுகளை உயர்த்திக் கொள்ள விரும்பும் அதிபர்களும் அழுத்த முகாமைத்துவத்தில் ஆர்வமும் கரிசனையும் காட்ட வேண்டியது தவிர்க்க முடியாதது. ❑

# கல்வியில் சான்றிதழ் நோயும் மற்றும் புதிய குறைபாடுகளும்

**1970** களில், Ronald Dore எனும் ஆங்கில நாட்டைச் சேர்ந்த கல்வியியல் பேராசிரியர் "சான்றிதழ்" நோய்" (Diploma Disease) என்னும் ஒரு கருத்தாக்கத்தை முன்வைத்தார். அதற்கு இலங்கை, கென்யா, யப்பான் முதலிய நாடுகளின் கல்வி முறைகளை அவர் உதாரணங்களாகக் கொண்டார். இக்கருத்தாக்கம் இன்றும் கூட இலங்கையிள் கல்வி முறையைப் பொறுத்த வரையில் இது பொருத்தமானதாக விளங்குகின்றது. இக் கருத்தாக்கத்தை சற்று விளக்கமாகக் கூறுவோம்.

1976ம் ஆண்டில் Dore வெளியிட்ட நூல் பல வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியது. இந் நூலில் கூறப்பட்ட முக்கிய கருத்து பின்வருமாறு;

"பாடசாலைகளின் நோக்கம் மாணவர்களுக்கு கல்வி வழங்குவதும் அவர்களுடைய உளவிருத்திக்கும் நன்னடத்தை மேம்பாட்டுக்கும் வழிவகுப்பது. ஆனால் இன்று வேலை வாய்ப்புகள் பெரும்பாலும் கல்விச் சான்றிதழ்கள், பல்கலைக்கழகப்பட்டங்கள் டிப்ளோமாக்கள் என்பவற்றில் தங்கியுள்ள நிலையில் பாடசாலைக் கல்வியின் நோக்கங்களும் இலக்குகளும் மாற்றங்களுக்குள்ளாகி உள்ளன. பாடசாலைக் கல்வியானது கல்வித் தகுதிகளை சான்றிதழ்களை பெறுவதற்கான சடங்கு முறையான ஒரு செயற்பாடாக்கி விட்டது."

பாடசாலைகளின் நோக்கம் மாணவர்களுக்கு கல்வி வழங்குவதும் அவர்களுடைய உளவிருத்திக்கும் நன்னடத்தை மேம்பாட்டுக்கும் வழிவகுப்பது. ஆனால் இன்று வேலை வாய்ப்புகள் பெரும்பாலும் கல்விச் சான்றிதழ்கள், பல்கலைக் கழகப்பட்டங்கள் டிப்ளோமாக்கள் என்பவற்றில் தங்கியுள்ள நிலையில் பாடசாலைக் கல்வியின் நோக்கங்களும் இலக்குகளும் மாற்றங்களுக்குள்ளாகி உள்ளன. பாடசாலைக் கல்வியானது கல்வித்தகுதிகளை சான்றிதழ்களை பெறுவதற்கான சடங்கு முறையான ஒரு செயற்பாடாக்கி விட்டது.

இந்தக் கருத்தை மேலும் விளக்குவதற்கு இவ்வறிஞர் இங்கிலாந்து, யப்பான், இலங்கை, கென்யா ஆகிய நாடுகளின் கல்வி வரலாறுகளை துணையாகக் கொண்டார். கல்வியின் நோக்கங்களிலும் இலக்குகளிலும் ஏற்பட்ட மாற்றங்களுக்கான காரணங்களை ஆராய இவ்வரலாறுகள் அவருக்கு உதவிற்று. அவருடைய கருத்தாக்கத்தின் மையமாக அமைந்த ஒரு முக்கிய அம்சம் "பிந்தி ஏற்பட்ட அபிவிருத்தி" என்பதாகும். இவருடைய கருத்தாக்கத்தின்படி

அ. ஒரு நாடு உலக வரலாற்றின் எந்தக் காலகட்டத்தில் நவீனமயமாக்கத்தை தொடங்கியது என்பதற்கும்

ஆ. தொழில் வாய்ப்புகளுக்காக எந்தளவுக்கு கல்விச்சான்றிதழ்கள் பயன்படுத்தப்பட்டன என்பதற்கும்

இ. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் தராதரத்துக்கும்

ஈ. வளர்முகநாடுகள் தேவைகளுக்கேற்ப திறன்களை விருத்தி செய்வதற்கான கல்வி முறையின் ஆற்றலுக்குமிடையே தொடர்புகள் உண்டு.

ஒரு நாடு எந்தளவுக்கு தாமதமாக அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபட நேர்ந்ததோ அதாவது ஒரு நாடு உலக வரலாற்றில் எந்தளவுக்கு தாமதமாக நவீனமயமாக்கத்தைத் தொடங்கியதோ அந்தளவிற்கு தொழில் வாய்ப்புகளுக்காக கல்விச்சான்றிதழ்கள் மிக விரிவான முறையில் பயன்படுத்தப்படும்.

கல்வித்தகுதிகளின் அதிகரிப்பு வீதத்திற்கேற்ப பாடசாலைக் கல்வியானது உண்மையான கல்வியை வழங்குவதிலிருந்து விலகி பரீட்சையை மையமாகக் கொண்டு அமைகின்றது என்பது இவ்வறிஞர் முன்வைத்த முக்கியத்துவம் வாய்ந்த வாதமாகும்.

சோ. சந்திரசேகரம்
பேராசிரியர் — கல்வியியல் துறை
கொழும்புப் பல்கலைக்கழகம்

அவருடைய நூல் அபிவிருத்தி பற்றிய கற்கைத் துறையிலும் சர்வதேசக் கல்வி, ஒப்பீட்டுக் கல்வி ஆகிய

துறைகளிலும் மிகவும் பிரபல்யம் வாய்ந்த தொன்றாயிற்று. இந்நூல் யப்பானிய மொழியில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு அனைத்துப் பிரதிகளும் உடனடியாக விற்றுப்போயின என்ற தகவலும் உண்டு.

உலக நாடுகளின் கல்வியியல் சொற்களஞ்சியத்தில் "டிப்ளோமா நோய்" "கல்வித்தகுதிகளின் பெருக்கம்" என்னும் சொற்கள் புதிதாக வந்து சேர்ந்தன. இதில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் இந்நூல் அதிகளவில் கவனத்தை ஈர்க்கவில்லை.

ஏனெனில் இந்நூல் ஒருவகையில் கல்வி அடைவுகளின் கணிப்பீடு பற்றியதாக அமைந்திருந்தது. "இந்தக் கணிப்பீடு என்னும் விடயம் 1970 களில் இந்நாடுகளில் அதிக முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. மேலும் வடபுல நாட்டு அறிஞர்கள் தென்புல நாடுகளின் கல்விப் பிரச்சினைகள் தனியானவை, வேறுபட்டவை என்றும் கருதின.

மேலும் அக்காலத்தில் இன்று இருப்பது போல் உலக நாடுகள் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் நிலையில் இருக்கவில்லை. எவ்வாறாயிலும் இன்று வடபுலத்தில் உள்ள செல்வந்த நாடுகளும் தென்புல வளர்முகநாடுகள் எதிர்நோக்கும் பரீட்சைகளின் மேலாதிக்கம், மற்றும் கல்வித்தகுதிகளுக்கும் சான்றிதழ்களுக்கும் அளிக்கப்பட்டு வரும் முக்கியத்துவம் என்னும் அதே பிரச்சினைகளை எதிர் நோக்குவது குறிப்பிடத்தக்கது.

1970 களிலேயே இவ்வறிஞர் பிரிட்டன் இந்தியா, ரஷ்யா, வெனிசுலா ஆகிய நாடுகளின் கல்விமுறைகள் 1920 அல்லது 1950 களில் இருந்ததை விட அதிகளவுக்கு கல்விச் சான்றிதழ்களை வழங்குவதற்கு முக்கியத்துவம் அளித்து வருவதாக அவர் எடுத்துக் காட்டினார். இவ்வாறு அதிகளவில் கல்விச் சான்றிதழ்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது என்பது கல்வி முறையை இச் சான்றிதழ்களைப் பெறுவதை மட்டுமே குறிக்கின்றது. அத்தோடு மாணவர் மத்தியில் அலுப்பையும் பதட்டத்தையும் ஏற்படுத்தி அவர்களுடைய கற்பனா வளம், துருவி ஆராயும் பண்பு என்பவற்றை சிதைப்பதாகவும் கல்விமுறை மாற்றமடைகிறது. மொத்தத்தில் பாடசாலை முறையானது கல்வி வளர்ச்சிக்கு எதிராகவே செயற்படும் போக்கினை பெற்று விடுகின்றது என்பதனை Dore சுட்டிக் காட்டினார். .இப்பின்புலத்தில் இரு முக்கிய அம்சங்களை சுட்டிக்காட்டவேண்டும்.

1. கல்விக்கு உயர்தரமான, சிலவேளைகளில் புனிதமான, யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய குறிக்கோள்கள் உண்டு. பிள்ளைகள் நற்பிரசைகளாக நல்லொழுக்கம் உடையவர்களாக சிறந்த பண்பாளர்களாக நன்னடத்தைப் பாங்குள்ளவர்களாக உருப்பெறுவதை நோக்காகக் கொண்டது. இவற்றை வலியுறுத்தாத கல்வியாளர்கள் ஆசிரியர்கள், சமூகத்தலைவர்கள் எவருமேயில்லை.

பெரிய பாடசாலைகளின் தலைமைவாசகங்கள் (Motto) என்பவை இக்குறிக்கோள்களையே சுட்டுகின்றன. எடுத்துக்காட்டாக "உன்னையே அறிவாய்" "மெய்ப்பொருள் காண்பதறிவு" போன்றன.

2. தொழில் வாய்ப்புகள் கல்விச்சான்றிதழ்களை வலியுறுத்தத் தொடங்கியமையால் பாடசாலைக் கல்வியானது ஒட்டுமொத்தத்தில் தனது புனிதமான மரபு வழி குறிக்கோள்களையெல்லாம் கைவிட்டுவிட்டு மாணவர்களை பொதுப்பரீட்சைகளுக்கு அவர்களை ஆயத்தம் செய்யும் ஒரு பரீட்சைப் பணியில் ஈடுபட்டு விட்டன. மறுபுறம் பெற்றோர்களும் மாணவர்களும் கண்ணியமான ஒரு தொழிலைப் பெற்றுக் கொள்ளவும் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறவும் தொழிற் சந்தையில் மற்றவர்களுடன் போட்டிபோடவும் சிறந்த கல்விச் சான்றிதழ்களையே நாடி நிற்கும் நிலை ஏற்பட்டு விட்டது.

பாடசாலைகள் இந்த பரீட்சைப் பணியைக் கூட சரிவரச் செய்வதில்லை என அவர்கள் கருதுவதால் பாடசாலை முறைமைக்கு சமாந்தரமான தனியார் போதனா நிலையங்களும் விசேட அனுபவம் பெற்ற பரீட்சை ஆயத்தத்துக்கான வல்லுநர்களான போதனா ஆசிரியர் குழுவொன்றும் இன்று தோன்றியுள்ளது. ஒரு வகையில் தனி நபர்களும் குடும்பங்களும் சமூகத்தில் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெற இவ்வழிமுறையையே பின்பற்றுவது நியாயமானது என்பதை Dore ஏற்றுக் கொள்கிறார். ஆனால் அவர் முன்வைத்த முக்கியமான ஒரு கேள்வி சமூகங்கள் கல்விச் சான்றிதழ்களின் அடிப்படையில் இவ்வாறான வாய்ப்புகளை ஒதுக்கிக் கொடுப்பது நியாயமானதா? பகுத்தறிவுக்கு உகந்ததா? என்பது தான். தமது நூலின் இரண்டாம் பகுதியில் இந்த அடிப்படையான கேள்வி விரிவாக ஆராயப்படுகிறது. கியூபா தான்சானியா சீனா, முதலிய நாடுகளின் கல்வி முறைகளில் 1970 களில் ஏற்பட்ட சில வளர்ச்சிகள் இவ்வாறான சமூக ஒதுக்கீட்டு முறைமைக்கான மாற்றுத்திட்டங்களை சுட்டிக்காட்டுவதாக அவர் எடுத்துக் கூறினார்.

> பல்வேறு தொழில் திறன்களைப் பொறுத்த வரையில் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சிகளை சான்றிதழ்கள் சுட்டிக்காட்டுவதோடு தகுதியற்றவர்களிடம் இருந்தும் அபாயகரமான முறையில் தொழில் செய்பவர்களிடமிருந்தும் பொதுமக்களை காப்பாற்ற சான்றிதழ்கள் உதவுவதை மறுக்க முடியாது. உதாரணமாக மருத்துவம், சட்டம் ஆகிய துறைகளில் மாணவர்கள் பரீட்சை நோக்குடன் வாழ்க்கைப் பயனுள்ள கல்வியையும் பெற முடியும். திறமைக்கு முதலிடம் தரும் சமூகங்களில் சான்றிதழ்கள் மாணவர்களின் தாழ்ந்த சமூக நிலையை கருத்திற் கொள்ளாது உயர் பதவிகளைப் பெற சான்றிதழ் உதவுகின்றன.

கல்விச்சான்றிதழ்களுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை மறுபரிசிலினை செய்து அவற்றின் தாக்கத்தை நிதானப்படுத்தாவிடில் உலகில் வாழும் பல கோடி பிள்ளைகள் கருத்துள்ள கல்வியை பெற்றுக் கொள்ள முடியாது என்ற கருத்தையும் அவர் முன்வைத்துள்ளார்.

Dore அவர்களின் மேற்கூறிய கருத்தாக்கம் பல்துறை சார்ந்த அறிஞர்களால் நன்கு விமர்சிக்கப்பட்டது. கல்வித்தகுதிகள் மாணவர்களுடைய தேர்ச்சியை எடுத்துக் காட்டத் தவறுகின்றன. "உண்மையான கல்வியை" பெறுவதற்கான வாய்ப்பை இச்சான்றிதழ்கள் குறைக்கின்றன; பாட ஏற்பாடு திசைமாறிச் செல்ல வழி வகுக்கின்றன; திறமை வாதத்துக்கு முக்கியத்துவம் அளிப்பதால் ஒரு சிலர் மட்டுமே முன்னேறிக் கொள்ள முடியும்; கற்றலுக்கான ஊக்கம் குறைவடைந்து பரீட்சைக்கான மனனம் முக்கியத்துவம் பெறுகின்றது.

கல்விச்சான்றிதழ்கள் அறிவார்ந்த நபர்களின் தொகையை அதிகரிக்க அதிகம் பயன்படுவதில்லை என்ற Dore யின் கருத்துகளை பல அறிஞர்கள் விமர்சிக்கின்றனர். இவை யாவும் அதிகளவில் மிகைப்படுத்தப்பட்ட குறைபாடுகள் என்பது அவர்களுடைய கருத்துகள். பல சந்தர்ப்பங்களின் சான்றிதழ்கள் பயனுடையவை என்பதை நிரூபிக்க முடியும்.

பல்வேறு தொழில் திறன்களைப் பொறுத்த வரையில் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சிகளை சான்றிதழ்கள் சுட்டிக்காட்டுவதோடு தகுதியற்றவர்களிடம் இருந்தும் அபாயகரமான முறையில் தொழில் செய்பவர்களிடமிருந்தும் பொது மக்களை காப்பாற்ற சான்றிதழ்கள் உதவுவதை மறுக்க முடியாது. உதாரணமாக மருத்துவம், சட்டம் ஆகிய துறைகளில் மாணவர்கள் பரீட்சை நோக்குடன் வாழ்க்கைப் பயனுள்ள கல்வியையும் பெற முடியும். திறமைக்கு முதலிடம் தரும் சமூகங்களில் சான்றிதழ்கள் மாணவர்களின் தாழ்ந்த சமூக நிலையை கருத்திற் கொள்ளாது உயர் பதவிகளைப் பெற சான்றிதழ் உதவுகின்றது.

சான்றிதழ்களுக்கான மாற்று ஏற்பாடுகள் விரிவான முறையில் சமூக அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும். இது சற்றுக்கடினமான விடயம். சான்றிதழ்களை நாடுவோர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தக்கூடிய திறன்களையும் கற்றுக் கொள்ள முடியும். உலகிலுள்ள பாடசாலைகள் புதிதாக அனுமதி பெறும் மாணவர்கள் பெற்றிருக்கும் அறிவு, திறன்கள் என்பவற்றுக்கு மதிப்பளிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு என்ற முறையில் Dore அவர்களின் கருத்தாக்கம் விமர்சிக்கப்பட்டது.

1976 ம் ஆண்டில் Dore அவர்கள் வெளியிட்ட இக்கருத்தாக்கம் தற்போது நடைமுறையில் இருந்து வரும் க.பொ.த உ/த கற்கை நெறிக்கு ஓரளவு பொருந்தும் என்பதை இக்கற்கை நெறியின் குறைபாடுகள் பற்றி மேலும் இக்கட்டுரை விளக்கும் என நம்புகிறோம். இக்குறைபாடுகள் பற்றிய விளக்கங்களை அண்மைக் காலத்தில் க.பொ.த உ/த பரீட்சை பற்றி இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்ட பகுப்பாய்வு ஆவணங்களில் இருந்து பெற்றுக் கொள்ள முடிந்தது. இவ்வாணைக் குழுவின் பகுப்பாய்வு முடிவுகள் இங்கு தொகுத்து தரப்படுகின்றன.

இவை கல்வி முறையில் ஆர்வமும் சமூக அக்கறையும் உடைய தமிழ் வாசகர்களுக்கு பயன்படும் என்னும் நோக்குடனேயே இங்கு முன்வைக்கப்படுகின்றன. இவை பற்றிய மாற்றுக் கருத்துகள் இவ்விடயம் பற்றிய ஆரோக்கியமான ஒரு கருத்தாடலுக்கு இட்டுச் செல்லும் என்பது எமது நம்பிக்கை.

## க. பொ.த உயர்நிலைப் பரீட்சையில் இனங் காணப்படும் புதிய குறைபாடுகள்

இன்று 12 பல்கலைக்கழகங்களுக்கும் தெரிவு செய்யப்படும் 15,000 மாணவர்களும் க.பொ.த உ/ நி பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுகின்றனர். மாணவர்கள் பெறும் பரீட்சைப் புள்ளிகள் Z புள்ளியாக மாற்றப்பட்டு தேசிய ரீதியாகத் திறமை அடிப்படையில் 40 சதவீதமான மாணவர்களும் எஞ்சியவர்கள் மாவட்ட அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுகின்றார்கள். கடந்த பல தசாப்தங்களாக க.பொ.த. உ/ நி பரீட்சை என்றாலே அது ஒரு பல்கலைக்கழகப் புதுமுகப் பரீட்சையே என்ற விடயம் நிலை நாட்டப்பட்டு விட்டது.

பல்கலைக்கழகத்துக்கு இறுதியாக அனுமதி பெறுபவர்கள் 15,000 மாணவர் என்றாலும் பரீட்சைக்கு அமரவென 200,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைகளாலும் நாடளாவிய தனியார் போதனை நிலையங்களாலும் ஆயத்தம் செய்யப்படுகின்றார்கள். நாட்டில் உள்ள 2359 IAB, IC பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் பரீட்சைக்கு அமர்கின்றார்கள். கலைத் துறையைப் பொறுத்தவரையில் பெரும்பாலான பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் தகுதிகளைப் பெறுகின்றார்-

> ஒவ்வொரு பாடத்துக்கும் ஒரு பாடத்திட்டம் (syllabus) உண்டு. அப்பாடத்திட்டத்தில் உள்ள பாட உள்ளடக்கத்தின் அடிப்படையில் பரீட்சை வினாக்கள் தயாரிக்கப்படுகின்றன. பாடத்திட்டங்களில் பல அலகுகள் உள்ளன. அவ்வலகுகள் ஒவ்வொன்றும் பாட அறிவையும் அப்பாடம் சார்ந்த பல எண்ணக்கருக்களையும் (concepts) கொண்டவை. பரீட்சைகளைப் பொறுத்தவரையில் அதிக பெறுமதியற்ற பாட உள்ளடக்கம் (content) தொடர்பான வினாக்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இதனால் பரீட்சையின் உண்மையான நோக்கங்கள் சிதறடிக்கப்படுகின்றன.

இன்று கிடைக்கின்ற வேலை வாய்ப்புகளில் 35 சதவீதமானவை தனியார் துறையைச் சேர்ந்தவை. மார்கா நிறுவனம் செய்த ஆய்வொன்றின்படி க.பொ.த நிலைக் கல்வியானது தனியார் துறையினரின் தேவைகளுக்குப் போதுமானவையாய் இல்லை (1992). தனியார் துறையினர் பிரதானமாகக் கோருகின்ற எதிர்பார்க்கின்ற திறன்களை வழங்கும் வகையில் பாடசாலைகளின் உயர்தரக் கல்விப் பாட ஏற்பாடு அமையவில்லை பகுப்பாய்வு மனப்பாங்கு, காரணங் காணுந் திறன், நடைப் பிரச்சினைகளைத் தீர்க்க அறிவைப் பயன்படுத்தல், பிரச்சினை தீர்க்கும் சிந்தனை, புத்தாக்கச் சிந்தனை, படைப்பாற்றல், நாட்டின் சமகால சமூக, பொருளாதார நிலைமைகள் பற்றிய அறிவு, தலைமைத்துவ ஆற்றல், கோஷ்டியில் சிறப்பாகப் பணியாற்றல் (*Team Work*), தொடர்பாடல் திறன்கள், உற்பத்திச் செயற்பாடு பற்றிய விளக்கங்கள், ஆங்கிலம் என்றில்லாது தாய்மொழியிலாவது முறையாக உரையாடும் திறன்கள். இவையே தனியார் துறையின் எதிர்பார்ப்புகள்

கள். ஆனால், இறுதியில் 1420 பாடசாலைகளிலிருந்து ஒரு மாணவர் கூட அனுமதிபெறுவதில்லை; 448 பாடசாலைகளிலிருந்து பாடசாலைக்கு ஒரு மாணவர்; 177 பாடசாலைகளிலிருந்து 2 மாணவர் என்று போய், 15 பாடசாலைகளிலிருந்து மட்டுமே பாடசாலைக்கு 20க்கு அதிகமானவர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள். சகல மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் அனுமதி பெற்ற போதிலும், க.பொ.த. உ/நி வகுப்புகளை நடாத்தும் 1420 பாடசாலைகள் பல்கலைக்கழகக் கல்வியில் பங்கு கொள்வதில்லை; ஏனெனில், அங்கிருந்து ஒரு மாணவர் கூட அனுமதி பெறுவதில்லை (2004 புள்ளி விபரம்). அப்படியாயின் இந்த 1420 பாடசாலைகளின் கல்விச் சாதனை தான் என்ன? இப்பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட நிதி வளங்கள் அனைத்தும் விரயமாகி விட்டன எனக் கூறமுடியுமா?

ஒரு மாணவரையாவது அனுப்ப முடியாத இப்பாடசாலைகளை எவ்வாறு வர்ணிப்பது, விமர்சிப்பது என்று பல கேள்விகள் எழுகின்றன. இதற்கு ஒரு காரணம் க.பொ.த உ/நி பரீட்சைக்கு அமரும் மாணவர்களில் 6 - 7% மாணவர்களுக்கு மட்டுமே பல்கலைக்கழகங்கள் இடமளிப்பது என்பதையும் மறந்துவிடமுடியாது.

க.பொ.த உ/ நி பரீட்சை 6 சதவீதமான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான ஒரு போட்டிப் பரீட்சையாகவே முழு அளவில் செயற்படுகின்றது. இதன் காரணமாக தெரிவு செய்யப்படாத 94 சதவீதமான மாணவர்களைப் பொறுத்தவரையில் இப்பரீட்சை எதுவித பயனோ பொருளோ அற்றதாகி விடுகின்றது என்பதையும் குறிப்பிட வேண்டும். ஆயினும், அவர்களும் அப்பரீட்சையினூடாகப் பல்கலைக்கழகம் செல்லலாம் என்ற ஆர்வத்துடன் கடுமையாகப் படிக்கின்றனர். இப்படிப்பு முயற்சிகளாவன: திரும்பத் திரும்பக் கற்றல், மனனம் செய்ய முயலுதல், தனியார் போதனை நிலையங்களுக்குச் செல்லுதல், மாதிரி விடைகளை எழுதிப் பார்த்தல் என விரிந்து செல்லும். இவ்வாறான பரீட்சையை நோக்காகக் கொண்ட படிப்பு முயற்சிகளாவன உ/நி பாட ஏற்பாட்டின் உயர்ந்த (பிற) குறிக்கோள்களை மழுங்கடையச் செய்து விடுகின்றன என்பது பலராலும் முன்வைக்கப்படும் முக்கியவாதமாகும். மொத்தத்தில் முழுப் பரீட்சையும் பல்கலைக்கழக அனுமதி நோக்கி உருவாக்கப்படுவதாகவும் 94 சதவீதமான மாணவர்களுக்கு உபயோகமற்றதாகவும் (உண்மையில் Irrelevant ஆனதாகவும்) அமைந்துள்ளது என்ற கருத்தில் உண்மை உண்டு.

ஒவ்வொரு பாடத்துக்கும் ஒரு பாடத்திட்டம் (syllabus) உண்டு. அப்பாடத்திட்டத்தில் உள்ள பாட உள்ளடக்கத்தின் அடிப்படையில் பரீட்சை வினாக்கள் தயாரிக்கப்படுகின்றன. பாடத்திட்டங்களில் பல அலகுகள் உள்ளன. அவ்வலகுகள் ஒவ்வொன்றும் பாட அறிவையும் அப்பாடம் சார்ந்த பல எண்ணக்கருக்களையும் (concepts) கொண்டவை. பரீட்சைகளைப் பொறுத்தவரையில் அதிக பெறுமதியற்ற பாட உள்ளடக்கம் (content) தொடர்பான வினாக்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இதனால் பரீட்சையின் உண்மையான நோக்கங்கள் சிதறடிக்கப்படுகின்றன. பரீட்சையின் அடிப்படை நோக்கங்கள்ளாவன: ஒவ்வொரு பாடத்துக்கும் உரிய எண்ணக்கருக்களை மாணவர்கள் புரிந்து கொண்டார்களா என்பதைப் பரீட்சித்தல், அவ்வெண்ணக்கருக்களைப் பிரயோகிக்கும் திறன்களைப் பரீட்சித்தல், பாடத்துடன் தொடர்புடைய வேறு தகைமைகளைப் பரீட்சித்தல் என்பனவாகும். ஆனால், உ/நி பரீட்சைகள் பாட விடயத்தை மாணவர்கள் ஞாபகத்தில் வைத்துள்ளார்களா என்பதை மட்டுமே பரீட்சிப்பதாகத் தெரிகின்றது. இதன் காரணமாகவே மாணவர்கள் விரிவான முறையில் பரீட்சைக்கு ஆயத்தம் செய்ய வேண்டியுள்ளது; உள்ளடக்க விபரங்களை மனனம் செய்ய வேண்டியுள்ளது. இது உண்மையான கல்வியாக மாட்டாது. இதனால் தான் ஆசிரியர்கள் தொடர்ச்சியாகப் பயிற்சியையும் போதனையையும் (Coaching) வழங்க வேண்டியுள்ளது. இதனால், மாணவர்கள் அதிக புள்ளி பெறும் சாத்தியங்கள் உண்டு. எண்ணக்கருக்களைப் புரிந்து கொள்வதற்குப் பதிலாக ஏராளமான பாடவிடய விபரங்களை நினைவிலிருத்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. ஆசிரியரும் இதனைக் கருத்திற் கொண்டு முழுப் பாடவிடயத்தையும் கற்பித்து முடிக்க வேண்டியுள்ளது.

இப்பாட விடயம் முழுவதையும் கற்று முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மாணவர் செயற்பட வேண்டிய அவசியத்தை இப்போட்டிப் பரீட்சை உருவாக்குகின்றது. பரீட்சையில் தோல்வியடையலாம் என்ற பயமும்

அவர்களை நெருக்கடிக்குள்ளாக்குகின்றது. 2004 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒரு ஆய்வின்படி 31 சத வீதமான மாணவரின் பெரிய மனக்கவலை பரீட்சையில் தோல்வியடைவோம் என்ற பயமாகும்.

இன்று கிடைக்கின்ற வேலை வாய்ப்புகளில் 35 சதவீதமானவை தனியார் துறையைச் சேர்ந்தவை. மார்கா நிறுவனம் செய்த ஆய்வொன்றின்படி க.பொ.த நிலைக் கல்வியானது தனியார் துறையினரின் தேவைகளுக்குப் போதுமானவையாய் இல்லை (1992). தனியார் துறையினர் பிரதானமாகக் கோருகின்ற எதிர்பார்க்கின்ற திறன்களை வழங்கும் வகையில் பாடசாலைகளின் உயர்தரக் கல்விப் பாட ஏற்பாடு அமையவில்லை; பகுப்பாய்வு மனப்பாங்கு, காரணங் காணுந் திறன், நடைப் பிரச்சினைகளைத் தீர்க்க அறிவைப் பயன்படுத்தல், பிரச்சினை தீர்க்கும் சிந்தனை, புத்தாக்கச் சிந்தனை, படைப்பாற்றல், நாட்டின் சமகால சமூக, பொருளாதார நிலைமைகள் பற்றிய அறிவு, தலைமைத்துவ ஆற்றல், கோஷ்டியில் சிறப்பாகப் பணியாற்றல் (Team Work), தொடர்பாடல் திறன்கள், உற்பத்திச் செயற்பாடு பற்றிய விளக்கங்கள், ஆங்கிலம் என்றில்லாது தாய்மொழியிலாவது முறையாக உரையாடும் திறன்கள். இவையே தனியார் துறையின் எதிர்பார்ப்புகள் எனத் தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையொன்று (16 ஆவது அறிக்கை 2003) சுட்டிக்காட்டியுள்ளது. பொதுப் பரீட்சைகளில் சித்தி பெறுவதை நோக்காகக் கொண்டு அம்முயற்சிகளிலேயே தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும் பாடசாலை மாணவர்கள் இவ்வாறான திறன்களில் கவனம் செலுத்துவது எவ்வாறு?

சுருங்கக் கூறுவதாயின் இன்றைய க.பொ.த. உ/நி வகுப்புகளில் இடம் பெறும் கல்வி எதுவித தொழில் சார் திறன்களையும் வழங்குவதாயில்லை. பல்கலைக்கழக அனுமதி என்னும் நோக்கு இந்நிலையில் ஆக்கிரமிப்பு செலுத்துவதால் ஏனைய கல்விசார், தொழில் சார் நோக்கங்களுக்கு க.பொ.த உ/நி கல்வியில் இடமில்லை.

## மருத்துவ பீட அனுமதிகள்

இன்று கையாளப்படும் அனுமதி முறைகள் காரணமாக, மருத்துவ பீடத்தில் அனுமதிக்கப்படும் மாணவர்கள் ஒரு சில IAB பாடசாலைகளில் இருந்தே வருகின்றனர். இது பொறியியல் துறைக்கும் பொருந்தும் (பார்க்க அட்டவணை 1)

550 IAB பாடசாலைகள் விஞ்ஞான வகுப்புகளைக் கொண்டிருந்தாலும் அவற்றில் 50 வீதத்துக்கும் அதிகமான பாடசாலைகள் ஒரு மாணவரையாவது பல்கலைக்கழகத்துக்கு அனுப்புவதில்லை. அதாவது மாவட்ட அடிப்படையிலான அனுமதி இருந்தும் மாணவர்கள் சில குறிப்பிட்ட நகரப்பாடசாலைகளில் இருந்தே அனுமதி பெறுகின்றனர்.

> க.பொ.த உ/நி பரீட்சையை மறுசீரமைப்பது பற்றி இன்று சிந்திக்கப்படுகின்றது. பல்கலைக்கழகத்துக்குத் தேவையான இரு பாடங்கள். ஏனைய விஞ்ஞான. கலைத்துறைப் பாடங்களிலிருந்து ஒரு பாடம் என மூன்று பாடங்களைத் தெரிவு செய்ய அனுமதி அளித்தல், க.பொ.த. உ/நிலையில் தொடர் மதிப்பீட்டு முறையை அறிமுகம் செய்து மாணவர்களின் பல்வேறு தகைமை வளர்ச்சிக்கு வாய்ப்பளித்தல். இறுதிப் பரீட்சையானது பாட விடயத்துக்கு அப்பால் அதன் அடிநிலையாக அமையும் எண்ணக்கருக்களைப் பரீட்சித்தல் போன்ற ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1**

1. விஞ்ஞான A/L வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகள் மொத்தம் 550
2. மருத்துவத்துறையில் (உயிரியல் விஞ்ஞானத் துறையில்) அனுமதி பெறும் மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் 508
3. மருத்துவ பீடத்துக்கு இறுதியில் மாணவர்களை அனுப்பும் பாடசாலைகள் 175
4. பௌதீக விஞ்ஞானத்தில் அனுமதித் தகுதிபெறும் மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் 472
5. பொறியியல் பீடத்துக்கு இறுதியில் மாணவர்களை அனுப்பும் பாடசாலைகள் 206

தமிழ் மாவட்ட IAB பாடசாலைகள் அடுத்த அட்டவணையில் தரப்பட்டுள்ளன. க.பொ. உ/நி கல்வியின் தராதர மேம்பாட்டு நடவடிக்கையில் ஈடுபடும் கல்வி அதிகாரிகள் கருத்திற் கொள்ள வேண்டிய தரவுகள் இங்கு தரப்பட்டுள்ளன. விஞ்ஞான வகுப்புகளைக் கொண்ட 50 சதவீதமான பாடசாலைகளில் தராதர மேம்பாடு தேவை என்பதை அட்டவணை (2) எடுத்துக் காட்டுகின்றது.

### க.பொ.த உ/நி கல்வி பற்றிக் கூறப்படும் வேறு குறைபாடுகள்

* பல்கலைக்கழகத்தில் பயில உள்ள பாடங்களுக்கு ஒத்த பாடங்களையே உ/நி மாணவர்கள் தெரிவு செய்கின்றனர். இதனால் பாடசாலைக் கல்வியின் ஒரு தொடர்ச்சியாகவும் நீட்சியாகவுமே பல்கலைக்கழக கல்வி அமைய நேரிடுகின்றது.

* க.பொ.த உ/ நி வகுப்புக்குரிய பாடங்களிலும் (52 பாடங்கள்) வகுப்புக்குரிய பாடங்களிலும் (52 பாடங்கள்) ஒரு சீர்த்தன்மை இல்லை; பாடங்களுக்கான வினாத்தாள்களின் தொகையிலும் ஒவ்வொரு பாடத்துக்கும் ஒதுக்கப்படும் பரீட்சை நேரத்திலும் இந்த ஒரு சீர்த்தன்மையைக் காண முடியவில்லை.

- புவியியல் பாடத்துக்கு மூன்று வினாத்தாள்கள்; ஒவ்வொன்றுக்கும்

| அட்டவணை 2 | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் மாவட்டங்கள் | ப. கழக அனுமதி பெற்ற மாணவர் களைக் கொண்ட பாடசாலைகள் | | ப. கழகத்திற்கு மாணவர்களை அனுப்பிய பாடசாலைகள் | |
| | உயிரி. விஞ். | பௌ. விஞ். | மருத் துவம் | பொறி யியல் |
| 1. யாழ்ப்பாணம் | 30 | 43 | 11 | 13 |
| 2. மன்னார் | 05 | 06 | 03 | 02 |
| 3. வவுனியா | 04 | 04 | 02 | 02 |
| 4. கிளிநொச்சி | 05 | 05 | 02 | 03 |
| 5. முல்லைத்தீவு | 04 | 03 | 04 | 02 |
| 6. மட்டக்களப்பு | 14 | 11 | 05 | 06 |
| 7. திருகோணமலை | 14 | 10 | 05 | 05 |
| 8. அம்பாறை | 21 | 16 | 08 | 07 |
| மொத்தம் | 97 | 89 | 40 | 40 |

மூன்று மணித்தியாலம்;

- பௌதீக, உயிரியல் விஞ்ஞானம் வினாத்தாள் 1, இரண்டு மணித்தியாலம் 60 வினாக்கள்

- மற்ற பாடங்களுக்கான 1 ஆம் வினாத்தாள்களுக்கு மூன்று மணித்தியாலம்

இத்தகைய பல குறைபாடுகள் காரணமாகத் தற்போது; க.பொ.த உ/நி பரீட்சையை மறுசீரமைப்பது பற்றி இன்று சிந்திக்கப்படுகின்றது, பல்கலைக்கழகத்துக்குத் தேவையான இரு பாடங்கள், ஏனைய விஞ்ஞான, கலைத்துறைப் பாடங்களிலிருந்து ஒரு பாடம் என மூன்று பாடங்களைத் தெரிவு செய்ய அனுமதி அளித்தல், க.பொ.த. உ/நி யில் தொடர் மதிப்பீட்டு முறையை அறிமுகம் செய்து மாணவர்களின் பல்வேறு தகைமை வளர்ச்சிக்கு வாய்ப்பளித்தல், இறுதிப் பரீட்சையானது பாட விடயத்துக்கு அப்பால் அதன் அடிநிலையாக அமையும் எண்ணக்கருக்களைப் பரீட்சித்தல் போன்ற ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளின் அடிப்படையில் க.பொ.த உ/த கற்கை நெறி திரித்தியும் மாற்றியும் அமைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இது தொடர்பான கருத்தாடல்கள் தற்போது பல்கலைக்கழக சமூக வரம்புக்குள்ளேயே நடைபெற்று வருகின்றன. இந்த வரையறைக்கு அப்பால் பரந்த தமிழ் பேசும் சமூகம் இக்கருத்தாடல்களில் பங்கு கொள்ள வேண்டும் என்பது எமது வேண்டுகோள். தொழில் வாய்ப்புகள் சான்றிதழுக்கு முக்கியத்துவம் தருவதால் பரீட்சைகளை மையமாகக் கொண்டு பாடசாலைக் கல்வி திசை மாறிச் செல்கின்றது, என்ற இந்தக் கருத்தாக்கமானது அத் தொழில் வாய்ப்புகளுக்கான தகுதிகள் உடையவர்களை சான்றிதழ் பெற்ற வட்டத்துக்கு அப்பாலும் இருக் கலாம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.


இன்று சமூக கலாசார அரசியல் மற்றும் இலக்கியத்துறைகளில் காத்திரமான பங்களிப்பை செய்து வரும் பலர் இத்தகைய கருத்தாக்கத்துக்கு உதாரணங்களாக விளங்குகின்றனர் என்பதும் அதேவேளையில் உயர் தரமான சான்றிதழ்களைப் பெற்றோர் தமக்கு வழங்கப்பட்ட சமூக, அரசியல், அரசாங்க பாத்திரங்களை திருப்தியாக நிறைவேற்றவில்லை, என்ற சமூக கண்டனங்களும் உண்டு என்பதை கருத்திற் கொள்ள வேண்டுகிறோம். எனவே தான் Dore சமூக, அரசாங்க பாத்திரங்களுக்கான தெரிவுகளுக்கு சில மாற்றுத்திட்டங்கள் தேவை என்பதை வலியுறுத்தினார்.

இலங்கை வாழ் தமிழ் சமூகமானது கடந்த இரு தசாப்தங்களில் போராட்ட வயப்பட்டு அதன் செயற்பாடுகள் கல்வியை விடுத்து வேறு திசைகளில் திரும்பிச் சென்றமையால் அச்சமூகத்தில் ஒரு சான்றிதழ் பற்றாக்குறை இருப்பதை உணர முடிகிறது. ஆனால் இந்தப் பற்றாக்குறை ஆற்றல்கள், திறன்கள், அறிவு, சமூக ஈடுபாடு என்பவற்றின் பற்றாக்குறையை குறிப்பதாக கொள்ளக்கூடாது என்பதை Dore இன் கருத்தாக்கத்திலிருந்து நாம்பெற்றுக்கொள்ளும் தமிழ்ச் சமூகம் சார்ந்த ஒரு "பிரயோகக் கருத்தாக்கம்" இந்த ஒரு நியாயப்பாடு தமிழ்ச் சமூகத்தின் எதிர்கால மேம்பாட்டுக்கான மனித வளங்களை தேடுவதிலும் நாடுவதிலும் இந்தக் கருத்தாக்கம் உதவியாக அமையலாம்.

**ஆதாரம்: பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆவணங்கள், புள்ளி விபரங்கள்.**

## கல்வி மாநாடு

'கல்வி : ஒரு பன்முகப்பார்வை' என்னும் பொதுத் தலைப்பில் தமிழரின் கல்விப் பிரச்சினைகள், சவால்கள் மற்றும் வளர்ச்சி, மேம்பாடு பற்றிய கல்வி மாநாடு **2005 யூலை மாதம் 21ம், 22ம், 23ம்** திகதிகளில் **யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில்** நடைபெறுகிறது. இந்த மாநாட்டை 'அகவிழி'யும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையும் இணைந்து நடத்துகின்றன.




தலைப்பு
**நினைவாற்றலை வளர்த்தல்**
ஆசிரியர்
*சீதா சந்தசீலி சமரசிங்க*
பதிப்பு
மாசி 2005
பக்கங்கள்
viii + 128
ISBN 955-9429-65-5

# நினைவாற்றலை வளர்த்தல்

**மாணவர், ஆசிரியருக்கான ஒரு வழிகாட்டி நூல்**

*சீதா சந்தசீலி சமரசிங்க*

நினைவாற்றல் ஒரு செல்வம். அதனை எப்படித் தேடிக் கொள்ளலாம்? கற்றவற்றின் பெரும் பகுதி மறக்கப்பட்டு விடுகிறது. அதனை நினைவில் வைத்துக் கொள்வது எவ்வாறு? தற்காலத்தில் மனித மனங்களை உறுத்திக் கொண்டிருப்பவை இவையாகும்.
அந்த வகையில், திருமதி சீதா சமரசிங்ஹ அவர்களின் நினைவாற்றலை வளர்த்தல் என்னும் இந்நூல், நினைவாற்றலைப் பயிற்சி மூலம் வளர்த்துக் கொள்ளத் தேவையான செயற்பாடுகளையும் விளையாட்டுக்களையும் முப்பத்தொரு தலைப்புக்களில் முன்வைக்கின்றது.
சிங்கள மொழியில் உள்ள மூல நூல் தமிழிலும் தற்பொழுது வெளியிடப்படுகிறது.

***திருமதி சீதா சந்தசீலி சமரசிங்க:*** தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர் கல்வித் துறைப் பணிப்பாளராயும் கல்வி உளவியல் விரிவுரையாளராயும் பணியாற்றிய இவர் வான்துளிகள் நூலின் தொகுப்பாசிரியருமாவார்.

**விலை: 150.00**




தலைப்பு
**இலங்கையில் இந்து சமயம்**
ஆசிரியர்
**பேராசிரியர் சி. பத்மநாதன்**
பதிப்பு
2005
பக்கங்கள்
xxvii + 476
ISBN 955-9429-56-6

# இலங்கையில் இந்து சமயம்

**பேராசிரியர் சி.பத்மநாதன்**

இந்நூல் ஆதி காலம் முதலாக பொலநறுவைக் காலம் முடிவு பெறும் வரை இலங்கையில் இந்து சமயம் தொடர்பாக ஏற்பட்ட வளர்ச்சிகளைப் பற்றியது. இதில் ஆதி அநுராதபுர காலம், பிந்திய அநுராதபுர காலம், சோழர் ஆட்சிக்காலம், பொலநறுவைக் காலத்தில் அரசரும் ஆலயங்களும், பொலநறுவைக் காலத்தில் வணிக கணங்களும் கலாசாரமும், பொலநறு வைக்காலத்தில் கோயில்களும் படிமங்களும் ஆகிய 6 பிரிவுகளும் அதனுள் 19 அத்தியாங்களும் அடங்கியுள்ளன.

***சி. பத்மநாதன் :*** இலங்கையின் தலைசிறந்த வரலாற்றறிஞர்களில் ஒருவரான இவர் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளமாணிப்பட்டத்தையும் இலண்டன் பல்கலைக்கழகத்திற் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவராவார். நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் பல ஆய்வு நூல்களையும் வெளியிட்டுள்ளார். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

**விலை: 600.00**

# குமரன் புத்தக இல்லம்

*361 1/2, டாம் வீதி, கொழும்பு 12*
*தொ.பேசி : 242 1388,*
*கைபேசி : 071 410 3489,*
*தொலைநகல்: 242 1388*
*மின் அஞ்சல்:* kumbh@sltnet.lk


*3 மெய்கைவிநாயகர் தெரு*
*குமரன் குடியிருப்பு*
*சென்னை - 26*
*இந்தியா*
*தொ.பேசி: 2362 2680*

*இணையத் தளம்:* www.kumaranbook.com

**அகண்ட ஆழ்ந்த அறிவிற்காய்**

# GANDHI TOURS

## TOURS AND TRAVELS SERVICE



**24 HOURS SERVICE A/C & NON A/C VANS, CARS & BUSES**

Gandhi Lodge,
200, Galle Road,
Colombo 06.

Tel : 2 582729
2 360072
2 503598
0777 872156